# ஒரு வித்தியாசமான விளம்பரம்



துரைவி

ரூபராணி ஜோசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரு வித்தியாசமான விளம்பரம்

(சின்னஞ் சிறு கதைகள்)

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO
DATE: 2016/2017

C. M. C.
PUBLIC LIBRARY

ரூபராணி ஜோசப்

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO
DATE: 2016/2017

85, ஸ்ரீ இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை
கொழும்பு - 13. T.P : 331596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : ஆனி 1998

பதிப்புரிமை : ஆசிரியர்க்கு

விலை : 80/-

வெளியீடு : துரைவி பதிப்பகம்

அச்சிட்டோர் : பேர் ஃபெக்ட் பிரின்டர்ஸ்
130, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர.
கொழும்பு - 12.
தொலைபேசி : 433647

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO
DATE: 2016/2017

30453

வகுப்பு எண் கிக
29652 1940

32/50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | வாழ்த்துரை | i |
| | வாழ்த்துரை | iii |
| | முன்னுரை | v |
| | பதிப்புரை | xii |
| | உங்களோடு நான்... | xiv |
| | வாசக நெஞ்சங்கள் | xviii |
| 1 | அழகு | 1 |
| 2 | மறதி | 3 |
| 3 | மரப்புலி | 6 |
| 4 | பரீட்சை | 8 |
| 5 | சப்பாத்து | 11 |
| 6 | மண்பாசம் | 14 |
| 7 | அவசரம் | 17 |
| 8 | திவசம் | 19 |
| 9 | ஒரே ஒரு முத்தம் | 22 |
| 10 | தகுதி | 25 |
| 11 | இடம் பெயர்வு | 28 |
| 12 | மொட்டை | 32 |
| 13 | ஞானோதயம் | 35 |
| 14 | அப்பா தப்பே செய்ததில்லையா | 38 |
| 15 | விபச்சாரம் | 40 |
| 16 | தீர்மானம் | 43 |
| 17 | தாய்க்குத் தெரியாத உண்மை | 47 |
| 18 | கிரிக்கெட் | 49 |
| 19 | அண்ணி | 52 |
| 20 | ஆன்மாவின் ஓலம் | 55 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 எவ்வளவு பெரிய தப்பு 58
22 தாரத்தின் முன் தாய் 61
23 மூடியும் சோடியும் 64
24 வறுமைப் பூக்கள் 67
25 கவர் மாறிய கடி[illegible] 71
26 மெல்லத் திறந்த கதவு 75
27 இருட்டு 78
28 கட்டவிழாத மொட்டுக்கள் 80
29 அம்மா வந்தாள் 83
30 சொன்னது நீதானா...? 86
31 சாதி 89
32 ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து... 92
33 மனைவி 95
34 தாலி 99
35 மாறியது நெஞ்சம் 102
36 மதிப்பு 105
37 மகன் 108
38 ஒரு வித்தியாசமான விளம்பரம் 112
39 நாடகம் 114
40 நிபந்தனை 118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கலை இலக்கியம் மக்களுக்கானது. காலத்தால் அழியாத கலை இலக்கியங்களுக்கான மூல ஊற்றுக்கள் மக்களிடமே இருக்கின்றன.

அதனால்தான் தோழர் மா ஓ சேதுங் - "மக்களிடம் செல்லுங்கள் - மக்களிடம் எடுத்து, மக்களுக்கே கொடுங்கள் - மக்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்" என்று கலை இலக்கியவாதிகளுக்கு திசை காட்டினார்.

வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. கலை இலக்கியவாதிகள் தாம் வாழும் காலத்தை தம் படைப்புக்களில் பிரதிபலிக்கிறார்கள். வரும் காலத்துக்காக தாம் வாழும் கால சூழலை, தம் காலத்தில் வாழ்ந்த மக்களின் கோபங்களை, சோகங்களை, காதலை, வீரத்தை தம் இலக்கியங்களில் பதிவு செய்து தருகிறார்கள்.

தோழர் ரூபராணியின் இலக்கிய படைப்புக்களில் சமகால வாழ்வின் அவலங்களும் இருக்கின்றன: அழகுகளும் இருக்கின்றன.

படைப்பாளிகளை ஆண் - பெண் என்று பேதம் பிரிக்கத் தேவையில்லை. ஆனாலும் பெண்கள் நம் நாட்டில் எழுத்துலகில் மேலும் இடம் பிடிக்க வேண்டும் என்பது நம் விருப்பம்.

அதனால்தான் பெண் எழுத்தாளர்களை 'முரசு' ஊக்குவித்து வருகிறது: உற்சாகப்படுத்தி வருகிறது.

இன்றுவரை ரூபராணியை நான் நேரில் கண்டதில்லை. சிபாரிசுகளுக்கோ, தங்களுக்கு என்று ஒரு குறுகிய வட்டத்தை வைத்துக்கொண்டு பிரபலமாகக் காட்டிக் கொள்பவர்களுக்கோ 'முரசு' தளம் கொடுப்பதில்லை: களம் தருவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் ரூபராணியின் முகம் முக்கியமல்ல: கலை இலக்கிய அகம் முக்கியம்: அந்த அகம் வெளிப்படுத்தும் படைப்பின் தரம் முக்கியம் - அந்த முக்கியமான முக்கியங்கள் பொதிந்து கிடந்தமையால்தான் முரசிலும் அவர் படைப்புக்கள் களம் கண்டன: முரசின் முதுகெலும்பும், இரத்த ஓட்டமுமான வாசக நெஞ்சங்களில் தளம் கண்டன.

ஆயிரமாயிரம் வாசக நெஞ்சங்கள் தெரிவித்த பாராட்டுக்களே ரூபராணிக்கு உற்சாக மாத்திரைகள். தொடர்ந்து முயலுங்கள்: படைப்புக்களைத் தாருங்கள்!

நன்றி - வாழ்த்துக்கள்

என்றும் அன்புடன்,
என். அற்புதராஜா,
ஆசிரியர்
தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

மீன் பாடும் தேனாட்டில் பிறந்த திருமதி ரூபராணி அவர்களின் சேவையைப் பெற்றதென்னவோ மலைநாடுதான். கண்டியிலுள்ள நூறாண்டு கண்ட பெண்கள் கல்லூரியான நல்லாயன் மகளிர் கல்லூரியில் ரூபராணி அவர்கள் அளப்பரிய சேவையாற்றியவர். அவர் - பேச்சாற்றலிலும் எழுத்தாற்றலிலும் சிறந்தவர். இலக்கியம் அவர் உயிர் மூச்சு. ஆடல் பாடல் கலைகளில் வல்லவர். சகலகலாவல்லி என்று அவரை அழைப்பதே மிகப் பொருத்தம். எங்கள் கல்லூரியின் தமிழ்ச் சங்கம் அவர் வழிநடத்துகையில் பொலிவுற்றது. வளர்ச்சி பெற்றது. அவர் பணியாற்றிய காலத்தில் அவர் மேடையேற்றிய நாடகங்கள் பல. தாமே பிரதான பாத்திரங்கள் ஏற்று நடித்ததும் உண்டு. என்போன்ற (அக்காலத்து) மாணவியரிடம் இலக்கிய ஆர்வத்தை ஊட்டியதோடு, மாணவரிடையே 'இலை மறை காயாய்' கிடந்த தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து, அவர்கள் ஏற்றம் பெறவும் ஏணியாய் அமைந்தவர்.

'ஏணியும் தோணியும்' என்ற நூலை சிறுவர்க்காக அண்மையில் எழுதி, வெளியிட்ட அவர் உடல்நலம் பாராது, முழுமூச்சுடன் சமூக அவலங்களை வெளிக்கொணரும் நோக்குடன் 'தினமுரசில்' தொடர்ந்து பல சிறுகதைகளை எழுதி வந்துள்ளார். அவற்றை நூல் வடிவில் தொகுத்து வெளியிட இன்று முன்வந்துள்ளார். இம்முயற்சி தமிழர் மத்தியிலே விளங்கும் சமூக சீர்கேடுகளை அவர்கள் முன்வைத்து, சிந்தித்துத் திருத்தும் நோக்குடையது. 'எங்கே அப்பழுக்கற்ற சேவையுணர்வு காணப்படுகின்றதோ அங்கே ஆண்டவன் அருட் கடாட்சம் மிகவேயிருக்கும்' என்பது என் திடநம்பிக்கை. எனவே, அவர் இம்முயற்சியில் வெற்றி பெறுவார் என்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆயுளையும், நல்லாரோக்கியத்தையும் நல்கி, அவர் முயற்சி வெற்றிபெற அருள் பாலிக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். 'வளர்க அவர் முயற்சிகள். தொடர்க அவர் இலக்கிய சேவைகள்' என வாழ்த்துகின்றேன். இதைவிட என் ஆசிரியையான அவரை நான் என்ன சொல்லி வாழ்த்துவது?

திருமதி லலிதா நடராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஏணியும் தோணியும் என்ற தனது உருவகக் கதைத் தொகுப்பிற்கு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய சாகித்திய விருதை வென்ற ரூபராணி ஜோசப்பின் சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுப்பு இது.

எதிலுமே அவசரமும் இயந்திர வேகமும் கொண்ட நவீன உலகில், இன்றய பெரும்பாலான வாசகர்கள் நீண்ட கதைகளை வாசிப்பதில் தயக்கம் காட்டுகிறார் கள். இன்றய பத்திரிகைகளும் ஏனைய வெளியீடுகளும் அதிக பக்கங்களை நிரப்பும் இலக்கியப் படைப்புக்களை விரும்பிப் பிரசுரிப்பதில்லை. தமிழகத்திலிருந்து வெளிவரும் பிரபல சஞ்சிகைகள் கூட வாராவாரம் சிறிய கதைகளையே தேர்ந்தெடுத்துப் பிரசுரித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ரூபராணியின் 'ஒரு வித்தியாசமான விளம்பரம்' என்ற இத்தொகுப்பிலுள்ள கதைகள் தினமுரசில் வெளிவந்த போதே பெரும்பாலான வாசகர்களால் விரும்பிப் படிக்கப்பட்டவை: பாராட்டப்பட்டவை.

ரூபராணியின் கதைகளில் அன்றாடம் நாம் காணும் மக்களை, அவர்தம் பிரச்சனைகளை, மனஅவசங் களைக் காண முடிகிறது. கதாசிரியை கதைகளுக்கான கருக்களைக் கற்பனை உலகிலிருந்த பெற்று விடவில்லை. தமது வாழ்க்கை அனுபவங்களை, தாம் நேரில் கண்ட விஷயங்களை, கதைகளாக்கித் தந்துள்ளார். வாழ்க்கையின் சித்திரங்களை ஜீவனுடன் துடிக்கச்செய்து வாசகர் மனதிலே சிலிர்ப்புகளை, வருடல்களை ஏற்படுத்துகின்றார்.

சில கதைகள் சமூகத்தின் குறைபாடுகளைச் சாடுகின்றன. வேறுசில சமூகத்தின் நிறைவான அம்சங்களை முன்வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றய எரியும் பிரச்சனையான 'தமிழர் தம் பிரச்சினை' சில கதைகளில் கருப்பொருளாகின்றது. இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடந்தேடிப் போகவேண்டிய நிலையில், பார்வதி என்ற பெண் தான் பிறந்து வளர்ந்து ஆளாகிய மண்ணின் மேல் வைத்த பாசத்தாற் கட்டுண்டு 'எங்கேயோ போற உசிர் நா பொறந்த மண்ணில போகட்டும்' என்ற உறுதியுடன் அந்த மண்ணோடு தன்னை இணைத்துக்கொள்ளும் கதை 'மண் பாசம்', பரீட்சை எழுதிவிட்டு வீடு நோக்கிப் பயணஞ் செய்து கொண்டிருந்த சுந்தரி என்ற இளந்தளிர், இராணுவத்தின் சோதனை முகாமில் இறக்கப்பட்டு, மரணித்த பின்பும், இன்று வருவாள் நாளை வருவாள் என்று வழிமேல் விழிவைத்துக் காத்துக்கிடக்கும் தாயின் மன அவசங்களை 'தாய்க்குத் தெரியாத உண்மை' என்ற கதை தத்துருபமாகச் சித்தரிக்கின்றது. பொலிஸில் பிடிபட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பெண் ஜானுவைத் திருமணஞ் செய்யவிருந்த அவளது காதலனே 'தனக்குத் தெரியாது' என்று கூறித் தப்பித்துச் செல்லும் அவலத்தை காட்டுகிறது 'சொன்னது நீ தானா..' என்ற கதை. 'இடம் பெயர்வு', 'சாதி', 'மரப்புலி' ஆகிய கதைகளும் இவ்வாறே இன்றய இனப்பிரச்சனைக்கு முகம் கொடுக்கும் தமிழ் மக்களின் துன்பங்களைப் பேசுகின்றன.

மலையகத்தைப் பகைப்புலமாகக் கொண்ட கதைகளாக 'வறுமைப் பூக்கள்', 'சப்பாத்து' அகிய கதைகள் விளங்குகின்றன. மலையகச் சிறார்களது கல்வி முன்னேற்றத்திற்கு அவர்களது வறுமை எவ்வாறு தடையாகிவிடுகிறது என்பதை விளக்குகிறது 'வறுமைப் பூக்கள்'. 'தங்கராசு லயத்துப் பக்கமிருந்த ஆலமரத்தடியில் மல்லாந்து படுத்திருந்தான். அவன் கண்களில் வடிந்த நீர் கழுத்தை நனைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய புத்தகங்கள் அந்த மண்ணில் கிடந்து காற்றில் படபடத்தன.' என்ற வசனங்கள் வாசிப்போர் மனதையும் படபடக்க வைக்கின்றன. அந்தகாரம் புகுந்துகொள்கிறது. மலையகப் பெற்றோர்கள் சிலர் தமது பிள்ளைகளைப் படிக்க வேண்டிய வயதில் வேலைக்கு அனுப்பும் பொறுப்பற்ற தன்மையையும் அதனால் அந்தச் சின்னஞ்சிறிசுகள் படும் வேதனைகளையும் சோதனைகளையும், அந்தப் பிஞ்சு உள்ளங்களில் பொங்கும் ஆசைகள் நிராசைகளாகிப் போவதையும் 'சப்பாத்து' என்ற கதையிலே கண்டு நாம் மனம் வெதும்பகின்றோம்.

வேலை தேடி வெளிநாடுகளுக்குப் பெண்கள் செல்வது இன்று நம் நாட்டில் ஒரு சாதாரண நிகழ்வாகி விட்டது. அவ்வாறு செல்லும் தாய்மாரின் பிள்ளைகள் எவ்வாறெல்லாம் தாயன்புக்காக ஏங்குகின்றன: அப்பிள்ளைகளின் ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் எவ்வாறிருக்கும் என்பதனை 'அம்மா வந்தாள்' என்ற கதை துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இக்கதையோடு இணைத்துப் பார்க்கவேண்டிய மற்றொரு கதை 'ஞானோதயம்' என்ற தலைப்பிலமைந்த கதையாகும். இதில் வரும் காஞ்சனா என்ற பெண் அற்ப ஆசைகளுக்காக நாட்டைப் பிரிந்து, வீட்டைப் பிரிந்து, பந்தபாசங்களை மறந்து வெளிநாடு சென்ற பின் தனது மகளை நினைத்து ஏங்குவதும், அந்த நிமிஷமே பறந்துபோய் தனது மகளை அள்ளி அளைய வேண்டும் எனத் துடிப்பதும் வாசகர் மனதை உருகவைப்பதாய் அமைந்துள்ளன.

வயோதிப காலத்தில் தமது பிள்ளைகளால் உதாசீனப்படுத்தப்பட்டு நிராதரவாக விடப்படும் பெற்றோர்கள் படும் துன்பங்களையும் மன அவலங்களையும் 'திவசம்' 'மகன்' 'எவ்வளவு பெரிய 'தப்பு' அகிய கதைகளில் காண்கிறோம். பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டங்கள் அத்தனையையும் பிள்ளைகளுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டு அந்திம காலத்தில் அவதியுறும் நடேசன் என்ற பாத்திரம், " வீட்டைச் சீதன உறுதி எழுதினப்போ சீவிய உரிமை வைச்சு எழுதாதது எவ்வளவு பெரிய தப்பு?" எனப் பொருமுவது வாசிப்போரைச் சிந்திக்க வைக்கிறது.

ரூபராணியின் பெரும்பாலான கதைகளில், தனி மனித உணர்வுகள், அதன் தொடர்பாக ஏற்படும் உறவு முரண்பாடுகள் ஆகியவையே முதன்மைப்படுத்தப் படுகின்றன. 'மனைவி' என்ற கதையில் வரும் வினோதன், தனது மனைவியுடன் சண்டையிட்டு அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டு வேறொரு கிராமத்திற்கு மாற்றலாகிச் செல்கிறான். அங்கே அவன் சந்தித்த வயோதிபத் தம்பதியர் வாழும் இணைபிரியாத வாழ்வும், "புருஷனுக்கு மனைவி ஒரு நிழல்" எனத் தாத்தா கூறும் அறிவுரையும் அவனைச் சிந்திக்க வைக்கின்றன. அவன் மனந்திருந்தி மனைவியுடன் சேருகிறான். 'அவசரம்' என்ற கதையில், காதலியுடன் சல்லாபிப்பதற்காகத் தனது கடமையை மறந்து சென்ற டாக்டர் ஜெயபால், அதன் காரணமாகத் தனது ரத்தத்தின் ரத்தமாகிய சொந்தச் சகோதரனையே இழந்துவிடும் பரிதாபத்தைப் பார்க்கிறோம். 'அண்ணி' என்ற கதையில், தனது தமையனின் மனைவி அழகில்லாதவள் என்ற ஒரே காரணத்திற்காக அவளை வெறுத்தொதுக்கிய அகல்யா ஈற்றில் அவளது உள்ளத்தின் பேரழகைக் கண்டு மனங்கசிந்து உருகுவதைக் காண்கிறோம். நீண்ட கால நட்புடன் வாழ்ந்த இரு குடும்பங்களிடையே பிளவு ஏற்படுவதற்கு அந்தஸ்து காரணமாக அமைவதைத் 'தீர்மானம்' என்ற கதை காட்டுகிறது.

'தகுதி' என்ற கதையில் உயர்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருத்தி தன்னைத் தேடி வந்த ஏழைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைக் கண்டதும் தனது தோழியரை நோக்கி "எங்க வீட்ல வேலை பார்க்கும் ஆயா வந்திருக்கா, எங்க மம்மி டடி ஏதாச்சும் செய்தி அனுப்பியிருப்பா" எனக் கூறுவதைப் பார்த்ததும் நாம் அதிர்ந்து போகிறோம். 'தாரத்தின் முன் தாய்' என்ற கதையிலே, தாயின் பேச்சைக் கேட்டு மனைவியைக் கொடுமைப்படுத்திச் சாகடிக்கும் கணவனைப் பார்க்கிறோம். இவ்வாறே 'விபச்சாரம்' மெல்லத் திறந்த கதவு' 'ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து' 'கட்டவிழாத மொட்டுக்கள்' 'ஆன்மாவின் ஓலம்...!' 'மொட்டை' ஆகிய கதைகளும் தனிமனித உணர்வுகளையும் அதனால் ஏற்படுகின்ற உறவு முரண்பாடுகளையும் அடிநாதமாகக் கொண்டுள்ளன.

சமூகத்தில் நாம் காணும் போலி மனிதர் சிலர் கொள்கை, இலட்சியம், புரட்சி என்றெல்லாம் மேடை மேடையாகப் பேசிவிட்டுத் தமது சொந்த வாழ்க்கையைப் பொறுத்தவரை 'ஊருக்குத் தானடி உபதேசம், உனக்கல்லடி கண்ணே' என்ற தோரணையில் நடந்து கொள்வதை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது 'கவர் மாறிய கடிதம்'.

சமீப காலமாகப் பெண்நிலைவாதக் கருத்துக்கள் அடங்கிய படைப்புகள் பெண் எழுத்தாளர்களாற் படைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ரூபராணியின் கதைகளிற் சிலவும் பெண்ணிலை வாதக்கருத்துகளை முன்வைப்பவையாக அமைந்துள்ளன. 'தாலி' என்ற கதை அவ்வகையைச் சார்ந்த குறிப்பிடத் தக்க கதையாகும். "எந்தக் கயவனும் தாலி ஒன்றைக் கட்டுவதால் கணவன் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிடுகிறான். எந்த நிலையிலும் கணவன் என்று வந்தவனை ஏற்றுத் தன் வாழ்வை நசுக்கிக் கொள்ளப் பிறந்தவள் தான் மனைவியா?" எனச் சத்தியா என்ற பாத்திரத்தின் உள்ளக் குமுறலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவதன் மூலம் போர்க்கொடி உயர்த்துகிறார் கதாசிரியை. 'பரீட்சை' என்ற கதையில் வரும் புவனா என்ற பெண் தன் காதலன் தன் வாழ்க்கைத் துணைவன் ஆவதற்குத் தகுதியானவன் தானா எனப் பரீட்சித்துப் பார்த்து 'பெயிலா'கிவிட்ட அவனை உதறித் தள்ளிவிடும் புதுமைப் பெண்ணாகக் காட்சியளிக்கிறாள். !வித்தியாசமான விளம்பரம்' என்ற கதையில், பெண்களிடம் சீதனம் கேட்கலாம் என்றால், பெண்கள் ஏன் ஆண்களிடம் சீதனம் கேட்கக்கூடாது? எனப் பெண்ணிலைவாதக் கருத்துநிலையின் ஓர் கூற்றினை முன்வைக்கிறார் ரூபராணி.

நீண்ட காலம் ஆசிரியத் தொழில் பார்த்துத் தான் பெற்ற அனுபவங்களின் வெளிப்பாடாகவும் சில கதைகளைப் படைத்திருக்கிறார் கதாசிரியை. 'மறதி' என்ற கதையில், லலீதா ரீச்சர் தன் மகனிடம் கொடுத்த நூறு ரூபா நோட்டை மறந்து தனது மாணவியான மேரி என்ற ஏழைச் சிறுமி திருடியிருப்பாளோ எனச் சந்தேகப்பட்டதால் அவளின் எதிர்காலமே பாழாகிப் போவதை எடுத்துக் கூறி, சமூகத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள், ஏழைகள், எத்தகைய பிரச்சனைகளுக்கெல்லாம் முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என மனம் வெதும்புகிறார்.

சிறுகதைகளின் வடிவமைப்பு திட்டமாகவும் உறுதியாகவும் அழுத்தமாகவும் இருப்பதோடு நிறைவான அனுபவமொன்றினை வாசகனுக்குக் கொடுக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். குறுகிய வடிவில் சிறுகதை படைக்கப்படும் போது, சில இடர்ப்பாடுகள் தோன்றுவது தவிர்க்கமுடியாததே. இவற்றையும் மீறிக்கொண்டு ரூபராணியின் பல கதைகளில் நிறைவான அம்சங்களே பளிச்சென்று தெரிகின்றன. எளிமையும் அழகும் கொண்ட இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றொழுக்கான மொழி நடை கதைகளுக்கு எண்ணமும் வனப்பும் சேர்க்கின்றன.

தமிழர் வாழ் பிரதேசங்களான வடமாகாணம், கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம் ஆகிய பிரதேசங்கள் கதைகளின் பகைப்புலன்களாகின்றன. அப்பிரதேசங்களுக்கே உரித்தான பேச்சு மொழிகள் விரவ ரூபராணி தனது கதைகளைப் படைத்திருப்பதும் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மொத்தத்தில் ரூபராணி ஜோசப்பின் சிறுகதைகள் வாசிப்போர் மனதில் ஒரு சுகானுபவத்தைத் தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

19/7, பேராதனை வீதி, டாக்டர். தி. ஞானசேகரன்
கண்டி
09. 01. 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

திருமதி ரூபராணி ஜோசப் அவர்களுடைய இந்தச் சின்னஞ்சிறு கதைகள் "ஒரு வித்தியாசமான விளம்பரம்" என்ற தொகுதியை வெளியிட்டு வைப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

துரைவி பதிப்பகத்தின் மூலம் இதுவரை ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளேன். இது ஆறாவதும் வித்தியாசமானதும் கூட வளர்ந்து வரும் ஓர் எழுத்தாளரின் படைப்புமாகும்.

துரைவி பதிப்பகம் ஆரம்பித்து முதல் நூலாக மலையகச் சிறுகதைகள் அச்சில் இருந்த போது என்னைச் சந்தித்தார். அப்போது அவரின் முதல் நூல் ஏணியும் தோணியும் வெளியிட்டிருந்தார்கள். அந்த நூல் வெளியிடுவதில் தன்னுடைய அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட சிரமங்களையும் உரையாடிக் கொண்டிருந்த போது தெரிவித்ததுடன் "தினமுரசில்" வெளிவந்த கதைகள் என்னிடம் உள்ளது. அக்கதைகளை வெளியிடுவதற்குத் தங்களால் உதவ முடிந்தால் நல்லது என்று கேட்டுக்கொண்டார். அப்போது அவரிடம் இருந்த கதைகள் 18 தான். மேலும் சில கதைகள் வரட்டும் அதன் பிறகு ஆவன் செய்கிறேன் என்று உறுதி கூறினேன். அதன்படி தற்போது நாற்பது (40) கதைகளையும் துரைவி பதிப்பகத்தின் மூலம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நாற்பது கதைகளும் தினமுரசில் வெளிவந்தவை என்பது ஒரு சிறப்பு.

இலக்கியத்துறையில் பல்வேறு வடிவங்கள் உண்டு. அந்த வடிவங்களில் ஓர் உருவமே இந்தக் கதைகள். இந்த உண்மையைப் புரிந்துகொண்டுள்ளவன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினாலேயே சகோதரி ரூபராணி ஜோசப்பினது கதைகளை வெளியிட்டு வைக்க ஆவன செய்துள்ளேன்.

அட்டைப்படம் வரைந்த கலைஞர் ஓவியர் ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களுக்கு நன்றி. இதனை அழகாக அச்சிட்ட அச்சகத்தாருக்கும் எனது நன்றி.

கொழும்பு - 13. துரைவிஸ்வநாதன்
1.5.98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு நான்...

விருந்துண்டு முடிந்தபிறகு சாப்பாடு பிரமாதம் என்று வாய் நிறையச் சொல்லிப் போகும் கூட்டத்தைப் பார்க்கிறேன். நான் எழுதும் கதைகளைப் படிப்பவர்களும் இப்படிச் சொல்லவேண்டும் என்ற ஆதங்கம் அடிக்கடி என்னுள் எழுவதுண்டு. மனிதன் இன மத மொழிகளால் வேறுபட்டிருந்தாலும் அவனுக்காகவே கதைகள் சொல்லப்படுபவை. எனவே வாழ்க்கையின் நிகழ்வுகளைச் சிறு அளவில் படம்பிடித்துக் காட்டுவதுதான் சிறுகதை என்பதே என் கருத்து. ஒவ்வொரு கதையிலும் அதன் பின்னணியில் ஒரு 'நிலைக்களன்' இருக்கவேண்டும் என்பதும் என் உறுதியான நிலைப்பாடு.

நான் பாடசாலை மாணவியாய் இருந்தகாலத்தில் பத்திரிகைகளை ஆவலோடு புரட்டும் பழக்கம் எனக்கிருந்தது. அப்போதெல்லாம் என்னுடைய பெயரும் பத்திரிகையில் வரவேண்டுமென்ற ஒரே துடிப்பில் எதை எதையோ எழுதினேன்.

காலப்போக்கில் என் குழந்தைத்தனம் கரைந்து நான் காண்பவை, கேட்பவை, பழகும் மனிதர், வாழும் சூழல், பாவனைப் பொருட்கள் என்னைச் சிந்திக்கத் தூண்டின. எனக்குள் ஊமையாகிப் போன உண்மைகள், உணர்வுகள், உறுத்தல்கள், ஆத்திரங்கள், அநியாயங்கள், நியாயங்கள் கதைகளாய் கதாபாத்திரங்களாய் மாறின. சமூகமேம்பாட்டை என் கதைகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்பதே என் பேரவாவாகும்.

நான் எழுதிய கதைகள் படிப்பவர் மனதைப் பிடித்துக் கொள்ளவேண்டும். காற்றோடு கலந்துவிடாமல் நூல் வடிவம் பெறவேண்டுமென்று கவலைப்பட்டேன். அது... இலகுவான காரியமா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ...

இந்த நல்லவரை... இலக்கிய ஆர்வலரைத் தலைநகரில் சந்திக்கிறேன் முதல் முறையாக.

அவர் பெயர்...! "துரை விஸ்வநாதன்"

இவரை எனக்கு அறிமுகம் செய்தவர் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத் தலைவர் திரு. ஆர். ஏ. ராமன் அவர்களே. இறுதிவரை உழைத்த இவர் வாழ்க. நன்றிகள். துரை விஸ்வநாதன் அவர்களின் அன்பும் பண்பும் அகன்ற மனமும் என்னைப் பெரிதும் கவர்ந்த விஷயங்கள். எனது ஏணியும் தோணியும் நூலைப் பெரிதும் பாராட்டி ரூபாய் ஆயிரம் கொடுத்தார். எனது ஆக்கங்களில் அவருக்கிருந்த ஈடுபாட்டைக்கண்டு நெகிழ்ந்து போனேன். பேச்சுவாக்கில் நான் எழுதிய கதைகளை நூலாக்குவதில் உள்ள சிரமத்தை வெளிப்படுத்தினேன்.

எதுவித தயக்கமும் இன்றித் தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகத் துரை விஸ்வநாதன் அவர்கள் சொன்னபோது என் மனசில் 'பூமழை' என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

பின்னர் நான் கண்டிக்கு வந்து அவருடன் தொடர்பு கொண்டபோது அவர் எழுதிய வாசகங்கள்...
"மலையகத்தில் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்து வளம் பெற்றவன் என்ற முறையில் அம்மக்களுக்கு ஓரளவென்கிலும் முக்கியத்துவமளித்து உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட விரும்புகிறேன். இலட்சியம் உயர்ந்ததாக இருப்பது நல்லது. ஆனால் அதை அடையும் வழியும் நேர்மையாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து"

திருக்குறள் நினைவுடன் பலன் எதிர்பாராது உண்மையான எண்ணத்துடன் பல ஆண்டுகளாகச் செயல்படுகிறேன்"

அவருடைய இந்த வசனங்கள் என்னை வியப்பின் விளிம்புக்கே கொண்டு சென்றன.

சொல்லும் செயலும் ஒன்றுபட்ட இந்த மாமனிதரை எண்ணிப் பார்க்கிறேன்.

இவருடைய நல்ல மனம் என்முன் வைரமாய் ஒளிர்கிறது. நம்பிக்கை நட்சத்திரமாய்த் தெரிகிறது. பகட்டுக்கும் புகழுக்கும் அப்பாற்பட்ட அவருடைய மனிதம் பலருக்கு முன்மாதிரியாய் அமைகிறது. அமைதியும் அடக்கமும் இவருடைய அதி சக்திமிகு ஆயுதங்கள்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூற்றுக்கு இலக்கணமானவர். இந்த வல்லவர் நல்லவர் இலக்கியக் காவலராய் இருப்பது சாலப் பொருத்தமே. அவருக்கு முதற்கண் என் இதயபூர்வமான நன்றிகள் சொல்லிக் கரம் கூப்புகிறேன்.

ஆசைக்கொரு புத்தகம் 'ஏணியும் தோணியும்' என்று எண்ணிய எனக்கு அது தேசிய சாகித்தியப் பரிசைப் பெற்றுத் தந்து உற்சாகமூட்டியது. எனது இரண்டாவது புத்தகம் இதோ உங்கள்முன் இதழ் விரிக்கிறது. இதில் காணும் சிறுகதைகளின் பிறப்பிடம் 'தினமுரசு' என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். பல்லாயிரம் இதயங்களில் பவனி வரும் இப்பத்திரிகை என் எழுத்துகளை வரவேற்று வளர்த்தது என்பதையும் நான் மறந்துவிட முடியாது. இச்சிறுகதைத் தொகுதிக்கு வாழ்த்துரை வழங்கிய தினமுரசு ஆசிரியர் திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என். அற்புதராஜா அவர்களுக்கு நன்றி சொல்வதில் நிறைவு கொள்கிறேன்.

ஆரம்பத்தில் நான் தவழ்ந்து விளையாடிய பத்திரிகை வீரகேசரியாகும். இந்த வகையில் அதன் பிரதம ஆசிரியரான திரு. வி. தேவராஜ் அவர்கள் அறிமுக உரையை வழங்கியது மகிழ்ச்சியைத் தருகிறது. அன்னாருக்கு என் இதயங் கனிந்த நன்றிகள்.

பிரபல எழுத்தாளர் திரு. ஞானசேகரன் அவர்களைப் பற்றிச் சொல்கிறேன். மருத்துவத்துறையில் இருந்து கொண்டு எழுதுவது இவருடைய சாதனை. குன்றின் குரலாக ஒலிக்கும் இவருடைய நாவல்கள் வரலாறு படைக்கும் தரம் பெற்றவை. பாராட்டுவதும் ஊக்கமளிப்பதுவும் இவருடைய உயர்குணங்கள். இவர் உவந்து அளித்த முன்னுரைக்கு நன்றி சொல்லக் கடப்பாடுடையேன்.

மற்றுமொரு வாழ்த்துரையைத் தன் இதயத்தால் வரைந்த என் முன்னாள் மாணவி திருமதி. நடராஜா அவர்களுக்கு அன்புடன் நன்றி சொல்கிறேன்.

அவ்வப்போது என் ஆக்கங்களைப் பாராட்டியும் சீர்தூக்கியும் அபிப்பிராயங்கள் எழுதி என்னை உற்சாகப்படுத்திய வாசக நெஞ்சங்களை மறக்க முடியுமா? அவர்களுக்கும் நன்றி. அட்டைப்படம் வரைந்து உதவிய திரு. ஸ்ரீதர் பிச்சையப்பா அவர்களுக்கும் நன்றி.

என் கதைகள் படிப்போர் நெஞ்சத்தில் கொஞ்ச நேரமாவது சஞ்சரிக்குமாயின் சந்தோஷப்படுவேன்.
அன்பென்றுமுள்ள

ரூபராணி. ஜோசப்
258, பேராதனை வீதி
கண்டி
01. 5. 98.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசக நெஞ்சங்கள்

சகோதரி ரூபராணி,

நான் உங்கள் தினமுரசுக் கதைகளின் ரசிகை. தங்கள் கதைகளை ஆவலுடன் எதிர்பார்ப்பேன். தீர்மானம், திவசம், மகன் போன்ற கதைகள் எமக்குக் கண்திறப்பு. திவசம் கதை படித்ததின் பயனாக என் கணவருக்கு ஏற்பட்ட மனமாற்றம் ஒரு தாயின் உயிரைக் காத்தது என்று அறிந்தால் நீங்கள் சந்தோஷப்படுவீர்கள். ஏணியும் தோணியும் நூலில் தங்கள் விலாசம் கிடைத்ததில் மகிழ்ச்சி.

சிவபாக்கியம். கோணடிக்கா,
கம்பளை.

ரூபராணி ஜோசப் அவர்களே,

உங்கள் சிந்திக்கும் திறன் அபாரம். தங்கள் தினமுரசுச் சிறுகதைகள் நடைமுறைப் பிரச்சனைகளை எளிய தமிழில் அழகாகச் சித்தரிக்கின்றன. சமுதாய நன்மையை நோக்கி நடைபோடும் கதாபாத்திரங்களை உங்கள் கதைகளில் காணும்போது தங்களை வாழ்த்தாமல் இருக்கமுடியாது.

சுரஞ்சினி நிராஜ் டேவிட்
முதலியார் வீதி, மட்டக்களப்பு.

அன்புள்ள சகோதரி,

நீங்கள் இனாமாகத் தந்த ஏணியும் தோணியும் நூல் என்னை எவ்வளவோ சந்தோஷப்படுத்தியது. அருமையான கதைகள். தினமுரசுப் பத்திரிகையைத் தவறாமல் வாங்கிப் படிக்கும் வசதி எனக்கு இல்லை. தங்கள் சில கதைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பயனுள்ள கதைகள். நீங்கள் வாழ்க.

பாக்கியரட்ணம் (தையல் தொழில்)
கந்தானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபராணி அவர்களுக்குப் பிரியமுடன் வந்தனங்கள். தங்களது தினமுரசுக் கதைகளின் ரசிகை நான். உங்கள் அத்தனை கதைகளையும் அல்பம் தயாரித்துப் பாதுகாத்து வைத்துள்ளேன். நடைமுறை வாழ்க்கையில் நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களது பிரச்சினைகளை நேர் கொண்டு பார்க்கின்ற தன்மை, அந்நிகழ்வுகளின் யதார்த்தத்தையும் காட்சிகளையும் கருவூலமாக்கி ஆழமான மனித உணர்வுகளை ஆடம்பரமின்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் மிக அருமையாக வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு வரவேற்கத்தக்கது. பொருள் புதிது. உணர்த்தும் முறையும் புதிது. உயிர்த்துடிப்பான தங்கள் கதைகள் ஒவ்வொன்றும் சமுதாய அவலங்களின் சித்திரம். வெறும் பற்பனைகளாக எனக்குப் படவில்லை. இவை காலத்தின் பதிவுகளாகும். நல்லவேளை தங்கள் முகவரியைத் தந்த ஏணிக்கும் தோணிக்கும் நன்றி. உங்களைப் பார்க்க வரலாமா?

வஜீகா ஜெயினுலாப்டீன்
மடவல பசார் (கண்டி)

நீடூழி வாழ்க!

கலைச்செல்வி ரூபராணி ஜோசப் அவர்கள் தமது கலைத்துறையில் கொண்டுள்ள மனோரம்மியமான ஆர்வத்தையிட்டு வாழ்த்தாதோர் யாருமில்லை என்பதைவிடஅவருடைய ஆக்கங்களை ஆவலுடன் படிக்கக் காத்திருப்போர் அதிகம் என்பதே உண்மை. சமூக அபிவிருத்திப் பணியில் தன்னை அர்ப்பணித்து வருகின்ற எமது சமூகப் பொருளாதார (செட்டிக்) பயிற்சி நிலையத்தின் சமூகப்பணியில் எந்த வேளையிலும் பங்கெடுத்துக் கொள்ளும் ரூபராணி அவர்களை மறந்துவிட முடியாது. எமது பயணம் பத்திரிகைக்கும் தொடர்ந்து எழுதிவருகிறார். இவருடைய தினமுரசுக் கதைகள் சிந்திக்கத் தூண்டும் சிறந்த கருவூலங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல கலைச் செல்வியான ரூபராணி ஜோசப் அவர்கள் ஆற்றிவரும் மகத்தான கலைச்சேவை, சமூகசேவை நீடு வாழ, செட்டிக் நிறுவனம் சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் இதயங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

ஏ.சீ. எஸ். குரூஸ்
தமிழ்ப் பயிற்சிப் பொறுப்பாளர்
செட்டிக் நிறுவனம், கண்டி.

ரூபராணி ஆசிரியை அவர்களே,

எனக்கும் உங்களைப் போல் கதை எழுத ஆசை. கொஞ்சம் உதவி செய்வீர்களா? வானொலிக்கு எழுதினேன். பயனில்லை. உங்கள் தினமுரசுக் கதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஏன் தெரியுமா? எளிமையான நடை, விளங்கவைப்பதில் உங்களுக்குள்ள தனித்திறமை. உங்களை வந்து பார்க்கலாமா?

தாழ்மையுடன் மாணவன் ஞானசேகரன்
ஊன்னகல எஸ்ரேற், மடுல்கல.

அன்புச் சகோதரி,

நான் தினமுரசு ரசிகை. அதைத் திறந்ததும் உங்கள் கதை வந்திருக்கா என்றுதான் பார்ப்பேன். மகன், சாதி, அழகு போன்ற கதைகள் முகத்தில் அறைகிறாப்போல் படிப்பிக்கிற பாடம் பிரமாதம். நீங்கள் ஒரு ஆசிரியர் என்பதை நிரூபித்துவிட்டீர்கள்.

நசீறா அகமத்
மட்டக்குளி.

எழுத்தாளரும் பேச்சாளருமான ரூபராணி அவர்களே, உங்கள் சிறுகதைகளின் ரசிகை நான். பரீட்சை, இடம்பெயர்வு, தீர்மானம், மகன் ஆகிய கதைகள் யதார்த்தத்தைச் சித்திரிக்கின்றன. சமூகமேம்பாட்டுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களின் பங்களிப்பு பெறுமதி வாய்ந்தது. தங்கள் எழுத்துப் பணி தொடர என் வாழ்த்துக்கள்.

வி. ஜெயமாலினி
கண்டி.

ரூபராணி ஆசிரியை அவர்களுக்கு,

'அப்பா தப்பே செய்ததில்லையா' என்ற தங்கள் தினமுரசுக் கதையை என் போன்ற இளைஞர்கள் கட்டாயம் வரவேற்பார்கள். உண்மையும் அதுதானே. ஆனால் அப்பாமார் அதைப் படித்தார்களோ தெரியாது

ஒரு மாணவன்
திரித்துவக் கல்லூரி, கண்டி.

ஏணியும் தோணியும் ஆசிரியை ரூபராணி ஜோசப் கற்பனைத் திறன்மிக்க எழுத்தாளர் என்பதை நாடறியும். தினமுரசு வாரமலரில் வெளிவந்த அவருடைய சிறுகதைகளை வாசிக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அக்கதைகள் எளிமையான வடிவத்தில் கருத்தாழம் மிக்கவையாகவும், சிந்திக்கத் தூண்டுபவையாகவும் அமைந்திருந்தன. இப்படியான சிறுகதைத் தொகுப்புக்களை மேலும் மேலும் படைக்கவேண்டுமென்று வாழ்த்துவதுடன், தமிழ் கூறும் நல்லுலகம் இவற்றை வரவேற்று மிகுந்த பயனடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

Dr. ரஞ்சித் மகாதேவா. M.D.
South Side Hospital - U.S.A.

சமீபத்தில் ஏணியும் தோணியும் என்ற நூலை வெளியிட்டு எல்லோரின் பாராட்டுகளையும் பெற்ற ரூபராணி ஜோசப்பின் தினமுரசுச் சிறுகதைகளைத் தவறாது படிப்பவன் நான். இவர் ஆழச் சிந்திக்கும் ஒரு படைப்பாளி. வாழ்க்கையைப் பல கோணங்களில் உற்றுப் பார்த்தவர். எளியவர்களின் பிரச்சினைகளையும், பொதுமக்களின் உணர்வுகளையும் அப்பட்டமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து கொண்டவர். இவருடைய சிறுகதைகளைப் படித்தவுடன் அவரோடு தொலைபேசியில் விமர்சிக்கும் பழக்கம் எனக்குண்டு. "எனது கதைகளில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டுங்கள், நிறைவை நோக்கி நான் நடக்க உங்களது விமர்சனங்கள்தான் எனக்கு உதவும்" எனக் கூறும் ஒரு பண்பை இவரிடந்தான் நான் கண்டிருக்கிறேன். ஒரு சிறிய கருவைக் கொண்டு ஒரு சிறுகதையைச் சிறப்பாக நகர்த்திச் செல்லும் திறன் இவருக்குண்டு. இவருடைய சிறுகதைகள் ஒரு தொகுப்பு நூலாக வெளிவரவிருப்பதையறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். காலத்தால் கரையாத சிறப்பு வாய்ந்த கதைகள் நின்று நிலைக்கும் என்றும் பயன்படும். ரூபராணி அவர்கள் வாழ்க.

G. L. பாலரட்ணம்.
கிங்ஸ் வீதி, கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'துரைவி' வெளியீடுகள்

1

மலையகச் சிறுகதைகள்

*33 மலையக எழுத்தாளர்களின் கதைகள்*

2

உழைக்கப் பிறந்தவர்கள்

*55 எழுத்தாளர்களின் மலையகக் கதைகள்*

3

பாலாயி

*தெளிவத்தை ஜோசப்*

*மூன்று குறு நாவல்கள்*

4

மலையகம் வளர்த்த தமிழ்

*சாரல் நாடனின் கட்டுரைகள்*

5

சக்தீ பால - ஐயாவின் கவிதைகள்

*சக்தீ பாலையா*

6

ஒரு வித்தியாசமான விளம்பரம்

*ரூபராணி ஜோசப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு

"முடியாது முடியாது" இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு உரக்கக் கத்தினாள் உஷா.

"நீ என்னடி சொல்றே?" அம்மா ஆத்திரத்தோடு கேட்டாள்.

"எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கல..."

"பிடிக்கலியா...?"

"ஆமா பிடிக்கல! பிடிக்கல...!"

மாடியில் இருந்து இறங்கி வந்த சபேசன் "உஷா அங்கே என்ன கலாட்டா?" என்றார்.

அம்மா முந்திக்கொண்டாள். "உங்க மகளுக்கு இந்தக் கலியாணம் பிடிக்கலியாம்."

"ஏனாம்?"

"கறுப்பைக் கட்டிக்க யாருக்கப்பா பிடிக்கும்?" துணிச்சலோடு கேட்டுவிட்டாள் உஷா.

சபேசனின் மீசை துடித்தது. ஓங்கிய கையைக் கட்டுப்படுத்திக் கொண்டார். "இவளோட என்ன பேச்சு? யாரென்ன சொன்னாலும், இந்தக் கலியாணம் நடந்தே தீரும்." உறுதியாகச் சொன்ன சபேசன், வாசல் கதவைப் 'படீர்' என்று சாத்திவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

உஷா அறையில் தனியாக உட்கார்ந்து தன் வாழ்க்கையே நாசமாகிவிட்டது போல் அழுதாள். நேற்று தன்னைப் பெண் பார்க்க வந்த முரளியின் நிறம், தோற்றம் எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை. அருவருத்துக் கொண்டாள். யன்னலுக்கு வெளியே கரைந்து கொண்டிருந்த காகங்கள் இரண்டும் அவளுக்கு எரிச்சலூட்டின. அழகான ஒருவனைக் காதலிக்க வேண்டும், கலியாணஞ்செய்து ஊர்கோலம் போக வேண்டுமென்ற ஆசைகள் தூசுகளாய் காற்றில் பறக்குமென்று உஷா எதிர்பார்க்கவில்லை.

உஷா சபேசனின் ஒரே பெண். இரசாயனப் பரிசோதனை ஆய்வு கூடமொன்றில் வேலை பார்ப்பவள். சிவந்த மேனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக் கருவிழி விழிகளும் அவளின் அழகுக்கு மெருகு. உஷாவுக்குப் பார்த்த நாலு வரன்களும் வரதட்சணைக் கெடுபடியில் தட்டிப்போயிற்று. சமயத்தில் கைகொடுத்து உதவியவர் மாதா கோயில் பாதிரியார் லோரன்ஸ்.முரளிக்குப் பெற்றவர்களைத் தெரியாது. பாதிரியாரின் வளர்ப்பு மகன். அவனுக்கு அறிவூட்டி ஆளாக்கி உத்தியோகம் பார்க்க வைத்தவரும் அவரே.

"முரளி தங்கமான பையன். வரதட்சணை என்று எதுவுமே வாங்கமாட்டான். அடக்கமும் அன்பும் அவனோடு கூடப் பிறந்தவை. முரளியைக் கணவனாக அடையும் பெண் உண்மையிலேயே அதிஷ்டம் செய்தவள். அவன் ஆயிரத்தில் ஒருவன். அவனைப்பற்றி நானே புகழ்வது...?"

பாதிரியாரின் வார்த்தைகள் சபேசனுக்குக் கசக்குமா என்ன?

திருமண ஏற்பாடுகள் எதுவித தடங்கலுமின்றி நடந்து கொண்டிருந்த சமயம் அந்தத் துயர சம்பவம் சபேசன் குடும்பத்தை நிலைகுலைய வைத்தது. இரசாயனப் பரிசோதனைக் குழாய் வெடித்துப் பறந்ததில் உஷாவின் அழகிய முகத்தில் திட்டுத் திட்டாய் எரிகாயங்கள்: கருகிய தோல்கள்...

கண்ணாடியில் தெரிந்த முகம் உஷாவுக்குத் திகிலூட்டியது. இந்த முகம் தானா அந்த முகம்...? அவளால் நம்பமுடியவில்லை. வேதனையின் விளிம்பில் உஷா வெந்துகொண்டிருந்தாள்.

"ஜீசஸ்... முரளியைப் பழித்ததுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா?"

கழுத்துச் செயினில் தொங்கிய சிலுவையை இறுகப் பற்றிக்கொண்டு விம்மினாள் உஷா.

முரளி சபேசனிடம் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் ஆலயமணியாய் ஒலித்தன.

"முகம் மாறிப்போனால் என்ன? நான் மனம் மாறமாட்டேன்!"

கண்களில் நீருடன் உஷா நிமிர்ந்தாள்.... அழகின் அர்த்தம் அவளுக்குப் புரிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதி

அந்தப் பிரபல கல்லூரி மணி ஒலித்து இடைவேளை முடிந்ததை அறிவித்தது.

இரைச்சலும் கூச்சலும் அடங்கி அமைதியாக மாணவிகள் வகுப்பறையை நோக்கி வரிசையாக விரைந்தனர்.

லலிதா ரீச்சர் பரபரப்புடன் ஏழாம் ஆண்டு வகுப்பறைக்குள் நுழைந்தாள். அந்த முகத்தில் .கலவரம் பௌடராய் அப்பிக் கிடந்தது. வகுப்பறையில் நிறைந்திருந்த மாணவிகள் மதிய வணக்கம் சொன்னார்கள் லலிதா ரீச்சருக்கு. பதில் வணக்கம் ரீச்சர் சொல்லாமல் விட்டது மாணவிகளை வியப்பிலாழ்த்தியது.

"எல்லோரும் இப்படியே நில்லுங்கள். படிப்பைவிட நல்ல பழக்கம் முக்கியம். என்னுடைய கைப்பையிலிருந்த நூறு ரூபாயைக் காணவில்லை. இந்த வகுப்பு மேசைமீதுதான் என் கைப்பையை வைத்தேன். யார் எடுத்தது? உண்மை சொல்லும் வரை உங்களை உட்காரவிடமாட்டேன்." லலிதா ரீச்சரின் வார்த்தைகளில் அனல் கக்கியது.

புத்தகங்கள் பைகள் எல்லாம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மாணவிகள் ஒருவரை ஒருவர் பார்த்து மிரள மிரள முழித்தனர். அவர்களின் முகத்தில் அச்சம் தீவிரமாய்ப் பரவியது. "நாங்க எடுக்கல்ல ரீச்சர்..." வாய்கள் முணுமுணுத்தன.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. பாடம் எதுவும் இடம் பெறவில்லை. "இப்போ எல்லாரும் உட்கார்ந்து யோசித்து உண்மையைச் சொல்லுங்கள். நான் ஒன்றும் பண்ண மாட்டன்" ரீச்சரின் குரலில் அமைதி வெளிப்பட்டது.

சடுதியாக ஒரு சலசலப்பு. எல்லோருடைய கண்களும் ஒரு முகத்தை மொய்த்தன. அந்த முகம் மேரியினுடையது. பழுப்பேறிய ஒட்டுப் போட்ட சீருடை. காய்ந்து வரண்ட இரண்டு குட்டிப் பின்னலில் சோர்ந்து தொங்கிய நீல றிப்பன்கள். மேரியின் அகன்ற விழிகள் அத்தனை முகங்களையும் பார்க்க முடியாமல் அங்கும் இங்கும் தவித்தது. "மேரி நீ எடுத்தியா?" திடீரென்று ரீச்சர் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நா எடுக்கல்ல ரீச்சர்"

"ரீச்சர் இவ பொய் சொல்றா"சக மாணவிகள் சத்தமிட்டனர். "உண்மை ரீச்சர் நான் எடுக்கவேயில்ல" மேரியின் குரல் உடைந்து விம்மியது.

"மேரியின்ர அப்பா ஒரு கடையில களவெடுத்து, மறியலுக்குப் போனவராம் ரீச்சர்". கமலினி புதையல் கண்ட உற்சாகத்துடன் சொன்னாள்.

மேரியின் விழிகளில் வழிந்த நீர் அவள் சட்டைக் கொலரை நனைத்தது. "ரீச்சர் நான் எடுக்..கல்..ல" என்று திரும்பத் திரும்ப அதையே சொல்லியழுதாள் மேரி.

"சும்மா கேட்டால் உண்மை வராது. பிறின்சிப்பலிடம் பதிலைச் சொல்" என்று காரமாகக் கூறிய ரீச்சர் பள்ளிக்கூடம் விட்டதும் ஏனையோர் வீட்டுக்குப் போகலாம் என்று அனுமதி கொடுத்து மேரியை மட்டும் பிறின்சிப்பல் ஆபீசுக்குக் கூட்டிச் சென்றாள்.

பிறின்சிப்பல் பஞ்சலிங்கம் மூக்குக் கண்ணாடியைத் துடைத்து மறுபடியும் போட்டுக் கொண்டார். மேரியின் வறுமைக் கோலம் அவர் கண்ணில் அப்பட்டமாய்த் தெரிந்தது. அவள் தன் கைவிரல்கள் ஒவ்வொன்றையும் முறித்தபடி நின்றாள். அவள் கன்ன மேடுகளில் கண்ணீர் உலர்ந்திருந்தது.

"மேரி... திருடுவது தப்புத்தானே? அந்த நூறு ரூபாவை எங்கேயாவது ஒளிச்சியா? மெதுவாக அன்பாகக் கேட்டார் பிறின்சிப்பல்.

அவள் தலையைப் பலமாக அசைத்துத் தான் எடுக்கவில்லை என்று உறுதியாகச் சொன்னாள். "நீ நாளக்கி உன் அம்மாவோடு தான் வரணும் புரியுதா?" என்று உரத்துக் கூறியவர் மேரியை வீட்டுக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

லலிதா ரீச்சர் வீடு போய்ச் சேரும்போது மணி ஐந்தை நெருங்கிவிட்டது. அவளுடைய மகன் ராகுலன் அடுத்த வீட்டு ஜயந்தவுடன் விளையாடப் போயிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகுலனுடைய உடைகளை அள்ளிக்கொண்டு குளியலறைக்குள் போனாள். ஒவ்வொரு கால் சட்டையாகப் புரட்டியவளுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. அவள் தலையில் யாரோ ஓங்கி அடித்தது போல் இருந்தது. ராகுலனின் நீலக் காற்சட்டைப் பையுள் ஒரு நூறு ரூபாய் எட்டிப் பார்த்தது. புத்தம் புதிய நோட்டு நாலாக மடிந்து கிடந்தது.

லலிதா ரீச்சர் பதட்டப்பட்டவளாய் ஐயந்த வீட்டுப்பக்கம் நின்று அவசர அவசரமாய் ராகுலை அழைத்தாள். அவன் வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்தான். "என் ஹான்ட்பாக்கிலிருந்த நூறு ரூபாயைக் காணல்லியே நீ எடுத்தியா?" லலிதா ரீச்சரின் குரல் நடுங்கியது.

"நான் எடுக்கல்ல மம்மி"

"நீ எடுக்கவே இல்லியா?"

"ப்றொமிஸ் மம்மி நான் எடுக்கல்ல"

"ராகுல் உண்மையைச் சொல். உன்ர கால்சட்டைப் பொக்கற்ல நூறு ரூபாய் எப்படி வந்தது?" கேள்வியில் கோபம் கொதித்தது.

"அது மம்மி காலையில நீங்க ரியூஷன் பீஸ் கட்டச் சொல்லித் தந்த காசு. சிவராம் சேர் இண்டக்கி வரல. அந்தக் காசுதான் இது" ராகுல் ஆச்சரியத்துடன் தாயைப் பார்த்தான்.

"ஓ. மை காட்" ரீச்சர் அலறினாள்.

மறதி அவளைச் சவுக்கால் அடித்தது. மேரியின் கண்ணீர், லலிதா ரீச்சரின் இதயத்தை வாளாக அறுத்தது.

"சே... என்ன மறதி எனக்கு." எவ்வளவு சீக்கிரம் ஏழைகளைச் சந்தேகம் விழுங்குகிறது? மேரியின் வாயிலிருந்து வந்த சத்தியம் தோற்றுப் போனதுக்கு வறுமைதான் காரணமா?

வழமைபோல் காலை மலர்ந்தது. இன்று மேரிக்காகப் பாடசாலைக்கு ஓடுகிறாள் லலிதா ரீச்சர். அந்த வகுப்பில் மேரியின் இடம் காலியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரப்புலி

அறை முழுவதும் உடுபுடவைகள், புத்தகங்கள், போட்டோ அல்பங்கள் அனைத்தும் அலங்கோலமாகச் சிதறிக்கிடந்தன. ஊசிமுனையாய்க் குத்தும் குளிரிலும் மூர்த்தி மாஸ்டரின் உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. அந்த அறையில் அவர் நடந்து நடந்து களைத்தவராய் நிலத்தில் முகம் குப்புறக் கிடந்த டிரங்குப் பெட்டியை நிமிர்த்தி அதன் மேல் உட்கார்ந்தார். அவர் முகத்தில் வடிந்த வியர்வை வாயில் உப்புக் கரித்தது. வேட்டித் தலைப்பால் முகத்தைத் தேய்த்துத் துடைத்துக் கொண்டார்.

சற்று நேரத்துக்கு முன்னால் நடந்து முடிந்த அந்தப் பயங்கர நாடகத்தை நினைவுத் திரையில் போட்டுப் பார்த்தார் மூர்த்தி மாஸ்டர். 'செக்கிங்' என்று நுழைந்த பொலிசார் அறையில் இருந்த எல்லாப் பொருட்களையும் அள்ளித் தரையில் வீசினர். போட்டோ அல்பத்தைச் சல்லடை போட்டவர்கள் அதிலிருந்த புகைப்படம் ஒன்றைக் காட்டி மூர்த்தியையும் மாலதியையும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடைந்தெடுத்தனர். அவர்கள் கொடுத்த எந்த விளக்கத்தையும் ஏற்கப் பொலிசார் மறுத்துவிட்டனர்.

மூர்த்தி மாஸ்டரின் நினைவு மூன்று ஆண்டுகளைப் பின்னோக்கித் தாவியது. அவர் நாவலப்பிட்டிப் பாடசாலை ஒன்றுக்கு மாற்றலாகி இருந்தார். இடத்துக்குப் புதியவரானாலும் அங்கே ஸ்ரூடியோ நடத்தும் சுந்தரம், மூர்த்தி மாஸ்டரின் பாலிய நண்பனாயிருந்ததில் மிகுந்த சந்தோசப்பட்டார். ஓய்வுப் பொழுதில் சுந்தரத்திடம் போவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அன்றும் வழமைபோல் நண்பனின் ஸ்ரூடியோவுக்குச் சென்ற மூர்த்தி மாஸ்டர் கண்ட காட்சி அவர் இதயத்தை வருடியது. அழகும் சாந்தமும் ஒரு கலவையாக வடிவெடுத்த இளம் பெண் ஒருத்தி மரத்தால் செதுக்கிய புலியைக் கட்டியணைத்த வண்ணம் போட்டோவுக்குப் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தாள். இதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி மாஸ்டர், அந்தப் பெண்ணே தனக்கு மனைவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். செயலிலும் இறங்கினார். சுந்தரத்தின் உதவியுடன் மூர்த்தி மாஸ்டர் தான் விரும்பியபடியே மாலதியைக் கரம் பற்றினார்.

அந்த இனிய நாளுக்குக் காரணமாக அமைந்த நினைவுச் சின்னந்தான், பொலிஸ் கைப்பற்றிய அந்தப் புகைப்படம். புகைப்படக் கண்காட்சியில் முதற்பரிசைத் தட்டிக்கொண்ட படமும் அதுதான். அப்போது மூர்த்தி மாஸ்டருக்குச் சுவாரஸ்யமாக இருந்த அனுபவம் இப்போது சித்திரவதையாக மாறுமென்று யார் கண்டது? பொலிஸ் கண்களுக்கு மரப்புலி நிஜப்புலியாகத் தெரிந்ததோ என்னவோ, மாலதி பெண்புலியாகி, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள் என்பது உண்மையாகிவிட்டது. மூர்த்தி மாஸ்டர் அழுது அழுது அப்படியே மயங்கிப் போனார் என்பதற்கு நான்கு சுவர்களுந்தான் சாட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சை

"**ஆ**னந்த், நான் வேலையை ரிசைன் பண்ணிட்டேன். வேலைக்கு குட்பை. கல்யாணத்துக்கப்புறம் என் கணவனைக் கவனிக்கிறதுதான் என்னோட வேலை". குழந்தையைப் போல் குதூகலித்துச் சொன்னாள் புவனா.

புவனா சொன்ன செய்தி ஆனந்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். அவனுடைய முகத்தில் ஆத்திரம் அமைதியாக நிழலாடியது: ஆனாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல்,

"நிஜமாவா?" என்றான் சாதாரணமாக.

"நிஜமேதான்!"

"என்ன வெளயாடறியா?"

"வெளயாட்டில்ல: உண்மையைத்தான் சொல்றேன்!" ஆனந்தின் தலையை அவள் தளிர் விரல்களால் கோதினாள். அவனுக்கும் அவளுக்கும் கலியாணம் ஆக இன்னும் ஒரு மாதம் தான் இருந்தது. அவர்கள் இருவரும் காலிமுகக் கடற்கரையில் ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்தார்கள். ஆனந்தும் புவனாவும் வெவ்வேறு கம்பனியில் வேலை பார்ப்பவர்கள். தற்செயலாக இவர்கள் இருவரும் சங்கீத சபா ஒன்றில் சந்தித்து நட்பாகி, காதலாகி கனிந்து, கலியாணம் வரை வந்துவிட்டது தெரிந்த விஷயம். இவர்கள் இருவருக்கும் சொந்த பந்தம் இல்லாதது பெரிய பொருத்தம். இதனால் பதிவுத் திருமணம் செய்து கதிரேசன் கோயிலில் மாலை மாற்றிக் கொள்வதாக இருந்தார்கள்.

ஆனந்தின் மௌனத்தைப் புவுனாவால் தாங்க முடியவில்லை.

"என்ன ஆச்சு உங்களுக்கு?" அவன் காதைப் பிடித்துச் செல்லமாகத் திருகினாள்.

ஆனந்த் எங்கோ வெறித்துப் பார்த்தான். அவன் வாய் மட்டும் "நீ உண்மையாகவே வேலைய விட்டிட்டியா?" என்று மீண்டும் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனா சலங்கை ஒலியாய் கலகலவென்று சிரித்தாள்.

"ஆமா விட்டுட்டேன். அதற்கென்ன இப்போ? என்னைப் பெத்தவங்க எனக்குப் பதினெட்டு வயசாய் இருந்தப்போ ரயில் விபத்தொன்றில் இறந்து போனாங்க. அப்புறம்... எனக்கு எல்லாமாய் இருந்து காப்பாத்தியது இந்த வேலை ஒண்ணுதான்." புவனா பெருமூச்சுவிட்டாள்.

"அப்போ ஏன் வேலையை விட்டே?" ஆனந்த் அவசரமாகக் கேட்டான்.

"அப்போதான் பிரபல கம்பனி மனேஜரைக் கலியாணம் பண்ணிக்கப் போறேனே. இத்தனை வருஷமும் உழைச்சு அலுத்தே போச்சு. ஒண்டியாய் இருந்த இயந்திர வாழ்வு சலிச்சுப் போச்சு. ஒரு மாறுதல் வேண்டாமா? உங்களுக்கு வகை வகையாய் சமைச்சிப் போடணும். நீங்க வேலைய விட்டு எப்ப வருவீங்கன்னு வழிமேல விழிவச்சிக் காத்திருக்கணும்.'பசங்களா? உங்க அப்பா வரட்டும். வந்ததும், முதுகில ரெண்டு போடச் சொல்றன்' என்று என் பிள்ளைச் செல்வங்களை விரட்டணும்" புவனா கற்பனையில் மகிழ்ந்து போனாள்.

ஆனந்தின் ஆவேசம் அவளை நிலைகுலைய வைத்தது. "சீ, எவ்வளவு மட்டம் நீ? இரண்டு பேர் சம்பாதிச்சா வாழ்க்கையில் எவ்வளவு சுகங்களை அனுபவிக்கலாம்.எத்தனை வசதிகளை ஆக்கிக் கொள்ளலாம்." அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"ஆமா? அந்த சுகம், நான் தேடும் சுகங்களுக்கு ஈடாகுமா? வசதிக் குறைவுகளை வசதிகளாக்கி வாழ வேண்டும். அதுதான் சிறப்பு."

"எதிர்வாதம் பண்ணாதே! நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்க விரும்பிய காரணமே நீ நல்ல வேலையில் இருக்கிறாய்: கை நிறையச் சம்பாதிக்கிறாய் என்பதுதான்... புரிகிறதா?"

"அப்போ நீங்க என்னைக் காதலிக்கல்ல: என் வேலைய, என் சம்பளத்த காதலிச்சீங்க: அப்படித்தானே?" புவனாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் நீர் முட்டியது. ஆனந்த் குழப்பங்களோடு மௌனமாகப் போராடினான்.அவனுடைய விரல்கள் மணலை அளைந்து கொண்டிருந்தன. கடல் அலைகள் கரையைத் தொட்டு விளையாடுவது இப்போது அவனுக்கு வேடிக்கையாகத் தெரியவில்லை. தொண்டையைச் செருமினான். அந்தக் குளிர் காற்றிலும் அவன் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

"புவனா" அமைதியாக அவன் அழைத்தான். அவள் அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

"தயவுசெய்து நீ றிசைன் பண்ணின வேலையைத் திரும்பப் பெற முயற்சி பண்ணு. அல்லது வேறு வேலைக்கு ட்றை பண்ணு. அதுவரைக்கும் நமக்குக் கலியாணமே வேண்டாம்.சில்லறை ஆசைகளுக்காக ரூபாய்களை விட்டிடாதே!"

'ஆனந்த் ஒரு மொத்த வியாபாரி' என்று இப்போது புவனாவுக்குப் புரிந்துவிட்டது.

அவள் சிரித்தாள். பயங்கரமாகச் சிரித்தாள்.

"நான் இன்னும் வேலையை விடல்ல. சும்மாதான் ஒரு பரீட்சை வச்சேன். நீங்க அதில பத்து மாக்ஸ் கூட வாங்கல. நல்ல வேளை தலையோடு போறது தலைப்பாகையோடு போச்சு. அந்த வகையில் சந்தோஷப்படவேண்டியதுதான்." புவனா எழுந்துவிட்டாள். தன் உடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டு நடக்கலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பாத்து

சுப்பு தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தான். அவனுடைய அழுக்கேறிய ஒட்டுப்போட்ட உடைகள் அலங்கோலமாகக் கலைந்திருந்தன. "டேய் சுப்பு! ஓடாத நில்லுடா நில்லு" கத்திக் கொண்டு அவன் பின்னால் ஓடினாள் பொன்னுத்தாயி.

அவளால் சிறிது தூரம்தான் ஓட முடிந்தது. மேட்டு லயத்துப் பக்கமிருந்த வாண்டுகளெல்லாம் அவளை வேடிக்கை பார்த்தனர்.

பொன்னுத்தாய்க்கு மூச்சு வாங்கியது. அதற்குமேல் அவளால் சுப்புவைத் தொடர்ந்து ஓட முடியவில்லை. குளிர்காற்று சிலு சிலுவென்று அவள் முகத்தில் அறைந்தது. முந்தானையை இழுத்துக் கழுத்துவரை மூடினாள் பொன்னுத்தாய். "எங்க போயிடுவான்...எப்பிடியும் வீட்டுக்கு வந்துதானே ஆகணும்?" தனக்குத்தானே முணுமுணுத்தவள் லயத்தின் தொங்கல் வீட்டை நோக்கி விரைந்தாள். ஒண்ணாம் நம்பர் லயத்தில் கடைசிக் காம்பறாவும் திண்ணையும் அவளுக்குச் சொந்தம். சின்னமணியும் ரஞ்சிதமும் பொன்னுத்தாயின் வாரிசுகள். அழுக்குச் சட்டையும் பரட்டைத் தலையுமாக திண்ணைக்கட்டில் உட்கார்ந்திருந்தனர். ரஞ்சிதத்துக்கு நாலு வயது. மூக்கில் வடிந்ததைச் சட்டையை உயர்த்தித் துடைத்தவள் பொன்னுத்தாயைக் கண்டதும்,

"ஆத்தா பசிக்குது." என்று சிணுங்கினாள்.

"சுப்புவ கொழும்புக்கு அனுப்பாத ஆத்தா: எங்களுக்கு சுப்பு வேணும்!" ஏழு வயதுச் சின்னமணி விம்மியது.

எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் பொன்னுத்தாய் அடுப்பங்கரையில் றொட்டி தட்டிப் போடுவதில் முனைப்பாயிருந்தாள்.

சின்னமணியும் ரஞ்சிதமும் ஆத்தா சுட்டறொட்டி ஒன்றை ஆளுக்குப் பாதியாய் எடுத்துப் பங்கிட்டுக் கொண்டனர். பொன்னுத்தாய் அடித்த சிலையாக உட்கார்ந்திருந்தாள். சுப்புவின் ஞாபகம் நெஞ்சை அடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்து சினிமாப் பாட்டொன்றைச் சத்தமாகப் பாடியபடி வந்து சேர்ந்தான். அவன் பொன்னுத்தாய்க்குப் புருஷன். "என்ன நீங்க பாடுறீங்களா? இல்ல உள்ள போனது பாடுதா? பொன்னுத்தாய் ஏளனமாய்க் கேட்டாள்.

"சும்மா கெட புள்ள. அதெல்லாம் ஒண்ணுமில்ல." என்று சொன்னவன் மடியில் சொருகியிருந்த பூந்திச் சுருளை எடுத்து ரஞ்சிதத்தின் கையில் கொடுத்தான் மாரிமுத்து.

"ஆமா சுப்பு எங்க? அக்கம் பக்கம் பார்வையை ஓட்டினான் மாரிமுத்து. " என்ன புள்ள நாளைக்கி சுப்புவைக் கூட்டிக்கிட்டுக் கொழும்புக்குப் போறதானே?"

"அவனுக்கு இஷ்டமில்லீங்க: படிக்கிற புள்ளய ஏங்க வேலைக்கனுப்பணும்?" பொன்னுத்தாய் தன் வேதனையை வெளிப்படுத்தினாள்.

"வெபரம் புரியாமப் பேசாத தாயி! நம்ப முனியாண்டி இருக்கானில்ல - அவன் ஒரு நல்ல இடமாகப் பார்த்து கொழும்பில் பேசியிருக்கான். ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கிக் குடுப்பானாம். நம்ம பயலுக்கு நல்ல காலம் பொறந்திரிச்சி."

பொன்னுத்தாய் ஏக்கப் பெருமூச்சு விட்டுப் பார்வையை வெளியே மேயவிட்டாள். எங்கும் இருள் பரவியது. பண்டாரி வீட்டு நாயின் ஊளைச் சத்தம் விட்டுவிட்டுக் கேட்டது.

யாரோ பதுங்கிப் பதுங்கிக் காம்பராப் பக்கம் எட்டுவதை மாரிமுத்து கண்டு கொண்டான்.

"யார்ரா அவன்?"

"நான்தான் அப்பா!"

"யாரு சுப்புவா? வாடா ஏன் பதுங்கிறே?" சரேலென்று வந்து மாரிமுத்துவின் மடியில் சுருண்டான் சுப்பு.

"அப்போய் நா கொழும்புக்குப் போகல. படிக்கப்போறன். பெரிய மாஸ்டர் எல்லா உதவியும் பண்ணுவாராம்." சுப்பு சொல்லி முடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெல்லாம் நடக்கிற விஷயமா? இதோ பார் சுப்பு! நீ எம்புட்டுக்காலமா சப்பாத்து போட ஆசப்பட்டே? நீ கொழும்புக்கு வேலக்கிப் போனா ஒனக்கு சப்பாத்து, நல்ல உடுப்பெல்லாங் கெடைக்கும். இப்ப சொல்லு போறியா?" மாரிமுத்து சுப்புவின் தலையைப் பாசத்தோடு தடவினான்.

சுப்புவின் முகத்தில் பரவிய கலவரம் மெதுவாக மறைந்து மகிழ்ச்சி பரவியது. இரவு பூராவும் சப்பாத்தின் ஞாபகம் அவன் தூக்கத்தைக் கலைத்தது.

சுப்பு வேலைக்குச் சேர்ந்து எப்படியோ ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன. அவன் எதிர்பார்த்த சுகம் அவனுக்குக் கிடைக்கவில்லை. அன்று சனிக்கிழமை. சுப்புவைத் தவிர எல்லோரும் உறவினர் வீட்டு விருந்துக்குப் போய்விட்டனர்.

பூட்டிய வீட்டுக்குள் விடப்பட்ட சுப்புவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. ரமணன் படிக்கும் அறையுள் சரேலென்று புகுந்தான். அங்கே அணிவகுத்திருந்த சப்பாத்துக்களைப் பார்த்த அவன் கண்களில் ஆசை பளிச்சிட்டது. சுப்பு எதையுமே யோசிக்கவில்லை. ஒவ்வொரு சப்பாத்தாய்ப் போட்டுப் பார்த்துக் கண்ணாடியின் முன் நின்று தன்னை மறந்து இரசித்தான். குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான்.

அப்போது அவன் எதிர்பாராத அதிர்ச்சி. கிளாக்கர் அம்மா போன வேகத்தில் திரும்பி வந்துவிட்டாள்.

சுப்புவைக் கண்களால் சுட்டெரித்தாள். அவனுடைய சப்பாத்துக் கால்களைப் பார்த்து பத்திரகாளியாக மாறினாள். "மன்னிச்சிடுங்க அம்மா!" என்று விம்மி அழுதான் சுப்பு. சமையல் அறைக்குள் பாய்ந்து சென்ற கிளாக்கர் அம்மா எரியும் விறகுக் கட்டையைக் கொண்டுவந்து சுப்புவின் இரண்டு கால்களிலும் சூடு போட்டாள். அவனுடைய கதறல் லயத்துக் காம்பறாவில் கேட்க நியாயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் பாசம்

தகரப் பீங்கானில் இருந்த பாண் துண்டுகளை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதி. குவளையில் ஆறிப் போய்க் கிடந்த தேநீரில் இலையான் ஒன்று குளித்து விளையாடியது. சற்று நேரத்துக்கு முன்னால் தாழப் பறந்த ஹெலி போட்ட துண்டுப் பிரசுரம் அவள் அருகில் காற்றில் படபடத்துக் கிடந்தது. இருபத்திநாலு மணித்தியாலங் களுக்குள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் தேடிப் போகவேண்டுமாம். மூச்சுக்காற்று அனலாய் மூக்கிலிருந்து வெளியேறியது பார்வதிக்கு.

'இடம் பெயர்தல்...பாதுகாப்பு ... இவை இரண்டும் தமிழன் தலையில் முன்கூட்டியே எழுதப்பட்டவைதானா?' தனக்குத்தானே பார்வதி கேட்ட கேள்விதான் அது. அவளுக்கு நெஞ்சை அடைத்தது போல் இருந்தது. தேனீரில் மிதந்த இலையானைச் சுண்டுவிரலால் தட்டிவிட்டு அண்ணாந்து மடமட என்று குடித்த பார்வதி எந்தப் பரபரப்பும் இன்றித் திண்ணைக்கட்டில் முந்தானையை விரித்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

அம்மாவின் இந்த அசாதாரண அமைதி அவள் மகள் சரசுவுக்குச் சற்றே எரிச்சலூட்டினாலும் அவள் காட்டிக்கொள்ளவில்லை.

மாவும், பலாவும், வாழையும், தென்னையும் கூடிக்குலாவிய தோட்டம் பார்வதிக்குச் சொந்தமானது. அதன் நடுவில் சின்னதாக ஒரு கல் வீடு: கிணறு, மாடு - கன்று என்று அந்தக் கிராமத்தில் செல்வாக்காய் வாழ்ந்தவள் பார்வதி. அவள் பிறந்த திருவிடமும் அதுதான். அவள் பாட்டன், பாட்டி, அம்மா, அப்பா என்ற உறவுகளோடு உருண்டு புரண்டு கிடந்த நிலத்தில் பார்வதி உயிரையே வைத்திருக்கிறாள்.

“சரசு! மண்ணைக் குவித்து கீச்சுக்கீச்சுத் தம்பளம் கீயாமாயாத் தம்பளம் என்று சினேகிதியுடன் விளையாடிய இந்த மண்ணைவிட்டுப் போகத்தான் வேணுமா?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதியின் கணவர் விதானையாரும் அவளும் மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு முந்திரி மர நிழலில் கால் நீட்டி இருந்து வெற்றிலை மடித்துக் கொடுத்துச் சல்லாபித்த இடத்தை விட்டுப் போகத்தான் வேணுமா? நினைவுகளில் நீந்தி நீந்திக் கரையேற முடியாமல் தவித்தாள் பார்வதி.

சரசு ஒரு உரப்பையில் கைக்குவந்த எதையெதையோ திணித்து சணல் கயிற்றினால் சுருக்குப் போட்டாள். மெல்லத் தலையைத் திருப்பித் தாயைப் பார்க்கிறாள்: ஐம்பது வயது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். எழுபது வயதை எட்டிப் பார்க்கும் தோற்றம். கூனிக்குறுகி... நரையும் திரையுமாய்...? மகாலட்சுமியாக இருந்த அம்மாவா இது? அரிசிமா இடியப்பமும் மட்டிறால் சொதியும் பிசைந்து அங்கும் இங்கும் ஓடியாடி தனக்கு உணவு ஊட்டிய அழகுத்தெய்வமா இது...? சரசு விம்மினாள். எத்தனை வருஷ வாழ்க்கை! சிவனே என்று ஒரு உரப்பைக்குள் முடங்கிப்போன அவலத்தை எண்ணி வேதனைப்பட்டாள்.

அம்மா தொண்டையைச் செருமி மகளின் கவனத்தைக் கலைத்தாள். "சர..சு.. நாம இனி... எங்கடி போறது?"

"இந்த ஊர்ச்சனம் எங்கு போகுதுகளோ அவங்களோட சேர்ந்து போறதுதான்".

"இந்த மாடு - கண்டு, நாய், பூன எல்லாத்தையும் எப்பிடிடி உட்டுட்டுப்போறது?" அம்மா பரிதாபமாகச் சொன்னாள்.

"உசிர மட்டும் கொண்டு போனால் சரி" சரசு சொன்னாள்.

"பைத்தியக்காரி உசிருக்கென்ன உத்தரவாதம்? போற வழியில எதுவும் நடக்காதெண்டு என்ன நிச்சயம்? உன்ர அப்பன் ஒழுங்கையால வரக்குள்ள ஷெல்லடிச்சிச் சுறுண்டு செத்துக்கிடந்ததை மறந்துட்டியா? நமக்கெங்கடி பாதுகாப்பு? எங்க இருந்தாலும் நடக்கிறதுதான் நடக்கும்." மூச்சிரைக்கச் சொல்லி அம்மா 'ஓ' என்று அழுதாள்.

"சரசு நீ வேணுமெண்டா பக்கத்து வீட்டு பாக்கியம் மாமியோடு சேந்து எங்கண்டானபோய் உன்ர உசிரக் காப்பாத்திக்க. எனக்கு வயசாச்சி.நீ வயசுக்கு வந்தவ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வேண்டியவ, போம்மா... நா... என்ர நெலத்த உட்டு ஒரு அடிகூட அசையமாட்டன். 'எங்கேயோ போற உசிர் நா பொறந்த மண்ணில போகட்டும்' என்று உறுதியாகச் சொன்னாள்.

பார்வதி எழுந்து கூடத்துச் சுவரில் மாட்டியிருந்த ஒரு பழைய போட்டோ படத்தை எடுத்து சரசுவிடம் கொடுத்து "ஒன்ர அப்பனைத் துணைக்கு எடுத்துப் போ" என்று நாத் தழுதழுக்கச் சொன்னாள். அம்மாவைக் கட்டி அழவேணும் போலிருந்தது சரசுவுக்கு.

சரசு என்ன நினைத்தாளோ: உரப்பையில் கட்டியிருந்த சணலை அவிழ்த்து அதற்குள் வைத்த பொருட்களை நிதானமாக வெளியே எடுத்து வைத்தாள்.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்று எப்போதோ படித்த வரிகள் இப்போது அவள் நினைவில் எட்டிப் பார்த்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரம்

டாக்டர் ஜெயபால் அழகாக உடையணிந்து கண்ணாடியில் தன் முகத்தை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டார். அவருடைய மனதில் இருந்த மகிழ்ச்சி உதட்டில் புன்னகையாய்த் தவழ்ந்தது.

டாக்டர் ஜெயபால் அவசரமாக அவர் காதலி வித்தியாவைச் சந்திக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். "சந்திப்போமா சந்திப்போமா தனிமையில் நம்மைப் பற்றிச் சிந்திப்போமா?" என்று மெதுவாக முணுமுணுத்துப் பாடினார்.

தன் மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தார் டாக்டர் ஜெயபால். மணி சரியாக நாலு. நாலரை மணிக்குள், வித்தியா வைச் சந்திக்க வேண்டும் என்ற தீவிரம் ... அதற்கிடையில் தொலைபேசி அவரை அவசரமாக அழைத்தது.

"டாக்டர் ஒரு ஆக்சிடென்ற் கேஸ். நிலைமை சீரியஸாகத் தெரிகிறது. டாக்டர் ஶ்ரீதரனும் இன்றைக்கு லீவு. நீங்க வந்தால் அந்த உயிரைக் காப்பாற்றிவிடலாம் போல் தோணுது. ஏதாவது ஆகிவிடுமுன் தயவுசெய்து நீங்க வந்தால் நல்லது!" ஆஸ்பத்திரியிலிருந்து தலைமை நர்ஸ் செய்தி சொன்னாள்.

ஹலோ... சிஸ்டர் நான் ஒரு மணித்தியாலத்துக்கு முன்புதான் ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பினேன்.இப்போ எனக்கு அவசரமாய் ஒரு அப்பொயின்ற்மென்ற். ஐ காண்ட் அற்ரென்ட். நீங்க ஜுனியர் டாக்டர் அல்விசைக் கொண்டாக்ட் பண்ணுங்க. இரத்தப் போக்கு அதிகமானால் இரத்தம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யுங்கள். நான் அனேகமாக ஆறு மணிக்குள் வந்துவிடுவேன்!" றிசீவரை வைத்தார் டாக்டர் ஜெயபால்.நெற்றியில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றித் துடைத்தார். அவருக்குக் கோபம் அடுப்புத் தணலாய் எரிந்தது.

'சை என்ன தொழில் இது! கொஞ்சங்கூட றிலாக்ஸ் பண்ண முடியாத வாழ்க்கை? இரவென்றுமில்லை. பகலென்றுமில்லை, டாக்டர்கள் காதலிக்கக் கூடாதா? என்ஜோய் பண்ணப்படாதா? இப்படி அலுத்துக் கொண்டபோது டாக்டர் ஜெயபாலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய அண்ணன் சண்முகத்தின் ஞாபகம் மனதைப் பிறாண்டியது.

ஜெயபாலும் சண்முகமும் பெற்றவர்களை இழந்து கஷ்டப்பட்ட நேரமது. அண்ணன் சண்முகம் தன் படிப்பை நிறுத்திவிட்டு தனக்கென்று வாழாமல் தன் தம்பியைப் படிப்பித்து டாக்டராக்கிவிட வேண்டுமென்று பட்ட கஷ்டங்கள்... ஓய்வு ஒழிச்சலின்றிப் பார்த்த பல வகைப்பட்ட தொழில்கள்... டாக்டர் ஜெயபாலின் நெஞ்சில் கடல் அலையாக வந்து மோதியது. கடமையும் காதலும் போராடின. கடமை தோற்றது. விர் என்று காரில் விரைந்துவிட்டார் டாக்டர் ஜெயபால் காதலியைச் சந்திக்க.

பேராதனைப் பூங்காவில் வித்தியா காத்திருந்தாள். நேரங் கடந்து வந்ததற்கு அவள் முகங்கோணினாள். வித்தியாவைச் சமாதானப்படுத்தி வழமைக்குத் திருப்ப டாக்டர் ஜெயபாலுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. ஊடல் மறந்து நாணினாள் வித்தியா. இருவரும் காதல் உலகில் கவலையை மறந்து களித்தனர். மணி ஆறை நெருங்குவதை டாக்டர் ஜெயபாலின் கைக்கடிகாரம் காட்டியது. அவர் எழுந்துவிட்டார். வித்தியாவை அவள் வீட்டில் ட்றொப் பண்ணிவிட்டுப் புயல் வேகத்தில் அவருடைய கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது.

காரை விட்டு இறங்கிய டாக்டர் ஜெயபால் அவசர கேஸ் வார்டுக்குள் நுழைந்தார். தலைமை நர்சும் டாக்டர் அல்விசும் வெளியேறிக் கொண்டிருந்தனர். "எப்படியிருக்கிறது அந்தக் கேஸ்?" டாக்டர் ஜெயபாலன் கேள்வி எழுப்பினார்.

"சொறி டாக்டர், வீகுட் நொட் ஹெல்ப்." பதில் சொல்லிய டாக்டர் அல்விஸ், தலைமை நர்ஸ் ஏனைய நர்ஸ்சுகள் சகிதம் டாக்டர் ஜெயபாலை அழைத்துக் கொண்டு பதின்மூன்றாம் இலக்கக் கட்டிலை அணுகினார்கள்.

அதன் மீது மூடியிருந்த வெள்ளைத் துணியை நர்ஸ் அகற்றுகிறாள். பன்டேஜ் துணிகளின் கட்டுகளுக்கிடையே இரத்தக் கோலத்தில் கிடந்த அந்த முகத்தை உற்றுப் பார்க்கிறார் டாக்டர் ஜெயபால். அவர் இதயம் வெடித்துச் சிதறியது. இந்த முகம் அவருடைய அண்ணன் சண்முகத்தினுடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவசம்

**செ**ய்து முடித்த பலகாரங்கள், சாப்பாடுகள் அனைத்தும் சமையல் அறையிலிருந்து விசேஷம் நடக்கும் மண்டபத்துக்கு ஒவ்வொன்றாய் ஊர்ந்து கொண்டிருந்தன. விம்மிப் புடைத்த பப்படங்கள் 'மங்கா' என்ற பெயரோடு மலையாக உயர்ந்து கிடந்தன.

"ம்...ம்... எல்லாம் ரெடியாச்சா?" என்று மீசையை முறுக்கியபடி நோட்டம் விட்டார் ஒரு பட்டு வேட்டி ஆசாமி.மண்டபம் பலதரப்பட்ட மக்களால் நிரம்பி வழிந்து விழாக் கோலம் பூண்டது.

வேலையை முடித்த சமையல்காரர் சுதந்திரமாகத் தேகத்தை மேசையில் கிடத்தினார். அசதி தாங்காத சுந்தரம் ஆவென்று வாயைப் பிளந்து கொட்டாவி விட்டபடி "மங்கம்மாப் பாட்டி கண்ணமூடி நேத்துப் போலிருக்கு" என்றான். புதிதாக வேலைக்குச் சேர்ந்த சோமுவுக்கு மங்கம்மாவைத் தெரியாது. "அண்ணே அவுங்க பெரிய ஆளுங்களா?" அள்ளிமுடித்த கூந்தலும் அகன்ற நெற்றியில் ரூபாயளவு குங்குமமும் சந்தனச் சிலையாய் மங்கம்மா வளைய வருவதும் சுந்தரத்தின் மனசில் நிழலாடியது. அசதியைத் தூர வீசிவிட்டு மங்கம்மாப் பாட்டியை விமர்சிக்கத் தொடங்கினான் சுந்தரம்.

"அந்தக் கிராமத்தில் மங்கம்மாவைத் தெரியாதவங்க ஆருமில்லை. அவங்க கலியாணமாகி அங்கு வந்து மிச்சங் காலம். அவங்க புருஷன் பெரிய கம்பெனி ஒண்டில கிளாக்கர் வேல. மங்கம்மாவைக் கைப்புடிச்ச நேரம் சொத்து சொகமெல் லாம் தேடி வந்துது. முத்துப் போல மூணு புள்ளைகளைப் பெத்தாங்க. புருஷன் புள்ளைகள் எண்டு அந்த அம்மா பம்பரமாய்ச் சுழண்டத என்னால மறக்கமுடியா. அவங்க மனசு தங்கம். சொர்க்கமா இருந்த குடும்பத்தில் ஆர்ரகண் பட்டதோ என்னவோ .ஒரு நாள் நடக்கக் கூடாதது நடந்து போச்சப்பா". காதில் செருகியிருந்த பீடியைப் பற்ற வைத்து நீண்ட பெருமூச்சோடு உட்கார்ந்துவிட்டான் சுந்தரம். "என்னாச்சு அண்ணே?" சோமுவின் கேள்வியில் பதட்டம் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மங்கம்மாட புருஷன் மாரடைப்பு வந்து மண்டயப் போட்டிட்டார்”.

“ஐயோ கடவுளே அப்புறம்...?”

“முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்காதே இனித்தான் கதயே ருசி - கேளு”

குசினி விட்டத்தை நோக்கிப் புகையை ஊதிய சுந்தரம் என்ன நினைத்தானோ பீடியை நசுக்கி அண்டாப் பானையருகில் வீசிவிட்டுத் தொண்டையைச் செருமிச் சொல்லத் தொடங்கினான்.

“காலம் எப்பவும் ஒரே மாதிரியா ஓடுது? மங்கம்மா விதவையான பிறகு அவ வாழ்க்கையே அடியோடு மாறிப்போச்சு. தன்ர சோகத்தை மூடிமறைச்சி புள்ளைகளை தலைநிமிர வச்ச மகராசி அவ. குடியிருந்த வீட்ட வித்து, சின்ன காம்பறா ஒண்ண வாடைக்கு எடுத்தா. சேத்து வச்ச சொத்துகள வித்து புள்ளைகளை வளத்து பட்டணத்துக் கனுப்பி படிக்கவச்சா. அது மட்டுமா? நல்ல எடமாப் பாத்துக் கலியாணமும் பண்ணி வச்சா. மூணு புள்ளைகளும் நல்லபடியா வாழுதுகள்.

கடசியில என்ன?மங்கம்மாவுக்கு கையும் காலுந்தான் மிச்சம். கூலிக்கி மாவிடிச்சி வெறகு வித்துக் காலந்தள்ளினா. ஓடிஓடி உளச்ச உடம்பு தேஞ்சி அவ பாயும் படுக்கையும் ஆகிப்போனா”.

“ஆங்...என்னங்க அநியாயம் இது? புள்ளங்கள் ஒண்ணும் பெத்தவங்களைக் கவனிக்கிறல்லியா?” சோமுவின் கவலை வெளிப்பட்டது.

“தென்னய வச்சா எளநீரு - புள்ளயப் பெத்தாக் கண்ணீரு” முணுமுணுத்துப் பாடினான் சுந்தரம். அவனுக்குத் தாகமெடுத்தது. வாளியில் மிஞ்சியிருந்த மோரைத் தானுங்குடித்து சோமுவுக்கும் கொடுத்தான்.மூலையில் உருண்டு கிடந்த உரலின்மேல் உட்கார்ந்தவன் சமையல் கட்டில் அடுத்த வீட்டுப் பூனை தன் குட்டிகளை அணைத்துச் சுகமாகத் தூங்குவதைப் பார்த்துத் தனக்குள்ளே சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணே... என்ன சிரிப்பு...? சொல்லுங்கண்ணே." சோமுவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. "என்னத்தைச் சொல்ல? மங்கம்மாட நில மோசமாப் போச்சு. பிள்ளைகள் எப்பவாவது ஒருக்காவந்து பாத்துப் போகுங்கள். தாயக் கவனிக்கக் கூலிக்கு ஆள் வச்சாங்க. அது வேற ஆருமில்ல - என்ர மனிசி பொன்னம்மாதான். பெத்தவள, வச்சிப்பாக்க ஒரு புள்ளயும் விரும்பல்ல. ஊசலாடிய உயிர் பறந்திட்டுது".

"அட பாவமே, செத்தப்புறம் புள்ளைங்க வந்தாங்களா?" சோமுவினால் ஆவலை அடக்க முடியவில்லை. "ஏன் வரல்ல பறந்தடிச்சி வந்தாங்க. கடசிச்சடங்க எவ்வளவு ஆடம்பரமாப் பண்ணினாங்க தெரியுமா? கொழும்பில இருந்து வந்த பிரேதப் பெட்டிர வடிவ அந்தக் கிராமத்துச் சனங்கள் வச்ச கண்வாங்காமப் பாத்தாங்க. உசிரோட கவனிக்காதவங்க செத்த புறகு ஒப்புக்கு எப்பிடி எல்லாம் செய்யிறாங்க பாத்தியா? இது தாம்பா ஒலகம். ஒரு தாய் பத்துப் புள்ள பெத்தாலும் அந்தப் பத்தையும் கவனிப்பா. ஆனா அந்தப் பத்துப் புள்ளைகளும் ஒரு தாயைக் கவனிக்கும் எண்டு சொல்ல ஏலா" என்று சோம்பல் முறித்த சுந்தரம் யோசனையில் ஆழ்ந்து போனான்.

"அண்ணே என்ன யோசன? மங்கம்மாட கத முடிஞ்சு போச்சா?" கலங்கிய கண்களைச் சோமு துவாய்த்துண்டால் துடைத்துக் கொண்டான். "கத முடிஞ்சபடியாத்தானே திவசம் பெரிய தடபுடலாய் நடக்குது" சுந்தரம் அமைதியாகக் கூறினான்.

தனக்குப் பிள்ளைகள் இல்லாத குறை இப்போது சோமுவுக்குப் பெரிதாகப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு முத்தம்

**ப**ங்குனி வெய்யில் சுள்ளென்று உறைத்தது. மாணிக்கம் மரத்தடி வெளியில் சீமெந்தையும் மண்ணையும் குழைத்துக் கொண்டிருந்தான். நெற்றி வியர்வை நிலத்தில் மணியாக உதிர்ந்தது. மண்வெட்டியைக் குப்புறப்போட்டவன் நிமிர்ந்து நின்று, தலையில் சுற்றியிருந்த துண்டால் முகத்தையும் முதுகையும் உரசித் துடைத்தான். மாணிக்கத்தின் வாய் புளித்தது.

சற்றுத் தொலைவில் சித்தாள் வேலையிலிருந்த தன் மனைவி மரகதத்தைப் பார்த்தான். "ஏய் மரகதம் வெத்தில கொஞ்சம் குடு புள்ள" என்று குரல் கொடுத்தான். அவ்வளவுதான். அவனுக்குத் தலை சுற்றியது. கண்ணை இருட்டியது. பேச்சு மூச்சின்றி அப்படியே மயங்கி விழுந்துவிட்டான் மாணிக்கம்.

வெற்றிலையோடு வந்த மரகதம் பதறிப் போனாள். கதறி அழுதாள். கண்டிராக்டர் கனகலிங்கத்தின் காதுக்குச் செய்தி எட்டியது. பத்து வருஷமாக அவரிடம் வேலை பார்ப்பவர்கள்தான் மரகதமும் மாணிக்கமும். கனகலிங்கம் மாணிக்கத்தை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தார். அத்தோடு அவர் கடமை முடிந்துவிட்டதாக நினைத்தார்.

"மாணிக்கம் பிழைக்க வேண்டுமானால் அவனுக்கு ஒரு இன்ஜெக்சன் போடவேணும். அதுவும் இருபத்திநாலு மணித்தியாலத்துக்குள்" டாக்டர் அவளிடம் ஒரு துண்டைக் கொடுத்துவிட்டுப் போனார். மாணிக்கம் சுயநினைவின்றிக் கிடந்தான். மரகதம் அழுதாள். டாக்டர் கொடுத்த துண்டைக் கையில் பத்திரமாக எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். மருந்துக்கடைக்காரர் சொன்ன விலை அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. 'ஆயிரம் ரூபாய்' மரகதம் மயங்கும் நிலைக்கு வந்துவிட்டாள். இருந்தாலும் தன் கணவனின் 'உயிர்ப்பயம்' அவளுக்கு ஒரு அசாதாரண தைரியத்தைக் கொடுத்தது. அண்டை அயலவர்களிடம் மண்டியிட்டாள். எல்லோரும் கையை விரித்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதம் செய்வதறியாது தவித்த போது... "ஆயிரம் ரூபாயெண்டா எப்பிடிம்மா இருக்கும்? கடவுள்ட்ட வேண்டினா... எல்லாமே கெடைக்குமெண்டு நீதான் அடிக்கடி சொல்லுவியே. அவர் தர மாட்டாரா? எனக்கு அப்பா வேணும்மா..." மரகதத்தின் ஆறு வயதுச் சிறுவன் சொன்னான். அவள் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போல் இருந்தது.

திடீரென்று கனகலிங்கத்தின் நினைவு மரகதத்துக்கு வந்தது. ' கனகலிங்கம் ஐயா அஞ்சு ரூபாயும் கடனாகக் கொடுக்க மாட்டாரே. சரியான கருமி. எச்சில் கையால கூட காக்கா விரட்டாத மனுஷன்' தனக்குள் தானே சொல்லிக் கொண்டாள். இருந்தாலும், கேட்டுப் பார்ப்போம் என்ற நப்பாசை.

மரகதம் கனகலிங்கத்தின் கதவைத் தட்டினாள். கதவு திறந்தது. கனகலிங்கத்தின் முகத்தில் ஆச்சரியம் கேள்விக்குறியாக மாறியது. மரகதம் சட்டென்று அவன் காலில் விழுந்து "ஐயா, என் தாலிய நீங்கதான் காப்பாத்தணும்" என்று அழுதாள். டாக்டர் சொன்னதைச் சொன்னாள்.

"அதுக்கு நான் என்னம்மா செய்ய வேணும்?..." கனகலிங்கம் ஆதரவாகக் கேட்டான்.

"ஒரு ஆயிரம் ரூபாய்..." மரகதம் வசனத்தை முடிக்கவில்லை.

"ஆயிரம் ரூபாயா? ஐயய்யோ பெரிய தொகையாச்சே நா எங்க போவன்?"

"ஐயா மடிப்பிச்சை கேக்கிறன். இனாமா இல்ல, கடனா. எப்பிடியும் கடனை அடைச்சிடுவன். அவர்ர உயிர் உங்க கையிலதான் ஐயா." பரிதாபமாகக் கெஞ்சினாள். பதறினாள். கனகலிங்கத்தின் மூளை மும்முரமாக வேலை செய்தது.

"மரகதம் அழாத. உள்ளே வா" என்று அழைத்தார். நம்பிக்கை துளிர்விட்டது அவளுக்கு.

"நீ கெட்ட ஆயிரத்தை நான் தருவேன். நீ என்ன தருவாய்?" என்றார் கனகலிங்கம் திடீரென்று. மரகதத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னய்யா கேலி பண்றீங்களா? இந்த ஏழைட்ட என்ன இருக்கு" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருக்கே. ஒரே ஒரு முத்தம் கொடு." பூமியே பிளந்து மரகதத்தை விழுங்கியது போலிருந்தது. அவள் சிலையாகிப் போனாள். அந்த இருபத்தினாலு மணிநேரம் அவளை வாளால் அறுத்தது. மாணிக்கத்தின் குரல் மணிக்கூட்டுக்குள் பெண்டியூலமாய் ஊசலாடுவது தெரிந்தது. அவள் பேசவில்லை.

அவன் கதவை மூடினான்.

மரகதம் ஆயிரம் ரூபாயுடன் மருந்துக்கடையை நோக்கி ஓடுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதி

சிவகாமி எப்படியோ தட்டுத்தடுமாறி அக்கல்லூரி மாணவிகள் விடுதிக்கு வந்து சேர்ந்துவிட்டாள். அரண்மனை போன்ற அந்தக் கட்டிடத்தை அவள் அண்ணாந்து பார்த்தாள். கழுத்தை வலித்தது: சுற்றும் முற்றும் தன் பார்வையைச் செலுத்தினாள். அவள் அந்த விடுதிக்கு வந்தது இதுதான் முதல் முறை. ஒழுங்காக அலங்கரித்தாற்போல் கத்தரிக்கப் பட்ட குரோட்டன் செடிகளைச் சற்று நேரம் நின்று வியப்புடன் பார்த்தாள்.

போகன் விலாச் செடிகளில் பல நிறங்களில் பூக்கள் சிரித்து நிற்கும் அழகைக் கண்டு அதிசயப்பட்டாள். வரிசையாகத் தலைவிரித்து நின்ற சவுக்கு மரங்களைக் கண்டு மகிழ்ந்தாள். பார்க்கும் இடம் எல்லாம் பளிச்சென்று தெரிந்தது.

'கன்னியாஸ்திரிகளின் கல்லூரி என்றால் இப்படித்தான் இருக்குமாக்கும்' தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்.

'அடேங்கப்பா எம்புட்டு ஒசரமான பள்ளியில என் மக பூரணி படிக்கிறா. சும்மா சொல்லப்புடாது என்மக குடுத்து வச்சவ. எப்படியாச்சும் பூரணியை ஒரு டீச்சரம்மாவாக்கிப் பாத்துப்புட்டுத்தான் சாகணும்' என்ற வைராக்கியம் சிவகாமிக்கு.

இத்தனைக்கும் சிவகாமி வசதி படைத்தவளல்ல. அவளுடைய கணவன் அகால மரணமடைந்ததில் இருந்து தோட்டத்துப் பெரிய கிளாக்கர் குடும்பத்தோடு ஒன்றிப் போனாள். அவர்களுக்குப் பிள்ளை குட்டி என்று ஏதுங்கிடையாது. கிளாக்கர் அம்மாளுக்குப் பக்கவாத நோய். ஒரு கையும் காலும் அசையாது. இரவு பகலாய் அந்த அம்மாளைக் கவனிப்பது, சமைப்பது. துவைப்பது, கூட்டிப்பெருக்குவது, எல்லாமே சிவகாமிதான். எதைச் செய்தாலும் அன்போடு மனசு வைத்துச் செய்யும் சுபாவம் சிவகாமிக்கு. இதனால் பெரிய கிளாக்கரும் தாராள மனசுடன் பூரணியின் படிப்புக்கான செலவை எல்லாம் அவர் ஏற்றுக்கொண்டார். பூரணி படிப்பிலும் விளையாட்டிலும் படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டி. எல்லாம் பெரிய கிளாக்கர் குடும்பத்தின் தயவுதான் என்று தன் நினைவுக்கு முற்றுப்புள்ளி வைத்த சிவகாமி, வெண்ணிற அங்கி அணிந்த சிஸ்ரர் ஒருவர் வருவதைக் கண்டு " தோத்திரம் சிஸ்ரர்" என்றாள்.

"நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்றார் சிஸ்ரர் மலர்ந்த புன்னகையோடு.

என் மக பூரணி இங்க படிக்கிறா. இன்னிக்கு ஓய்வு நாள் தானே? நா அவளப் பாக்கணும்."

"எந்தப் பூரணி...? கண்ணாடி போட்டிருப்பா. நீளக்கூந்தல் மெல்லிசாய்... உசரமாய்" சிவகாமி கண்கள் பளபளக்க அவசரமாய்க் குறுக்கிட்டு "ஆமாம் தாயி அந்தப் பூரணிதான் என்மக" என்றாள்.

"சிஸ்ரரின் நெற்றி சுருங்கியது. "எதற்கும் நீங்கள் பெரிய மதரைப் போய்க் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு சிஸ்ரர் போய்விட்டார்.

சிவகாமிக்கு அழுகையும் குளப்பமுமாக இருந்தது. அப்போது வராந்தாப் பக்கமிருந்து பெண்கள் கூட்டம் ஒன்று பெரும் இரைச்சல் போட்டுக் கும்மாளம் அடித்து வந்தது. அத்தனை பேருக்குள்ளும் சிவகாமி பூரணியைக் கண்டுவிட்டாள். சிவகாமிக்குத் தலைகால் தெரியவில்லை. அப்படி ஒரு சந்தோஷம். 'என்மக எம்புட்டு அழகு சினிமாக்காரி பூரணியிட்டப் பிச்சை எடுக்கணும். என் கண்ணே பட்டிடும் போல' என்று நெட்டி முறித்தபடி உள்ளே நடக்கலானாள். தான் கொண்டு வந்த சீனி முறுக்குப் பார்சல் அடிமடியில் பத்திரமாயிருக்கா என்று தடவிப் பார்த்துக் கொண்டு நடந்தாள்.

அதே சமயம் பூரணியும் தன் தாயை அடையாளம் கண்டு கொண்டாள். "ஏய் வாலுகளா... கொஞ்சம் நில்லுங்கடி. இதோ வந்திடுறேன். எங்க வீட்ல வேலை பார்க்கும் ஆயா வந்திருக்கா, எங்க மம்மி டடி ஏதாச்சும் செய்தி அனுப்பியிருப்பா" என்று சொல்லி சிவகாமியிடம் பட்டாம் பூச்சியாகப் பறந்தோடி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் கண்மணி ராசாத்தி. நீ எம்புட்டு அழகு. ஒன்ன இப்புடிப் பாக்க ஒன் அப்பன் உசிரோட இல்லயே" அவள் கண்களில் இருந்து கரகரவென்று நீர் வடிந்தது. முந்தானையில் வைத்திருந்த சீனி முறுக்குப் பார்சலை "சாப்பிடு கண்ணு" என்று நீட்டினாள்.

பூரணி அவள் தாயை ஒரு அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல் பார்த்தாள். " அம்மா, ஒனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? அன்பு மட்டும் இருந்தாப் போதுமா? கொஞ்சங்கூட நாகரிகம் தெரியாத அம்மாவா இருக்கியே. டீசன்சி, ஒரு மண்ணும் தெரியாது. நீதான் என் அம்மான்னு ஒன்னை எப்படி என் ஃபிறென்சுக்கு அறிமுகம் பண்றது? இதனாலதான் நான் பெரிய கிளாக்கர் பெண் என்று சொல்ல வேண்டிய இடங்களில் சொல்லி வைச்சிருக்கேன். இதைக் கெடுத்திடாதே! உனக்கும் எனக்கும் தாய் - பிள்ளை உறவு என்று தெரிந்தால் போதாதா?"

சிவகாமி அதிர்ந்து சிலையானாள். "அம்மா நீ இதயும் தெரிஞ்சுக்க. நான் எஞ்ஜினியரிங் படிக்கும் பையன் ஒருவனைக் காதலிக்கிறேன். அவனையே கலியாணமும் பண்ணிக்கப் போறன். அவருக்கு மாமியார் ஆகும் தகுதி உனக்கிருக்கா?" இவ்வளவு நேரமும் சிவகாமியின் கையிலே இருந்த முறுக்குப் பார்சல் நழுவி மண்ணில் விழுந்தது.

பூரணியே தொடர்ந்தாள்: மாசாமாசம் காசை மட்டும் றைவரிடம் கொடுத்தனுப்பு. லீவுக்கு லீவு நானே வருவேன். நீ வந்து சிரமப்படாதே" என்று சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்து போனாள்.

ஈட்டிகள் பாய்ந்த இதயத்தோடு சிவகாமி பெரிய கிளாக்கர் வீட்டை நோக்கி நடக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்வு

**எ**ன் அன்பிற்குரிய அப்பாவிற்கு,

உங்கள் கடைக்குட்டி மகன் எழுதுவது, நான் ஏ.எல் பரீட்சையை எழுதி முடித்துவிட்டேன். முடிவு முருகன் விட்டபடி. நானும் அம்மாவும் சாவகச்சேரியிலிருந்து பிள்ளையார் கோவிலடிப்பக்கமாய் இடம் பெயர்ந்து விட்டோம். மரத்தடியிலிருந்து தான் படித்தேன். பரீட்சை சென்ரருக்கு இங்கிருந்து இருபத்தைஞ்சு மைல் சைக்கிள் மிதிச்சு ஒவ்வொரு முறையும் போகைக்க பட்ட பாடு...? என்ன செய்ய. தலைவிதி, கஷ்டப்பட்டதுக்கு நாலு ஏ எடுக்க வேணும்.

நீங்களும் சின்னக்காவும் பெரியக்காவோடு ஆறுதலாக இருப்பீங்கள் என்பதை நினைக்கச் சந்தோஷமாயிருக்கு. வயசு போன காலத்தில நீங்களாவது வயிராறச் சாப்பிட்டு கட்டிலில் படுப்பீர்கள் என்ற நினைப்பு...

பாதிக் கடிதத்தைப் படித்த சபேசனால் மீதியைப் படிக்க முடியவில்லை. நெஞ்சு கனத்தது. அவர் கண்களில் நிறைந்த நீர் வடிவதா வேண்டாமா என்று போராடியது. கடிதத்தை நான்காக மடித்துத் தலையணைக்கடியில் வைத்தார். அடிவயிற்றிலிருந்து தீச்சுவாலை நெஞ்சுவரை வந்து, அவர் உடல் பூராவும் தகனஞ்செய்வது போலிருந்தது. பக்கத்திலிருந்த பனைமட்டை விசிறியை எடுத்து அவசர அவசரமாக முகத்திலும் மார்பிலும் வீசிவிட்டு அதைத் தூரப் போட்டார். தோளில் தூங்கிக் கிடந்த துவாய்த் துண்டால் முகத்தை அழுந்தத் துடைத்தார். அவருடைய முகம் ஒரு கணத்துக்கு மேல் சிவக்க மறுத்தது. கிறாதி ஜன்னலினூடாகத் தெரிந்த தூரத்துப் பச்சைகளை வெறிக்கப் பார்த்தார். தன்னைச் சுற்றிலும் சூன்யம் வலை பின்னியிருப்பது போல் உணர்ந்தார்.

சபேசன், மனைவியையும் மகனையும் பிரிந்து கொழும்புக்கு வந்தது நேற்றுப் போல் இருக்கிறது. பத்து மாதங்கள் பறந்து விட்டன. அவர் நினைவுகளில் விழுந்த சவுக்கடிகளை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் மூத்த மகள் மனோகரியுடன் சபேசனும் இந்துவும் சந்தோஷமாய் இருந்தார்கள் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

மனோகரியின் கணவன், குமரன் ஒரு பட்டயக் கணக்காளன். மாதங்கள் மூன்றைக் கடந்தன. மனோகரியின் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களைக் கண்டும் காணதவர் போலிருந்தார் சபேசன். இந்து தன் அக்காவைப் புரிந்துகொள்ள முடியாமல் திகைப்பில் இறுகிப் போனாள்.

"அப்பு, உங்களுக்குப் பென்சன் காசு வருகுது தானே? நீங்களும் இந்துவும் தனியாச் சமையல் செய்து சாப்பிடலாமே!" மனோகரி சாதாரணமாய்ச் சொன்னாள். "ஓம் மொனே, உங்களுக்கு இடைஞ்சலெண்டா நாங்கள் எங்களின்ர சாப்பாட்டைப் பாத்துக் கொள்றம்." சபேசன் அமைதியாகச் சொன்னார்.

ஒரு மாதம் ஓடியது. உறவுகளிடையே மௌன ராகங்கள். அதைக் கலைத்தாள் மனோகரி: "யாழ்ப்பாணமிருந்து குமரனின் மருமகள் வரப்போறாவாம்.நீங்களும் இந்துவும் ஸ்ரோர் அறையைப் பாவித்தால் வாறவவுக்கு வசதியாயிருக்கும் எண்டு பாக்கிறேன்."

சபேசனின் கண்களில் ஸ்ரோர் றூம் எட்டிப்பார்த்தது. தட்டுமுட்டுச் சாமான்களின் தங்குமடம். ஒட்டடைத் தூசிகளின் சரணாலயம். எல்லாவற்றையும் ஒதுக்கி ஒண்டிக்கொள்ள இடம் எடுக்க வேணும்.

சபேசன் மனோகரிக்குப் பதில் சொல்லவில்லை. அவரால் பதில் சொல்லவும் முடியவில்லை. மௌனம் சம்மதத்தின் அடையாளம் தானே?

இந்து கடுகாய் வெடித்தாள்.

"எங்களவிட வாறவை உசத்தியோ?"

"வாயை மூடு"

மனோகரி குரலை உயர்த்தினாள்: "இதுக்குத்தான் எங்களைக் கூப்பிட்டதோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதிகம் பேசாதே! யாருடைய தயவில் நீ இருக்கிறாய் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்"

அக்காவும் தங்கையும் வாக்குவாதப்படுவதைப் பார்த்த சபேசனுக்கு வயிற்றைக் கலக்கியது. அவருடைய பார்வையின் கெஞ்சலைக் கண்ட இந்து அமைதியானாள். சபேசனும் மகளும் ஸ்ரோர் அறைக்கு இடம் பெயர்ந்து இரண்டு மாதமாகிவிட்டது. வீட்டுக்குள்ளேயும் ஒரு அகதி முகாமா? தனக்குள் எழுந்த கேள்வியை தட்டி அடக்கினார் சபேசன்.

ஒரு கொடியில் இரு மலர்கள் எப்படி நிறம் மாற முடியும்? அந்தத் தகப்பனால் சீரணிக்க முடியவில்லை. மாதங்கள் உருண்டோட மனோகரியின் மனதில் அந்நியம் காடாக வளர்ந்து, தந்தை தங்கை உறவுகளைத் தங்கவிடாமல் தடுத்தது.

அன்று... லண்டனிலிருந்து வந்த மனோகரியின் நண்பி நந்தினிக்கு மதிய விருந்து. மேற்கத்திய பாணியில் சமையல் தடபுடலாய் நடந்துகொண்டிருந்தது. பேச்சுவாக்கில் மனோகரி நந்தினியிடம் "அப்புவை வேறொரு அனெக்ஸ் பாக்கச் சொல்லப் போறன். அடிக்டி விசிற்றஸ் வாறபடியால் எங்களுக்குக் கஷ்டம்" என்று சற்று உரத்துச் சொன்னாள்.

ஒரு மூலையில் ஒதுங்கியிருந்த சபேசனுக்குப் பகீர் என்றது. "நாங்க இடத்துக்குப் புதிசு. மகளை நம்பி வந்தம்... இப்ப வேறு இடம் பார் என்றால் நாங்கள் எங்க தேடுறது?" இப்படி மனோகரியைக் கேட்க நினைத்த சபேசனை ஏதோ ஒன்று கேட்கவிடாமல் தடுத்தது.

சபேசன் ஸ்ரோர் றூமுக்குப் போய்க் கைகளைப் பின்னுக்குக் கட்டிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். "தமிழனுக்குக் கடவுள் தந்த தண்டனைதான் இது. வீட்டிலே இல்லாதது நாட்டிலே எப்படி வரும்? அவர் சிந்தனையும் அவரோடு சேர்ந்து நடந்தது.

மனோகரி குழந்தையாய்த் தன் தோளிலும் மார்பிலும் வளர்ந்ததை எண்ணினார். தன் முதுகிலே அவளைச் சுமந்து தான் மாடு போல் தவழ்ந்ததையும் எண்ணினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரிக்கு அம்மை அள்ளிப் போட்ட போது மொட்டையடித்து ஈரத்துண்டோடு நூற்றி எட்டு முறை அம்மன் கோயிலில் உருண்டு புரண்டதும் அவர் நினைவுக்கு வந்தது.

சபேசனின் தொண்டையில் சோகம் பந்தாக அடைத்தது. அதற்கு மேல் அவரால் எதையும் சிந்திக்க முடியவில்லை. "ஏற நனைந்தவனுக்கு இனிக் கூதலென்ன குளிரென்ன?" இந்துவும் சபேசனும் இடம் பெயர்ந்து செல்கிறார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டை

**வா**ங்க துரை! இது யாரோட ஹேர் ஸ்டைல்? கமலா? ரஜனியா?

மாடிப்படியிலிருந்து இறங்கி வந்த நிராஜை அவன் அப்பா கிண்டலாகக் கேட்டார்.

நிராஜ் பதிலேதும் சொல்லாமல் நகத்தைக் கடித்துக்கொண்டிருந்தான்.

"நான் கேட்டது உன் காதில் விழுந்ததா? மணித்தியாலக் கணக்கில் கண்ணாடி முன்னால நிண்டு முடி வார்ரியே நீ என்ன பொம்பிளையா? ஒனக்கு வெக்கமாயில்ல? காதை மறைக்கிற முடியை ஒதுக்கிட்டு நல்லாக் கேளு... இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. நீயா முடி வெட்டிக்கலேன்னா நாளைக்கு நானே உனக்கு மொட்டையடிப்பேன்." ஆவேசமாகக் கத்திவிட்டு அவசரமாக ஆபிசுக்குப் புறப்பட்டுப் போனார் அப்பா.

அடுப்பங்கரையிலிருந்து வெளியே வந்தாள் நிராஜின் அம்மா. "டேய் நிராஜ், உனக்கு அப்பாவின் குணம் தெரியுமில்ல. நல்ல புள்ளையா அவர் பேச்சைக் கேட்டு நடக்கப்பார்."

நிராஜ் கூச்சிலிட்டான். "அம்மா அப்பாவுக்கு வயசென்ன? ஒரு ஐம்பது இருக்குமில்ல. என் வயது பதினேழு தெரியுமா?"

"முடி வெட்றதுக்கும் வயசுக்கும் என்ன சம்பந்தம்?" அம்மா குழம்பினாள்.

"நீ என்னதான் சொல்றே? எனக்கொண்ணும் புரியலேடா?"

"புரியும் படியாச் சொல்லட்டுமா?" நிராஜ் தொப்பென்று கதிரையில் உட்கார்ந்தான்.

"ஏம்மா? என்வயசுப் பிள்ளைகள் அழகாய் இருக்கணும். நல்லாய் உடுக்கணும் என்று ஆசைப்பட்றது தப்பா? நான் என்ன நாளுக்கொரு உடுப்பா அல்லது சப்பாத்தா மாத்திக்கிறன்? இந்த ஹேர் ஸ்டைல் மட்டுந்தானே என்னால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திக்க முடியிறது. இதனால என் படிப்புக்கென்ன பாதிப்பா? அப்பாவுக்கு மொட்டை விழாம என்னைப் போல முடியிருந்தா நீ சந்தோஷப்படுவ தானே? சின்ன வயசு ஆசைகளைச் சின்ன வயசுல தானே பண்ணிக்க முடியும்?"

படபட என்று சொல்ல நினைத்ததைச் சொல்லிவிட்டுத் தாயை ஏறெடுத்தான் நிராஜ்.

"டேய்! ஒன்னப் புரிஞ்சுக்க! படிக்கிற வயசுல இந்த ஸ்டைல் எல்லாம் கூடாது. ஸ்கூல்ல ஒன்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?"

நிராஜ் அவசரமாகக் குறுக்கிட்டான். "அம்மா பார்த்தீபன் மாஸ்டரின்ட ஹேர் ஸ்டைல் ரஜனி ஸ்டைல். அது தெரியுமா ஒனக்கு?"

"டேய் டேய் இந்த ஸ்டைல் எல்லாம் எனக்கொண்ணும் தெரியாது. நீயாய்ப்போய் முடிவெட்டிக்க. இல்லாட்டி அவரா ஒன்ன இழுத்துக்கொண்டு மொட்டை அடிச்சிடுவார்."

நிராஜுக்குப் பொறுமை அறுந்தது. நறநறவென்று வந்த கோபத்தைப் பல்லால் கடித்துக்கொண்டு விருட்டென்று வெளியேறினான்.

"ஹாய் நிராஜ்!" வழியில் எதிர்ப்பட்டாள் எஸ்தர். "கெமிஸ்ற்றி ரியூஷன் கிளாஸ் நீ வரல்ல?" நிராஜ் மௌனமானான்.

"இதோ பார் நிராஜ்! நீ படிப்புல மட்டுமில்ல நல்ல ஹேர் ஸ்டைல் போட்டுக்கிறதிலும் பலே கெட்டிதான். ஐ லைக் இற்" சொல்லிவிட்டுச் சைக்கிளில் சிட்டாகப் பறந்தாள் எஸ்தர். நிராஜுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. கருகருவென வளர்ந்திருந்த முடியை அவன் பாசத்தோடு தடவினான். அவன் கண்களில் நீர் முட்டியது.

மணி ஆறைத் தாண்டி விட்டது. நிராஜ் இன்னும் வீடு திரும்பவில்லை. மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டவள் போல குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள் அவன் அம்மா. ஆபீஸ் ஃபைலில் முகம் பதித்திருந்தார் நிராஜின் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்னங்க இன்னும் நிராஜைக் காணோம்!” அம்மா கவலையை வெளியிட்டாள். மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்த நிராஜின் அப்பா, நெற்றியைச் சுழித்தார். “ஸ்பெஷல் கிளாசாக்கும்” சொல்லிக் கொண்டே மறுபடியும் ஃபைலைப் புரட்டினார்.

மணி ஏழு முறை அடித்து ஓய்ந்தது. நிராஜின் அம்மாவால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

“ஐயோ என் புள்ள எங்க போனானோ“ தெரியல்லியே....?” அவள் குரலில் பதட்டம் தெரிந்தது.

“எதுக்குப் பயப்படுறே! அவனென்ன சின்னப்புள்ளையா காணாமல் போக? இன்னிக்கி சனிக்கிழம கெமிஸ்ற்றி கிளாஸ் போயிருப்பான்.” நிராஜின் அப்பா சொல்லி முடிக்கையில் கேற் திறக்கும் சத்தம் கேட்டது. நிராஜ் அமைதியாக கூடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

“இதென்ன கோலம்?” அம்மா பதறினாள். அவன் அப்பாவால் திகைப்பிலிருந்து மீள முடியவில்லை.

“டேய் நிராஜ்! என்னடா இப்படிப் பண்ணிட்டே?” அம்மா தாங்க முடியாது கதறினாள்.

ப்ளீஸ் என்ன எதுவும் கேக்காதீங்க. இப்போ உங்களுக்கெல்லாம் திருப்தி தானே?” நிராஜ் குலுங்கிக் குலுங்கி அழுதான் மொட்டைத் தலையோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோதயம்

**கா**ஞ்சனா தனக்கு வந்த கடிதத்தைப் பலமுறை படித்து முடித்து விட்டாள். அதை மடித்துத் தலையணைக்கடியில் வைத்து விட்டு எதிரே இருந்த சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். இருளின் பிடியில் கடிகார முள் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு மணி பன்னிரண்டைக் காட்டியது. தூக்கம் காஞ்சனாவின் கண்களைத் தழுவ மறுக்கிறது. மறுபடியும் தலையணைக்கடியிலிருந்த கடிதத்தில் கண்களை மேயவிட்டாள்.

அவளுடைய தாய்: பேரன் ரவியின் பிறந்தநாளை நினைவூட்டி எழுதியிருந்தாள். அவன் பண்ணும் குறும்புகளைக் கோடிட்டுக் காட்டியிருந்தாள்.

"எனக்கு அம்மா இருக்கா பாட்டி? அப்பா இருக்கா பாட்டி? ஏன் அவங்க ரெண்டு பேரும் என்னை விட்டுப் போனாங்க பாட்டி? அவங்களுக்கு என்னைப் பிடிக்கலியா? என்று கேள்வி மேல் கேள்வி போட்டு உன் மகன் என்னைத் துளைக்கிறாண்டி..." இந்த வரிகள் காஞ்சனாவின் இதயத்தைக் கிழித்து மூளையைக் குழப்பியது.

காஞ்சனாவின் அறை விசாலமாய் இருந்தது. தரையில் விலையுயர்ந்த காப்பற் விரிப்பு. கட்டில் மெத்தை, டெலிவிஷன், டெக், வாசனைத் திரவியங்கள்- இவை எல்லாமே அவளைக் கேலி செய்வது போல் இருந்தன. கல்பன் பாயில் கால் நீட்டிப் படுத்த சுகம் அவள் நெஞ்சை வருடிய போது கண்ணீர் களுக்கென்று வெளியேறி இலங்கை மண்ணில் சங்கமித்தது.

"காஞ்சனா உனக்குக் கலியாணமாகிப் பிள்ளையும் பிறந்தாச்சி, உன் புருஷனும் வெளியில. நீ வீட்டுப் பொறுப்பெடுத்து நல்லபடியாப் பிள்ளையை வளக்க வேணாமா? எல்லாத்தையும் என் தலையிலை கட்டிற்று சவுதிக்குப் பொறன் என்றியே- என்னடிது? புருஷன் அனுப்பிற காசு காணாதா?"

அம்மாவின் குரல் காஞ்சனாவின் காதில் அலை மோதியது.

"சும்மா கெடம்மா உனக்கு அறிவிருக்கா? புருஷன்ர காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுக்குச் சரி. ரெண்டு வருஷம் பல்லைக். கடிச்சிட்டு உன் பேரனைப் பாரும்மா! நான் போய் உளச்சி மொத வேலையா ரீ.வியும் டெக்கும் வாங்கணும். எந்த நாளும் பக்கத்து வீட்ல போய்ப் பாக்கிறதா? நாலு பேர் மதிக்க நல்ல பேணிச்சர் செற் வாங்கிப் போடணும். ஜன்னல் கதவுகளைப் பாரன்! நல்லநாள் பெருநாள்ளயும் அம்மணமாய் நிக்குதுகள். காசு மிஞ்சினால் வீட்டையும் றிப்பேர் பாக்கவேணும்"

"சே - என்ன பொண்ணுடி நீ. உனக்குப் புள்ள பெரிசா? சாமானுகள் பெரிசா? தேவையில்லாததுக்காகப் பெத்த புள்ளையை விட்டிட்டுப் போறன் என்றியே!"

"நீ என்ன சொன்னாலும் சவூதி போயே ஆகுவன்!"

பிறந்த மண்ணை விட்டு வெளியேறுமுன் காஞ்சனாவுக்கும் அவள் அம்மாவுக்கும் நடந்த வாக்குவாதம் இது.

ஏ.சி றூமில் காஞ்சனா படுத்திருந்தாலும், அவள் உடல் பூராவும் வியர்வைத் துளிகள் மணிகளாய் உருண்டன. சொந்த வீட்டில் பாத்திர பண்டம் கழுவவும், துணிமணி தோய்க்கவும் நாணியவள் வேற்று நாட்டார் போட்டவற்றைச் சலவை செய்து இஸ்திரி போடுவதும் கைவலிக்க நிலம் தேய்த்துப் பொலிஷ் பண்ணுவதும் இப்போது காஞ்சனாவுக்கு அவமானமாகப்பட்டது.

வயசான அம்மாவுக்கு ஒத்தாசை பண்ணாமல், பெற்ற பிள்ளையையும் கவனிக்காமல் அற்ப ஆசைகளுக்காக நாட்டைப் பிரிந்து வீட்டைப் பிரிந்து பந்தபாசங்களை மறந்து வந்ததை எண்ணிய போது ஓவென்று சத்தமாய் அழலாம் போலிருந்தது காஞ்சனாவுக்கு.

தான் பெற்ற ஒரே பிள்ளையை அம்போ என்று விட்டுவிட்டு அரபுப் பொலிசின் மூன்று பிள்ளைகளுக்கு ஊழியம் செய்வதை எண்ணிய போது ஏக்கங்கள் காஞ்சனாவுக்குள் குண்டுகளாய் வெடித்து வேதனையைச் சிதறியது.

வயல் சூழ்ந்த தன் சொந்த ஊரின் பெருமை தெரிந்ததும் அவளுக்குப் பாசம் பொங்கி வழிந்தது. ஜில் என்ற காற்று, இவள் அம்மா காய்ச்சும் சள்ளல் மீன் சொதியும் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை கொடுத்தும் இங்கு வாங்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்த போது காஞ்சனாவின் கண்கள் குளமாகின. அந்த நிமிஷமே பறந்து போய்த் தன் மகளை அள்ளி அளைய வேண்டும் நீராட்டிப் புத்தாடை புனைந்து பார்க்க வேண்டும் என்று பரபரத்தாள்.

தன்தாயை உட்காரவைத்துப் பணிவிடை செய்யவேண்டும் என்ற ஆவலில் அவசரப்பட்டாள். பிறந்தநாள் கேக், பலகாரம் எல்லாம் பண்ணித் தன் அம்மாவைத் திகைப்பில் ஆழ்த்த வேணும் என்று துடியாய்த் துடித்தாள். ஐயோ பாவம் காஞ்சனா போய் இன்னும் ஆறு மாதம் கூட ஆகவில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா தப்பே செய்ததில்லையா

அற்ப விஷயங்களுக்கெல்லாம் அப்பா இப்படி ஏன் கோபிக்கிறார்? இவங்கெல்லாம் அப்பாவா வர்றதுக்கு முந்தி தப்பே செய்திருக்க மாட்டாங்களா? என்ர சிநேகிதருக்கு முன்னால அப்பா என்னைத் திட்டினாரே...? அது என்னை எவ்வளவு தாக்கியிருக்கும் என்று ஏன் அப்பாவால் யோசிக்க முடியேல்ல? என்னைக்காவது ஒருநாள் அப்பா அன்பாகப் பேசி நாம பார்த்தமா?" தினேஷ் ஒரு சட்டத்தரணி போல் தன் தாயைப் பார்த்து வாதிட்டான்.

அவன் தாய் பாக்கியத்தின் கண்கள் பயத்தால் விரிந்தன. தினேஷின் அப்பா சுந்தரத்தின் காதுகளில் இந்த வார்த்தைகள் விழுந்துவிடக் கூடாதே என்று நடுங்கினாள்.

சுந்தரம் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்தார். பாக்கியத்துக்குக் கணவனைக் கேள்விகேட்டுப் பழக்கமில்லை. அவர் கோபிக்கும் போதெல்லாம் அவளால் அமைதியாக இருக்க முடிகிறது. அழாமல் சிரிக்க முடிகிறது.

இந்தப் பண்புகளை மகனிடம் எதிர்பார்த்த பாக்கியம் ஏமாந்து போனாள். மகனுக்கும் அப்பாவுக்கும் சின்ன விஷயங்களில் கூட வாதவிவாதங்கள்.

"உங்களைப்போல் தான் உங்கள் பிள்ளைகள் இருப்பார்கள் என்று எப்படிம்மா எதிர்பார்ப்பீங்கள்? எங்களுக்கும் தன்மானம் இருக்கு. மத்தவங்களும் எங்கள மதிக்க வேணும் என்ற ஆசையிருக்கு. எல்லாத்துக்கும் மேல பெற்றார் பிள்ளைகளைப் புரிஞ்சுக்க வேணும் என்ற எதிர்பார்ப்பும் இருக்கு. ஏம்மா உங்களால இதையெல்லாம் யோசிக்க முடியிறதில்ல? சொல்லும்மா?"

தாயின் தோள்பட்டையை உலுக்கிய தினேஷ் கடைசியில் உடைந்து போனான்.

"அப்பா சத்தம் போடுறவர்தான். அவரு நல்லவர் எண்டது எனக்கு எப்போதோ புரிஞ்ச விஷயம். நான் அவருடைய வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுப்பதில்லை." பாக்கியம் தனக்குள்ளே முணுமுணுத்தாள். தினேஷ் தன் அறைக்குள் போய் சாப்பிடாமல் இருந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஏ.எல் முடித்துவிட்டு, கொம்பியூட்டர் டிப்ளோமாப் படித்துக்கொண்டிருந்தான். வயசு இருபத்திஇரண்டைத் தாண்டவில்லையானாலும் வாட்டசாட்டமாயிருந்தான்.

குடும்பத்தில் ஒரே பிள்ளை. தகப்பனின் சிடுசிடுப்பைத் தாங்க முடியாது போனால் அம்மாவோடு அதைச் சொல்லிக் காட்டுவதில் தினேசுக்கு அப்படியொரு திருப்தி.

சுந்தரம் கிணற்றடியிலிருந்து குரல் கொடுத்ததும், பாக்கியம் தோளில் துவாயைப் போட்டுக்கொண்டு விரைந்தாள். அவர் குளிக்கப் போகும் போது துவாய் கொண்டுபோகும் பழக்கமில்லை என்று நினைத்த பாக்கியத்தின் உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

சுந்தரத்துக்கு புறமோஷன் கிடைத்த செய்தி பாக்கியத்தில் காதில் தேனாகப் பாய்ந்தது. அன்று மாலை அவருடைய ஆபீஸ் நண்பர்களுக்குப் பார்ட்டி. ஆட்டமும் பாட்டும் இல்லாவிட்டாலும் அமர்க்களம் பண்ணிவிட்டார் சுந்தரம். ஆனால் அவர் மனதில் ஒரு முள்ளாய்க் குத்திய அந்த விஷயம், அவரை வேதனைப்பட வைத்தது.

அவர் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக கூடத்தில் நடந்தார். "பாக்கியம்..." சுந்தரத்தின் கர்ஜனை கேட்டு அவள் இயல்பான அமைதியுடன் வந்து நின்றாள்.

"உன்ர மகன் செய்த காரியத்தைப் பார்த்தியா? என்ர மானம் போச்சு.. கௌரவம் போச்சு... ச்சீ சிகரட் பாக்கட் வாங்கியா என்று சொன்னன் பார்... வெட்டொன்று துண்டு ரெண்டாய் "மாட்டன்" என்று சொல்லிற்றில்லையா போனான்? ச்சே நம்மைப் பத்தி வந்தவங்க என்ன நினைச்சிருப்பாங்க? இடியட்" அருகிலிருந்த மேசையில் ஓங்கியடித்துக் கத்தினார் சுந்தரம்.

"தினேஷின்ர பிறெண்ட்ஸ் நேத்து நம்மைப்பத்தி என்ன நெனைச்சிருப்பாங்களோ... அதையேதான் உங்க பிறெண்ட்ஸும் இன்னக்கி நெனைச்சிருப்பாங்க" முதல் முறையாகப் பாக்கியம் நிதானமாகச் சொன்ன பதில் சுந்தரத்தின் தலையில் ஓங்கி அடித்தது போல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபச்சாரம்

அலாரம் செல்லமாகச் சிணுங்கி மணி ஆறைக் காட்டியது. றெஜீனா விழித்துக்கொண்டாள். அவள் கணவன் வியாபார விஷயமாகக் கொழும்புக்குச் சென்றதை நினைத்துக் கொண்டாள். தன்னை மூடியிருந்த போர்வையை காலால் உதைத்துத் தள்ளினாள். எழுந்து சென்றவள் திரைச்சீலையை இழுத்து ஜன்னலைத் திறந்தாள்.

வானத்திலிருந்து லேசான மழைத்தூறல் பூமியை நோக்கி விழுந்து கொண்டிருந்தது. அந்த விடியற் காலையில் சிலுசிலுவென்ற காற்று றெஜீனாவின் மேனியைத் தடவிச் சென்றது. பார்வையைத் தூர மேயவிட்டாள் றெஜீனா. செடி கொடிகள் பூத்துக் குலுங்கின. தான் எப்போதோ ஆசையாக வைத்த செடியில் பட்டுரோஜா ஒன்று தலையசைத்துக் கொண்டிருந்தது. வசந்தகாலத் தடயங்கள் வழிநெடுகிலும் அடிபதித்திருப்பதைக் காண றெஜீனாவுக்குத் தனது வாழ்விலும் வசந்தத்தை எதிர்பார்த்ததை எண்ணிப்பார்த்தாள்.

றெஜீனாவை அழகி என்று சொல்லாவிட்டாலுங் கூட பார்ப்பதற்கு இலட்சணமாய் - கவர்ச்சியாய் இருந்தாள். அவளுடைய கணவன் றொபட் பிரபல்யம் வாய்ந்த ஒரு நகைக்கடை உரிமையாளன். பெனான்டஸ் முதலாளியைத் தெரியாதவர்கள் இல்லை என்று சொல்லலாம். அவரின் ஒரே வாரிசு றெஜீனா. அவளை உத்தியோகம் பார்க்கும் ஒருவனுக்கே கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாயிருந்தார். ஆனால் சமயம், சாதகம், வயது என்று வரும்போது பெனான்டஸ் விரும்பியோ விரும்பாமலோ றொபட்டை மருமகனாக்கிக் கொண்டார்.

றெஜீனா குழந்தைச் சுபாவம் கொண்டவள். சுறுசுறுப்பும் படபடப்பும் அவளோடு கூடப்பிறந்தவை. கலகலப்பின்றி அமைதியாக ஆனால், கண்ணியமாக இருப்பவன்தான் றொபட், வறுமையின் பிடியில் பிறந்த றொபட், படிப்படியாக முன்னேறியதற்கு அவனுடைய விடாமுயற்சியும் தன்னம்பிக்கையுந்தான் காரணம். காலையில் தொழிலுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றால் மாலையில் தான் வீடு திரும்புவான். றெஜீனாவுக்கு எந்தக் குறையும் வைக்காமல் கவனித்துக் கொள்வான். றெஜீனா வீட்டு வேலைகளையும் சமையலையும் கச்சிதமாகச் செய்வதில் கைதேர்ந்தவள். இதற்கு உதவியாக இருப்பவள்தான் முனியம்மா. அவள் அடிக்கடி வெற்றிலை போட்டு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் தனது பற்களைக் காவியாக்குவதில் பலே கெட்டிக்காரி. இந்த வர்ணப் பற்களைப் பார்த்து வெளிப்படையாகவே சிரித்துக்கொள்வாள் றெஜீனா.

அன்று வழமைக்கு மாறாக றொபட் மதிய வேளையில் வீடு வந்ததைப் பார்த்த றெஜீனாவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. றொபட்டின் தம்பி அமெரிக்காவிலிருந்து இங்கு வந்து மூன்று வாரங்கள் தங்கப்போகும் செய்தியைச் சொன்னான்.

றெஜீனா அவசர அவசரமாக வீட்டை அழகுபடுத்துவதில் முனைந்தாள். றொபட்டின் தம்பி ஜோணுக்காகப் பிரத்தியேக அறை ஒன்றையும் தயார் செய்து வைத்தாள்.

ஜோண் வந்து சேர்ந்தான். பார்ப்பதற்கு அழகாய் இளமையாய் இருந்தான். அவனுடைய கலகலப்பு வீட்டை நிறைத்தது. அவனுடைய அரையுங் குறையுமான தமிழ், சரளமான ஆங்கிலம் றெஜீனாவை வியப்பிலாழ்த்தியது. அவன் "அண்ணி அண்ணி" என்று றெஜீனாவை வளையவந்தான். அமெரிக்கப் பெண்களைப் பற்றிக் கதைகதையாய்ச் சொல்லி அவளை வயிறு குலுங்கச் சிரிக்கவைத்தான். றெஜீனாவுக்குப் பொழுது போவதே தெரியாது? அவளுக்கு ஜோணை மிகவும் பிடித்திருந்தது. றொபட்டுடன் ஜோணை ஒப்பு நோக்கிப் பார்த்தாள். றொபட் ஜோணைப் போல் இல்லையே என்று ஏங்குவாள். சுபாவ முரண்பாடுகள் அடிக்கடி றெஜீனாவை பிறாண்டின. மூன்று வாரங்கள் அவளுக்கு மூன்று நிமிஷங்களாளப் பறந்தது.

ஜோண் அமெரிக்கா சென்று ஒரு வாரமாகிவிட்டது. றெஜீனாவுக்கு வீடு வெறிச்சோடியது போல் தெரிந்தது. சூனியம் அவளைச் சுற்றி வளைத்தது. துள்ளித் திரிந்தவள் துவண்டு போனாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏம்மா உங்களுக்கு என்னாச்சு? சொகமில்லையா?" முனியம்மா கேட்டாள்.

அதே கேள்வியைத் தனக்குத் தானே கேட்டாள் றெஜீனா. பதில் கேள்விக்குறிதான். றொபட் அமைதியாய் இருந்தாலும் இதை அவதானிக்கத் தவறவில்லை.

காய்கறி வெட்ட அடுக்களைக்குச் சென்றாள் றெஜீனா. அரிவாளில் கத்தரிக்காய் நறுக்கியவளின் கற்பனை அமெரிக்காவுக்கு ஒருகணம் இறக்கை கட்டிப் பறந்தது. அவளை அறியாமலே அவள் இதயத்தில் ஜோண் இன்ப ராகத்தை மீட்டினான். றெஜீனா அவனுடன் கைகோர்த்து அமெரிக்காவில் சுற்றுலா சென்றாள். அவனைக் கட்டியணைத்தாள். அவன் மடிமீது விளையாடினாள். அவள் கைகளில் அவன் முகத்தை ஏந்தி முத்தமிட்டாள்.

அரிவாள் அவள் விரலைச் "சுருக்" என்று வெட்டிவிட்டது. றெஜீனா சிலிர்த்துக்கொண்டாள். "ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும் ஏற்கனவே தன்னுள்ளத்தில் விபச்சாரம் செய்தாயிற்று" என்ற வேதாகம வாக்கியம் அவள் நினைவுக்கு வந்தது. விபச்சாரத்துக்கு இயேசு சொன்ன அர்த்தம் அவளைச் சுட்டது.

றெஜீனாவின் விரலில் மட்டுமல்ல இதயத்திலும் இருந்து இரத்தம் வடிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்மானம்

"இஞ்ச பாருங்கோ! இண்டக்கி விசாலாட்சி வீட்ட போகவேணும் எண்டு சொன்னனான் அல்லோ?" கனகு அவள் கணவன் கந்தப்பருக்குச் சத்தமாய்க குரல் கொடுத்தாள், சமையல் கட்டிலிருந்து.

"சத்த பொறு வாறன்" என்று உரக்கப் பதிலளித்த கந்தப்பர் மூக்குக் கண்ணாடியை வேட்டித் தலைப்பால் துடைத்துவிட்டுப் பஞ்சாங்கத்தைப் புரட்டினார். பாலப் போடியின் மகள் கால்மாறி மாப்பிள்ளை வீட்டுக்குப் போக நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருந்தார் கந்தப்பர்.

உழுந்து வடை வாசம் அவர் மூக்கில் வந்து மோதியது. பஞ்சாங்கத்தை ஒரு பக்கமாய்ப் போட்டுவிட்டுப் புன்முறுவலுடன் குசினிப்பக்கம் போனார். கனகு ஒரு கையால் வடையைத் தட்டிக்கொண்டு மறுகையால் எண்ணைச் சட்டியில் அதைப் போட்டுச் சிலுசிலு என்று சுட்டு இறக்கும் லாவகத்தைப் பார்த்து இரசித்தார்.

"கனகு என்ன விஷேசமெண்டு சொல்லன். ஒருநாளுமில்லாம வடகிட எல்லாம்?" அவள் கவனத்தைத் திருப்பினார் கந்தப்பர். மூலையில் சாத்தியிருந்த திருவிலக் குத்தியை எடுத்து வசதியாகக் காலை மடித்து அதில் குந்தியிருந்தார்.

"இந்தாங்கப்பா! மாங்காப் பச்சடி போட்டிருக்கன். வடையோட திண்டு பாருங்களன் நல்லாரிக்கா எண்டு" கனகு வட்டிலில் இரண்டு வடையைப் பச்சடியுடன் வைத்து நீட்டினாள். கந்தப்பர் வடையைப் பச்சடியுடன் தொட்டுச் சுவைத்தார்.

"கனகு சும்மா சொல்லப்படாது. உப்பும் புளியும் உச்சில அடிச்சாப்ல இருக்கு. வடையும் சூட்டோட சாப்பிட ருசியாத்தானிருக்கு." கனகுக்குச் சந்தோஷம் கொடுப்புக்குள் புரண்டது.

"இஞ்ச பாருங்க, கெதியெண்டு வெளிக்கிடுங்கப்பா! விசாலாட்சிக்கு வடையும் பச்சடியும் பார்சல் கட்டித்தாறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர பழைய கூட்டாளி கனகாலத்துக்குப் பிறகு கனடாவிலிருந்து வந்திருக்கிறா. அவளுக்கு உழுந்து வடையெண்டா உசிர். புளியந்தீவில முந்தி இருந்த வீடு தெரியுந்தானே?" கனகு படபடவென்று ஒரே மூச்சில் சொல்லிமுடித்தாள்.

"ஓகோ அதுதானே பார்த்தன். சோழியான் குடுமி சும்மா ஆடாது. இவ்வளவு கஷ்டத்திலயும் கூட்டாளிய நீ மறக்கல்ல" கந்தப்பருக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "சரி சரி பார்சலைக் கட்டு" என்றவர் எழும்பிப் போனார். நீலக் கரபோட்ட வேட்டியும் சால்வையும் தைலாப் பெட்டிக்குள்ள கிடக்கு" கனகு சொன்னது கந்தப்பரின் காதில் விழுந்தது.

கந்தப்பர் புறப்பட்டுப் போனார். கொளுத்தும் வெயில் அவருடைய வாட்டாச் சிலிப்பரையும் மீறிக் காலைச் சுட்டது. நல்லவேளை தலைக்குப் பாதுகாப்பாகப் பெரிய குடையை விரித்துப் பிடித்திருந்தார். பார்சலைப் பையில் திணித்து அதைத் தோளில் தொங்கப் போட்டிருந்த கந்தப்பர் பழைய நட்பை நினைவில் சுமந்து நடந்தார். கல்லடித் தெருவைக் கண்டுபிடித்ததில் அவருக்குக் கஷ்டமிருக்கவில்லை.

"அன்பகம்: இருபத்திநாலாம் நம்பர். சரிதான் வீடு வித்தியாசமாய் இருக்கே?" கந்தப்பர் முணுமுணுத்தபடி அழைப்பு மணியை அழுத்தினார். "யாரு கந்தப்பரா? என்னடாப்பா மிச்சங் காலத்துக்குப் பிறகு... வா.. வா!" வாசல் கதவைத் திறந்து வரவேற்றார் விநாயகம்.

கந்தப்பர் கதவடியில் சிலிப்பரைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே போய் உட்கார்ந்தார். அவரால் நம்ப முடியவில்லை. வீடே மாறிப்போய் இருந்தது. விதவிதமான பொருட்கள். திரைச் சீலைகள். நில விரிப்புக்கள். அலங்கார விளக்குகள். அவரை வியப்பிலாழ்த்தியது.

"விசாலாட்சி இங்க வந்து பாரன்" என்று விநாயகம் சத்தம் போட்டுச் சொன்னார். திரைச் சீலையை ஒதுக்கிக்கொண்டு விசாலாட்சி வந்தாள்.

அவள் முதுகில் சாரைப்பாம்பாய் நீண்டு கிடந்த கருங்கூந்தல் கழுத்துவரை ஒட்ட வெட்டப்பட்டிருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பரால் தாங்க முடியவில்லை. வெளிப்படையாகவே கேட்டுவிட்டார்.

"இந்தக் கூந்தலோட கனடாவில் காலங்கழிக்கிறது லேசில்ல... பாம்பு தின்ற ஊருக்குப் போனா, நடுத்துண்டு நமக்கு, ஊரோட ஒத்துப்போக வேண்டியதுதான்." விசாலாட்சி பதிலளித்தாள். "கனகுவோட வயல் வரம்பில ஓடிப்பிடிச்சி விளையாடிய விசாலாச்சியா இது?" கந்தப்பர் மனதில் அவசரமாக வந்த நினைவு அங்கேயே அடங்கிப் போயிற்று.

"அது கிடக்கட்டும் விசாலாட்சி, கந்தப்பர் இண்டக்கிச் சாப்பிட்டுத்தான் போகவேணும்" என்றார் விநாயகம். "பிள்ள விசாலாட்சி ஒண்டும் அவதிப்படாத. நான் அவசரமாப் போகவேணும். உன்ர கூட்டாளி கனகம்மா உனக்கு வடை புரியமாம் எண்டு தந்தவ" பைக்குள் இருந்த பார்சலை எடுத்து அவளிடம் நீட்டினார்.

"என்ர சுவாமி... கனகு எண்டா கனகுதான்." விசாலாட்சிக்குத் தலைகால் தெரியாத சந்தோஷம்.

"பார்த்தியா அவ ஒன்னையும் மறக்கல, வடையையும் மறக்கல" விநாயகத்தின் கண்களில் நன்றி பளிச்சிட்டது.

கந்தப்பர், கதிரையில் கிடந்த சால்வையை எடுத்துத் தோளில் போட்டுப் புறப்பட ஆயத்தமானார்.

"மணி ரெண்டால கிறுக்கிற்று சாப்பிடாமல் போக விடமாட்டன்" என்ற விநாயகம் கந்தப்பரின் சால்வையை இழுத்து மறுபடியும் கதிரையில் போட்டார்.

"இண்டைக்கு வேணாம். இன்னொரு நாளைக்குச் சாப்பிடுறன்" என்றார் கந்தப்பர்.

"நீ என்னடாப்பா இது புறத்திவீடா? உன்ர வீடு மாதிரி.." கந்தப்பர் எவ்வளவோ சொல்லியும் விநாயகம் அவரைப் பிடிவாதமாகச் சாப்பிட வைத்துவிட்டார்.

"சரி பிள்ள நான் போயிற்றுவாறன். மாமாங்கப் புள்ளையார் தீத்தம் வருகுது தானே? ரெண்டு பேருமா வீட்ட வந்து நிண்டு போங்க, கனகம்மாக்கும் சந்தோஷமாயிருக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்பர் அழைப்பு விடுத்து அங்கிருந்து வெளியேறினார். நடையின் வேகத்தைக் கூட்டியவருக்குக் கொஞ்சத் தூரம் சென்றதும் அவருடைய தலை வெடிக்குமாப்போல வெயில் சுட்டது தெரிந்தது. "அடடே குடையை விநாயகம் வீட்டில் விட்டு வந்திற்றனே" அப்போதுதான் கந்தப்பருக்கு ஞாபகம் உதைத்தது. ஓட்டமும் நடையுமாக அன்பகத்தை நோக்கிப் பறந்தார்.

வாசல் கதவு திறந்தே கிடந்தது.

"உங்களுக்குக் கொஞ்சமெண்டான அறிவிருக்கா? சும்மா பாக்க வந்த ஆளைச் சாப்பிடு சாப்பிடு என்டு என்ன பாடு பட்டியள். உங்களைப் போன்ற சென்மங்கள் கனடா என்ன எங்க போனாலும் திருந்தவே மாட்டாங்க"

"வாசலுக்கு வந்த மனுஷனைச் சாப்பிடச் சொன்னது குத்தமா? அதுவும் வேற ஆருமில்லை. நம்ம பழைய கூட்டாளி"

"ஆ பெரிய கொடைவள்ளல். வாறவன் போறவனுக்கெல்லாம் அவிச்சுக்கொட்ட நான் ஆளில்ல. கந்தப்பர் வேணாம் வேணாம் எண்டு சொல்லியும் கேட்டீங்களா? அப்பா உருகிவடிஞ்சீங்களே. பழசுகளையெல்லாம் இழுத்துப்புடிக்க நானொண்டும் பழைய விசாலாட்சி இல்லை. அதையும் தெரிஞ்சிவைச்சிக்குங்க"

உள்ளே இருந்து வாசல் வரை வந்த வாக்குவாதம் கந்தப்பரின் காதிலும் எட்டத்தான் செய்தது. கந்தப்பர் ஆடிப்போனார். அவமானம் தாங்காது கூனிக்குறுகினார். சாப்பிட்டதெல்லாம் அடிவயிற்றில் "திகீர்" என்று பற்றி எரிவது போலிருந்தது.

கந்தப்பர் குடையை மறந்தார். வீடு நோக்கி விரைந்தார். இப்போது அவருக்குத் தலைச்சூடு தெரியவில்லை. அவர் உள்ளம் உலைக்களமாய்க் கொதித்தது. "உயிரே போனாலும் இனிமேல் யார் வீட்டிலும் வாய் நனைக்கப் போவதில்லை" என்ற தீர்மானம் அதில் உறுதியாக ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்குத் தெரியாத உண்மை

அமைதியாக இருந்த சுற்றுப் புறம் அந்த ஜீப்பின் வருகையால் அலைக்களிக்கப்பட்டது. வீட்டிற்குள்ளிருந்து தலைவிரி கோலமாய் ஓடிவந்த தெய்வானை வாசல் கதவை அவசர அவசரமாகத் திறந்தாள். அரிக்கன் லாம்பு ஒன்றைக் கையில் பிடித்திருந்தாள்.

என்னவோ ஏதோ என்று அண்டை அயலவர்கள் படபடத்து நடுங்கிய ராத்திரி வேளை: தெய்வானை எதுவித பதட்டமுமின்றிக் காணப்பட்டாள். அவள் கண்களில் ஆவல் பளிச்சிட்டது. அந்த ஜீப் தன்னுடைய வாசலில் வந்து நிற்கும் என்று எண்ணிய தெய்வானைக்கு ஏமாற்றம் முகத்தில் பரவியது.

எல்லா வீடுகளும் உறங்கிப் போயின. தெருவின் மறுமுனையில் நாராயணனின் டீக்கடை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இந்தக் கடை அந்தத் தெருவில் பிரசித்தம். நள்ளிரவு வரை புட்டு, இடியப்பம் என்று டீயோடு சேர்த்து விற்பான். அவனுடைய இறைச்சிப்பிரட்டலுக்குத் தனி மவுசு. நாராயணனின் பழைய கிறமபோன், பராசக்திப் படப்பாடல் களைத் திரும்பத் திரும்பப் பாடிக்கொண்டேயிருக்கும்.

தெய்வானை வீதி முனைவரை பார்வையால் நோட்டம் விட்டாள். நாராயணன் கடை முன்னால் அந்த ஜீப் போய் நின்றிருந்தது. அது ஒரு இராணுவ ஜீப். தெய்வானை வாசல் கதவைச் சாத்தக் கூட மறந்தாள். அரிக்கன் லாம்பை மேசையில் வைத்தவள் தரையில் உட்கார்ந்து சுவரில் மாட்டியிருந்த படத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்தாள். சல்வார்க் கமிசில் சுந்தரி சிரித்துக்கொண்டிருந்தாள். தெய்வானை தன் முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டு அழுதாள். "சுந்தரி நீ ஏம்மா படிக்க ஆசைப்பட்டாய்?" என்று புலம்பினாள்.

சுந்தரி தெய்வானையின் ஒரே பெண். நடுத்தரக் குடும்பம். மத்திய கிழக்கில் அவள் அப்பா ஆறுமுகம் வேலைக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்து மூன்று மாதங்கள் தான். ரஷ்யா நடத்தும் புலமைப் பரிசில் பரீட்சை ஒன்றுக்கு சுந்தரி தெரிவாகியிருந்தாள். தெய்வானையின் மனதுக்குள் மத்தாப்பு. சுந்தரியின் கெட்டித்தனத்தைத் தனக்குள்ளே வியந்தாள்.

இடியப்பமும் இறால்வறையும் சுந்தரிக்குப் பிடிக்கும். தெய்வானை அதைத் தயார் செய்து கொடுத்தாள். அதுவே தன் மகளுக்குத் தான் கொடுக்கும் கடைசிச் சாப்பாடு என்பதை அந்தத் தாய் அறிந்திருக்கவில்லை.

தன் நண்பிகளுடன் கொழும்பு நோக்கிப் புறப்பட்ட சுந்தரி பரீட்சையை எழுதிவிட்டு வீடு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தாள். வழிநெடுகத் தன் எதிர்காலக் கற்பனையில் மிதந்து மகிழ்ந்திருந்தாள்.

சோதனை முகாம் ஒன்றில் பஸ் குலுங்கித் தரித்ததும் சுந்தரி சுயநினைவுக்கு வந்தாள். முண்டாசு கட்டிய இராணுவம் தன் சோதனையை முடுக்கிவிட்டது. பதட்டத்துடன் எல்லோரும் இறக்கப்பட்டனர். பல பேருடன் வந்த பஸ் சில பேருடன் புறப்பட்டது. தடுத்து நிறுத்தப்பட்டவர்களுள் சுந்தரியும் ஒருத்தி. அவளுடைய நண்பிகள் யாரும் அகப்படவில்லை.

தெய்வானை வாசலில் விழி வைத்து நின்றாள் சுந்தரி வாருவாளென்று. அவள் நண்பிகள் கொண்டுவந்த செய்தி "சுந்தரி இறக்கப்பட்டாள்" என்பதுதான். இடிவிழுந்த மரமாகிப் போனாள் தெய்வானை. அழுதழுது அவள் கண்களில் நீர் வற்றிவிட்டது. நாட்கள் வாரங்களாகி வருஷங்கள் மூன்றைக் கடந்து விட்டன. சுந்தரி எங்காவது ஒரு முகாமில் இருப்பாள் என்ற நப்பாசை, தெய்வானைக்கு. என்றைக்காவது இராணுவம் தன் மகளைத் தருமோ என்ற அங்கலாய்ப்பு. சுந்தரி விடுதலை பெற்று வீட்டுக்கு ஒருநாள்... ஜீப்பிலோ பஸ்ஸிலோ வருவாள் என்று காத்திருக்கிறாள் தெய்வானை. அவளைப் பைத்தியமாகப் பார்க்கும் ஊரவர்களுக்கு மட்டுந்தான் தெரியும் "சுந்தரி உயிருடன் இல்லை" என்ற உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்

அறையின் மூலையிலிருந்த அலுமாரியை மரகதம் திறந்தாள். அது அவள் கணவன் சாரங்கனுடையது. பொன்னாடைகள், விருதுகள், பாராட்டுப்பத்திரங்கள், வாழ்த்து மடல்கள் என்றிப்படி அலுமாரித் தட்டுகளை அலங்கரித்தன.

"மரகதம் நீ குடுத்துவைச்சவ: பிரபல எழுத்தாளர் சாரங்கனின் மனைவி என்று சொல்றப்போ உனக்கு எவ்வளவு பெருமை?" மரகதத்தின் காதில் அவள் கணவன் அடிக்கடி கிசுகிசுப்பது இப்போதும் நிஜமாகக் கேட்பது போல் இருந்தது. அவள் முகம் அனிச்சம் பூவாய் வாடியது.

"இந்தப் புகழும் பொன்னாடைகளும் என் கணவரைக் காப்பாற்ற கொஞ்சமும் உதவவில்லையே" மரகதத்தின் இதயத்தில் விழுந்த கீறல்கள் கண்ணீராய் வடிந்தது. பழைய நினைவுகள் நிழலாடுவதை அவளால் தடுக்க முடியவில்லை.

"அப்பா நான் ஏ.எல் பாஸாகிட்டன். ரூஏ - ரூஸி. கட்டாயம் எனக்குக் கம்பஸ்ல இடம் கெடச்சிடும்" மகிழ்ச்சியில் துள்ளினாள் அந்தப் பதினெட்டு வயது மரகதம்.

"கம்பசும் வேணாம். ஒரு மண்ணும் வேணாம். றாக்கிங், ஸ்ட்ரைக் எண்டு உயிரை வாங்குவாங்க. உனக்கொரு கலியாணம் பண்ணிப் பார்க்க ஆசைப்படுறேம்மா. நீ தாயில்லாதவ. காலா காலத்ல நான் என் கடமையைச் செய்யணும். மாப்பிள்ள வேறு யாருமில்லை. எஞ்சினியர் பிரசாந்த். ஆயுளுக்கும் உன்னைக் கஷ்டப்படவிடாமக் காப்பாத்துவான்." மரகதத்தின் அப்பா சிவராம் மூச்சு விடாமல் சொல்லிமுடித்தார்.

மரகதத்துக்குத் தூக்கிப் போட்டது. "அப்பா எனக்கு எஞ்சினியர் வேணாம்பா. பிரபல எழுத்தாளர் சாரங்கன ரொம்பப் பிடிக்கும். அவரிட விசிறி நான். அவர நான் பார்த்ததில்ல.. ஆனா ஒரு எழுத்தாளன முடிக்க..." மீதியைச் சொல்லி முடிக்குமுன் அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராம் மகளின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. என்றாலும் சொல்ல வேண்டியதாச் சொன்னார். "மரகதம் உன் இஷ்டத்துக்கு மாறாய் எதையும் நான் செய்யப்போவதில்லை. ஆனா ஓண்ணு. ஒரு எழுத்தாளன முடிச்சு நீ வசதியா சந்தோஷமா இருப்பியோன்னு எனக்குச் சந்தேகமாருக்கு. வெறும் புகழ் வயிற்றை நிரப்பாது. ஒரு நல்லது கெட்டது வரும்போது ஒரு எழுத்தாளன் மனைவியால் என்ன பண்ண முடியும்?" சிவராமின் பழுத்த • அனுபவம் பேசியது.

அதையும் மீறி பிரபல எழுத்தாளர் சாரங்கனுக்கும் மரகதத்துக்கும் திருமணம் நடந்து இருபது ஆண்டுகளாகி விட்டன. "அன்று அப்பா சொல்லியதில் தப்பில்லையே" என்று ஒருகணம் எண்ணிய மரகதம் நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

"அம்மா..." என்று குரல் கேட்டு அவள் நினைவுகள் நிமிஷத்தில் ஓடி ஒளிந்தன. மட்டையும் பந்துமாக ஓடி வந்தவன் மரகதத்தின் ஒரே வாரிசு மயூரன். அவன் மரகதத்தைக் கட்டிக்கொண்டான். அவன் உடல் பூராவும் வியர்வையில் குளித்திருந்தது.

"மயூரன் நீ ரியுஷன் போகல? எப்போ பார்த்தாலும் விளையாட்டுத் தானா? எக்ஸாம் நெருங்குதில்லையா? படிச்சி ஆளாகிற எண்ணம் கொஞ்சமாவது இருக்கா?" மரகதம் கேட்டாள். அவள் குரல் உடைந்தது. "ஏ.எல் பாஸாகி என்னம்மா பண்றது? எல்லாத்துக்கும் பணந்தான் தேவை. அப்பா படிச்சுப் பாஸாகினவர் தான். நாடறிந்த எழுத்தாளர். பேச்சாளர் தான். கடைசியில என்னாச்சு? அப்பாவுக்கு பக்கவாதம் வந்து படுக்கையில் கஷ்டப்பட்டாரே? யாரு உதவினா? நல்ல வேளை தாத்தா இருந்தப்போ அவர் தெய்வமா உதவினார். அப்பா இறந்ததும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று பத்திரிகைகளும் வானொலியும் கவலை தெரிவிச்சதே போதுமா? அப்பாவுக்குக் கிடைத்த பொன்னாடைகளால் அவரைப் போர்த்தக்கூட முடிஞ்சுதா? இவ்வளவு பெரிய எழுத்தாளனைக் காப்பாத்த காசுதான் நம்மிடம் இருந்துதா?" மயூரன் உணர்ச்சிவசப்பட்ட மேடைப் பேச்சாளனாக மாறிப்போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரகதத்தின் தலை கவிழ்ந்திருந்தது. பொட்டுப் பொட்டாய்க் கண்ணீர் ஊதிர்ந்தது. "மயூரா முடிந்த கதைக்கு மீண்டும் ஆரம்பமா? இப்படியொரு அப்பா கிடைக்கக் குடுத்து வைக்கணும். நீ எதையும் யோசிக்காமப் படி." மரகதம் சொல்லி முடிப்பதற்கிடையில் மயூரன் "மாட்டென்" என்றான் உறுதியாக. மரகதம் அதிர்ச்சியில் ஆடிப்போனாள்.

"அம்மோய் அதிர்ச்சியடையாதீங்க. ஆனந்தப்படுவீங்க. இப்போ கல்வியை விட கிரிக்கட்டுக்கு நல்ல கிராக்கி. ஓட்டத்துக்கு நல்ல மவுசு. எவ்வளவு பெரிய படிப்பாளிக்குக் கூட இப்படியொரு மதிப்பு, வரவேற்பு இல்லேம்மா. அடேயப்பா, வீடு, கார், காணி, பூமி எல்லாமே இலவசம். உலகப்புகழ், விளம்பரம் எவ்வளவு சம்பாத்தியம் தெரியுமா? கல்வியா? விளையாட்டான்னு நான் முடிவுபண்ணிற்றன். நீ மகாராணி மாதிரி இருக்கலாம்மா. படிச்சிற்று வேல தேடி அலையிறதவிட விளையாடிற்றுப் பணக்காரனாயிடலாம்." மயூரன் சொன்ன வார்த்தைகளில் ஏதோ ஒரு உண்மை எட்டிப் பார்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணி

அகல்யா கட்டிலில் கண்விழித்தபடி கிடந்தாள். எழும்பு வதற்கு மனமில்லாத உடம்பு கனதியான கம்பளிக்குள் புதைந்து கிடந்தது. அவள் அடிவயிற்றில் அடிக்கடி ஒரு அசாதாரண வலி அதன் வேதனை அவள் முகத்தில் இடையிடையே தலைகாட்டி மறைகிறது. பள்ளிக்கூடம், பிள்ளைகள் என்று ஏழு ஆண்டுகளை எப்படியோ கழித்துவிட்டாள் அகல்யா. சனி, ஞாயிறு என்றால் ஒரு ஆறுதல் அவளுக்கு.

சுவர்க்கடிகாரம் ஒன்பது முறை ஒலித்தது. அகல்யா ஒருக்களித்துப் படுத்தபோது பார்வை அவள் அண்ணியின் படத்தில் பதிந்தது.

கட்டையாச் சடைத்துச் சுருண்ட கேசம். ஒடிந்து விழும் மெலிவு. கறுப்பு நெற்றியில் சின்னதாய் ஒரு ஸ்ரிக்கர் பொட்டு. ஸ்கேட் பிளவுசில் நின்று சிரித்தது.

அண்ணியை அடையாளங் காட்ட இவை போதும். "இவளா என் அண்ணி?" அகல்யா விட்ட பெருமூச்சு அவள் ஏக்கத்தை வெளியே தள்ளியது.

"ச்சே இப்படியொரு அண்ணியையா நான் எதிர்பார்த்தேன்? அப்சரசாய் ஒரு அழகிய பெண் அவள் கண்முன் தோன்றி மறைந்தாள்.

"அண்ணாவுக்கு மட்டும்... எப்படிப் பிடிச்சது? நகை நட்டு என்று ஒரு பொட்டுத் தங்கம் கூட அவள் உடம்பில் இல்லையே. ஆனா ஒண்ணே ஒண்ணு தான் உண்டு. அந்த உதடுகளில் எப்போதும் மாறாத புன்னகை."

நினைவுகளில் நீந்திய அகல்யாவுக்கு அவள் அண்ணனிடம் டாக்டர் சொன்னது முள்ளாய் உறுத்தியது.

"உங்கள் தங்கைக்கு கருப்பை வாயிலில் ஒரு கட்டி வளர்ந்திருக்கு. இதை விட்டுவைத்தால் ஆபத்து. கூடிய சீக்கிரம் ஆபரேஷன் செய்ய வேணும். டாக்டர் சித்திரவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நிபுணர். அவருடைய தனியார் மருத்துவ மனையில் செய்வதாயின் பத்தாயிரம் ரூபாய் செலவாகும்."

பாவம் அண்ணா, பத்தாயிரத்துக்கு எங்கே போவார்? உழைத்த பணமெல்லாம் சேலை, சட்டை, பிறெண்ட்ஸ் களியாட்டு என்று வீணாக்கியதை எண்ணி வருந்தினாள்.

நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த அகல்யாவுக்கு ஒரேயொரு அண்ணன். ஒருவர் பின் ஒருவராய்ப் பெற்றவர்களை இழந்து, இருவராய் வாழ்ந்தார்கள். அகல்யாவுக்குத் தந்தை தாய் எல்லாமே அண்ணன் ஆதவன் தான்.

அவன் தங்கைக்காக வாழ்ந்தான். வயசு முப்பத்தைந்தைத் தாண்டியும் கலியாணத்தைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. தங்கைக்காக மாப்பிள்ளை வேட்டையில் இறங்கினான். சாதி, சமயம், சீதனம், சாதகம் என்றிப்படி எல்லாமே தட்டிப் போயிற்று. அகல்யா ஆசிரியத் தொழிலில் தன்னை மறந்தாள்.

"எனக்குக் கலியாணமே வேண்டாம். இன்னொருவனுக்கு மனைவியா இருப்பதைவிட காலம் பூராவும் உனக்குத் தங்கை யாக இருக்கிறேன். நீ மட்டும் எனக்கொரு அண்ணியைத் தந்துவிடு" என்று அடிக்கடி சொல்லுவாள் அகல்யா.

ஒரு நாள்... ஆபீஸ் விட்டு வந்ததும் "அகல்யா, உனக்கொரு அண்ணி கெடைச்சாச்சு" ஆதவன் குழந்தையைப் போல கைதட்டிச் சொன்னான்.

"ஹாய், உனக்குக் கூடக் காதலிக்கத் தெரியுமா?"

"சும்மா போம்மா.... உன்னைத் தவிர நான் வேறொரு ஜீவனை மனசில் போட்டதில்லை. ஆபீஸ்ல மனேஜர் நடராஜ் தான் இந்த அண்ணியைப் பத்தி நெறையச் சொன்னார். வங்கியில் குமாஸ்தா. பெயர் மஞ்சுளா. ஆனா ஒண்ணு உனக்குப் புடிக்காத எதையும் நான் செய்யமாட்டேன்." ஆதவன் உணர்ச்சிவசப்பட்டான்.

"பர்மிஷன் கிறான்ரட்" நறுக்கென்று சொன்னாள் அகல்யா. அவளுடைய குழந்தைத் தனத்தை எண்ணியதும் வாய்விட்டுச் சிரித்தே விட்டான் ஆதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணியை முதன் முதலில் பார்த்த அகல்யாவுக்கு ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது. கலியாணம் ஆடம்பரமின்றி நடந்து முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன.

அண்ணியின் அன்பையும் பரிவையும் புரிந்துகொள்ள முடியாமல் அகல்யாவின் இதயக் கதவு பூட்டியே கிடந்தது. இதற்குக் காரணம் அண்ணியின் தோற்றமா? இது அவளுக்கே கேள்விக்குறி. சிந்தனையிலிருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக்கொண்ட அகல்யா எழுந்து சோம்பல் முறித்தாள். ஜன்னலைத் திறந்து தூரத்தை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். ஆபறேஷன்-பணம் இந்த இரண்டும் அவள் நிம்மதியைத் துரத்தியடித்துக்கொண்டிருந்தன.

அகல்யாவின் தோளை ஆதரவோடு தொட்டகரம் பட்டு அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அண்ணி புன்னகைத்து நின்றாள். "இந்தா பாரும்மா... நீ எதுக்காகவும் கவலைப்படக் கூடாது. எல்லாம் நல்லபடியாய் முடியும். ஆபறேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய உன் அண்ணா போயிருக்கிறார்."

அகல்யா சிலையாகிப் போனாள்.

அண்ணி தொடர்ந்தாள்.

"பணம் எப்படியென்று தானே யோசிக்கிறாய்? கேள்... என் கலியாணத்துக்கென்று என் சம்பளத்தில் நான் சேமித்த பணம் உன் ஆபறேஷனுக்கு உதவப் போகிறதை எண்ண எவ்வளவு ஆறுதலாயிருக்கு தெரியுமா? தைரியமாயிரு" சொல்லிவிட்டு ஓசைப்படாமல் வெளியேறினாள் அண்ணி.

அகல்யாவின் ஆன்மா அண்ணி, அண்ணி என்று ஓலமிட்டது. அவள் கண்களிலிருந்து வழிந்த நீரில்... அண்ணி... பேரழகியாகத் தெரிகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் ஓலம்

சுமதி தன் முதுகைச் சுவரோடு சாய்த்துக் கால்களை நீட்டியபடி உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்திலிருந்த காலை-மதிய உணவுகளெல்லாம் கவனிப்பாரற்றுக் கிடந்தன. சுமதியின் அழகான கேசம் சீப்பைக் காணாது சிக்குப்பிடித்துக் கிடந்தது. அவளுடைய பார்வை மட்டும் எதையோ தேடியது.

"சுமதி பிளீஸ்மா... நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு. தயவுசெய்து நீ எதையாவது சாப்பிடு." அவள் கணவன் கணேஷ் கெஞ்சினான்.

அவளிடமிருந்து பதில் இல்லை. கண்ணீர் தான் வழிந்தது. சுமதியின் கரங்களை ஆவலோடு பற்றி ஆதரவாக அணைத்தான் கணேஷ்.

சுமதியின் பார்வையில் வெறுப்பு உமிழ்ந்தது. "நீ கொலைகாரன். என் பிள்ளையைக் கொன்னுட்டே கிட்டவராத..." சுமதி பைத்தியம் பிடித்தவள் போல் பயங்கரக் கூச்சலிட்டு அழுதாள். கணேசுக்கு என்ன செய்வது: என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவன் உண்ணவும் உறங்கவும் மறந்து போனான்.

அவனுடைய முகம் துறவுக் கோலம் பூண்டு பலநாட்க ளாகிவிட்டன. சுமதி சொல்வது போல் நான் கொலைக்காரனா? ஒருவேளை அவள் சொல்வது...? அவனால் எதையும் மேற்கொண்டு யோசிக்க முடியவில்லை.

அந்த நாள் ஞாபகம்...

"என்னங்க நம்ம யாதவனுக்கு ஸ்கூல்ல அட்மிஷன் கிடைச்சது ஞாபகமிருக்கா? அவனுக்குத் தேவையான தெல்லாம் வாங்க வேண்டாமா?" சுமதி அவள் கணவனை நெருங்கினாள்.

"நான் மறக்கல்ல... உன்னையும் உன் மகனையும் ஊர்வலமா அழைச்சிப் போகணுமா? சொல்லு! இதோ நான் ரெடி" கணேஷ் சுமதியை அலாக்காகத் தூக்கிச் சுழற்றினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமதி கால்களை அடித்துக் குழந்தையைப் போல் துள்ளினாள். அவளுடைய முகத்தில் நாணம் வட்டமிட்டது. "இந்த வயசிலயும் உங்களுக்கு விளையாட்டா?" சுமதி சிணுங்கினாள்.

"பின்னர் எந்த வயசில விளையாடறதாம்? இந்த பார் சுமதி! நமக்கு வயசு போனாலும், யாதவன் வளர்ந்து பெரியவனானாலுங்கூட நாங்கள் இருவரும் காதலர்கள் தான்." கணேஷ் சொல்லிவிட்டு வாய்விட்டுச் சிரித்தான்.

"சீ போங்க... எனக்குள்ள ஆசை என்ன தெரியுமா?" சுமதியின் வாயிலிருந்து வார்த்தைகள் விழுமுன் "என்ன என்ன சொல்லு! இந்திரன் வேணுமா சந்திரன் வேணுமா?" அவசரப்பட்டான் கணேஷ்.

"அப்பா... நாளைக்கி ஸ்கூல் போக எனக்கு ட்றிங்போத்தல் வேணும்..." குறுக்கே ஓடிவந்து தன் அசையைச் சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்துபோனான் யாதவன்.

ஏழாண்டு தவமிருந்து பெற்ற ஒரே செல்வன் யாதவன். அவனுக்கு வயசு நாலு. ஜாடையில் அம்மாவையும் குணத்தில் அப்பாவையும் ஒத்திருந்தான். அவனை நல்லபடியா வளர்த்து ஒரு டாக்டராக்கிப் பார்க்கணும் சுமதியின் கண்களில் யாதவனின் எதிர்காலம் பளிச்சிட்டது.

"ஷொப்பிங் எத்தனை மணிக்கு?" கணேஷ் சுமதியை சுயநினைவுக்குத் திருப்பினான்.

"நாலு மணிக்குப் போவோமா?"

கார் ஐந்து மைல் தொலைவிலுள்ள நகரத்தை நோக்கிப் பறந்தது. எங்கும் நத்தார் மலிவு விற்பனைப் பரபரப்பு. பொங்கி வழியும் சனக்கூட்டம். யாதவன் அலங்காரங்களிலும் விளையாட்டுப் பொருட்களிலும் மெய்மறந்து போனான்.

யாதவன் காட்டிய பொருட்களை எல்லாம் கணேஷ் வாங்கிக் கொடுத்தான்.

யாதவன் ஸ்கூலுக்குப் போகப் போகிறான் என்ற நினைவு சுமதிக்கு மகிழ்ச்சியூட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தேவையான பொருட்களெல்லாம் காரின் பின்சீற்றில் இடம் பிடித்துக்கொண்டன. யாதவன் ட்றிங்போத்தலை மட்டும் இறுகப் பற்றிக்கொண்டான். மணி ஆறை நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டு வாசலில் போய்க் கார் நின்றது.

சுமதி வாங்கிய பொருட்களுடன் வீட்டை நோக்கி நடந்தாள். அவளைப் பின்தொடர்ந்த யாதவனின் ட்றிங்போத்தல் தவறிக் கார் ரயறின் அருகே விழுந்ததைச் சுமதி அறியவில்லை.

கணேஷ் காரை முன்பின்னாக ஓட்டிய சமயம் யாதவனும் ட்றிங்போத்தலை எடுக்க முயற்சித்தான் கணப்பொழுதில் கார் யாதவனை அரைத்துவிட்டது. கணேஷின் நினைவுகள் பட்டென்று அறுந்தது. "யாதவா உன்னைக் கொன்று விட்டேனே" அலறினான் கணேஷ்.

அலறலில் அதிர்ந்து போன சுமதி ஓடிவந்து அவன் மடியில் வீழ்ந்தாள்.

"விதியா...? என் கவனக்குறைவா...?

அவள் ஆன்மாவின் ஓலம் அவளுக்கு மட்டும் கேட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வளவு பெரிய தப்பு

பட்டுப்போன பனைமரத்தை நெடு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் சிவகாமி. அவள் பார்வை மங்கியிருந்தது. அவள் வயது எழுபதைத் தாண்டிவிட்டது. தலையில் ஒரு முடி கூடக் கறுப்பாயில்லை.

யன்னலூடாகத் தெரிந்த அந்தப் பனை மரத்திலிருந்து அவள் பார்வையை அகற்றாமல் அடித்துவைத்த ஆணியாக அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இந்தப் பனைமரம் அது மரணிக்கும் வரை மனிதருக்கு எவ்வளவு பயன்பட்டிருக்கும். இப்போ அது யாருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை... என்று எண்ணியதும் சிவகாமியின் கண்கள் சிவந்தன.

படலை திறக்கும் சத்தம் கேட்டுப் பார்வையைத் திருப்பினாள் சிவகாமி. பாண் ஒரு றாத்தலைப் பையில் போட்டு நடை தளர்ந்து வந்தவர் வேறுயாருமல்ல, சிவகாமியின் கணவர் நடேசன். நடேசன் எண்பது வயதை எட்டியவர். ஆஸ்துமா நோய் அவர் கூடவே பிறந்தது. அவருக்கு மூச்சு வாங்கியது. சிவகாமியின் அருகில் கிடந்த சாய்மனையில் வசதியாக நிமிர்ந்து படுத்தார்.

சிவகாமிக்குச் சட்டென்று சித்தாலேப தைலத்தின் ஞாபகம் வந்தது. அதை எடுத்து வந்து நடேசன் மார்பிலும் முதுகிலும் நன்றாகத் தேய்த்துவிட்டாள். அது அவருக்கு இதமாக இருந்தது. அவர் கண்களை மூடிக்கொண்டார். சிவகாமி கால்களை நீட்டி அவர் அருகில் உட்கார்ந்தாள்.

"இந்நேரம் குட்டிக் கண்ணன் சாப்பிட அடம் பிடிப்பான்.

பெரிய மகளுக்குப் பொறுமையே இல்லீங்க, அவன அடிக்கிறாளோ என்னவோ? பாவம் அவள் தான் என்ன செய்வாள்? எல்லா வேலயும் இப்ப அவ தலையில. நான் இருந்தப்போ கஷ்டமில்லைதான்". சிவகாமி நடேசனின் பக்கம் திரும்பினாள். அப்போதான் அவள் உணர்ந்தாள் தான் மட்டும் தனியாகப் பேசிக்கொண்டிருப்பதை.

"என்னங்க நான் சொன்னதெல்லாங் கேட்டீங்களா?" சிவகாமி நடேசனை அசைத்தாள். அவர் மூடிய கண்ணளைத் திறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாம் கேட்டேன். எனக்குக் களைப்பாயிருக்கு சிவகாமி. என்னைக் கொஞ்சம் தனியா இருக்கவிடு" என்று சொல்லிய நடேசன் நீண்டதோர் பெருமூச்சு விட்டார். அவருடைய இமைகள் தாமாகவே மூடிக்கொண்டன. சிவகாமி எழுந்து ஊறப்போட்ட உடுப்புகளைக் கழுவக் கிணற்றடிப் பக்கம் சென்றாள்.

நடேசனுக்குத் தூக்கமும் இல்லை. களைப்பும் இல்லை. சில வாரங்களுக்கு முன் நடந்து முடிந்த சோக நாடகமொன்றை மீண்டும் அவர் மனத்திரையில் போட்டுப் பார்த்தார்.

"உன்ரை அம்மா அப்பா தனியா வீடெடுத்து இருக்கிறதுதான் நல்லது. இதை மெதுவா அவங்க காதில போடு. இல்லாட்டா நான் சத்தமாய்ச் சொல்ல வேண்டிவரும்". இதைச் சொன்னது நடேசனின் மருமகன் சுதாகர்.

"உங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. இந்த வயசான காலத்தில அவங்க எப்பிடித் தனியாக இருக்க முடியும்?" பதில் கேள்வி கேட்டவள் நடேசனின் மகள் சுகன்யா.

சுதாகர் பாம்பாகச் சீறினான். "இரண்டு பேருக்கும் வயசானதாலதான் சொல்றன். இரவு பூரா உன்ர அப்பா கொல்லுக் கொல்லுன்னு இருமியபடி, தூங்கவா முடியுது? நல்லது போல கெட்டது நடந்தா இதுக்கு யார் பொறுப்பு?" சுதாகரின் குரல் அதிர்ந்தது.

சிவகாமி கல்லில் துணியை ஓங்கியடிக்கும் சத்தம் நடேசனின் நெஞ்சில் சவுக்கடியாய் விழுந்தது. மீண்டும் சுகன்யா தோன்றினாள்.

"நல்லதைப் போல் கெட்டது வந்தா நாமதானே பொறுப்பெடுக்கவேணும்?"

"நமக்கென்ன தலைவிதியா?" சுதாகர் உறுமினான்.

"தலைவிதி எண்டு எப்பிடிச் சொல்வீங்க அவையின்ர வீட்டிலதான் இருக்கிறம்".

சுதாகர் ஏளனமாய்ச் சிரித்தான். "ஏய் இந்த வீடு சீதனமாய் எனக்கு எழுதியது. எழுதிக்குடுத்தா கழுத்தைப் பிடித்துத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளுமட்டும் இருந்திடறதா?"

"சே, என்ன நன்றிகேடு" சுகன்யா அழுதாள்.

நடேசனுக்கு இந்தக் காட்சியைத் தொடர்ந்து பார்க்கப் பிடிக்கவில்லை. சொந்த பந்தங்களை அறுத்தெறிந்துவிட்டு தொலைவில் உள்ள ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து வந்துவிட்டார். தன்னுடைய பென்ஷன் பணத்தை நன்றியுடன் நினைத்தார் நடேசன். தான் கட்டிய வீட்டில் இருக்கப் பிரார்த்தமில்லை. பேரக் குழந்தையை அள்ளி அணையக் குடுத்து வைக்கவுமில்லை. இளைய மகள் லண்டனுக்குப் போய் இரண்டு வருஷம் இரண்டே ரெண்டு கடிதங்கள். இதற்கு மேல் அவளிடமிருந்து எதுவுமே எதிர்பார்க்க முடியாது. நினைவுகள் நடேசனைப் பிழிந்து எடுத்தது.

சிவகாமி ஈர உடுப்புகளைக் கொடியில் உலரப்போட்டுக் கொண்டிருந்தாள். "சிவகாமி இங்க கொஞ்சம் வாயேன்". நடேசனின் நடுங்கிய குரல் கேட்டு அவள் என்னவோ ஏதோவென்று ஓடிவந்தாள்.

"சிவகாமி நான் பெரிய தப்புப் பண்ணிற்றன். தப்புப் பண்ணிற்றன்." நடேசனின் நாக் குழறியது.

சிவகாமி பதறிப் போனாள். "இப்போ உங்களுக்கு என்ன வந்திற்றுது?" பரிவோடு அவர் நெற்றியில் பூத்திருந்த வியர்வைத் துளிகளை அவள் தன் முந்தானையால் ஒற்றினாள்.

நடேசன் சிவகாமியின் கைகளைச் சிக்கென்று பற்றிக் கொண்டார்.

"சிவகாமி பிள்ளைகளுக்காக நாம உள்ளதெல்லாம் கொடுத்தம். நமக்கெண்டு எதுவுமே வைக்கலியே, அது எவ்வளவு பெரிய தப்பு?

பெரிய மகளுக்கு வீட்டைச் சீதன உறுதி எழுதுறப்போ சீவிய உரிமை வச்சு எழுதாதது எவ்வளவு பெரிய தப்பு?" நடேசன் குழந்தையைப் போல் அழுதார். சிவகாமியின் கண்களிலும் நீர் வடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரத்தின் முன் தாய்

**தொ**லைபேசி அலறியது. இரவு பதினொரு மணியைத் தாண்டிவிட்டது. குளிரின் இறுக்கமான பிடியிலிருந்து போர்வையை உதறித் தள்ளிவிட்ட ஆஷா பதற்றத்துடன் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ"...

மறுமுனையில் மாலா.

"என்னடி இந்த நேரத்தில...?"

மௌனம். ஆஷாவைத் துளைத்தது.

"ஏய் மாலா, சொ..ல்..லு!"

"தனுஜா... செ.த்..திட்டா". மாலாவின் வாயிலிருந்து வார்த்தைகள் தட்டுத் தடுமாறின.

அணுகுண்டு வெடித்த அதிர்ச்சி ஆஷாவுக்கு.

"செத்திட்டாவா? என்னடி முந்தா நேத்து ஸ்கூலுக்கு வந்து படிப்பிச்சி அரை நேரத்தோட போனாளே... எப்போ செத்தாள்?எப்படி...?" அவள் கேள்விக்குப் பதில் வரவில்லை. தொலைபேசி ஊமையாகியது.

ஆஷாவின் ஆப்த நண்பி தனுஜா.

"தனூ... நீ எப்பிடி...ஏன்?" விடை தெரியாமல் ஓவென்று அழுதாள் ஆஷா. அவளுடைய தூக்கம் தொலைந்துவிட்டது. மல்லாந்து படுத்துக் கண்களை மூடினாள். அவள் முன்னால் புன்னகைத்து நின்ற தனு, "கதையைக் கேளுடி!" என்றாள்...

"நான் ஒரு ஏழைக் குடும்பத்தின் கடைசிப் பெண். ஒரு அக்காவும் ஒரு அண்ணாவும் கலியாணம் செய்து தங்கள் வழிக்குப் போய்விட்டார்கள். மிஞ்சியது நான். நல்லவேளை நான் ஒரு ஆசிரியை..." சொல்லிவிட்டுச் சலங்கை ஒலியாய்ச் சிரித்தாள் தனு.

ஆஷாசுற்று முற்றும் பார்வையைச் சுழற்றினாள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறை முழுவதும் சூனியம் இருளாய் அப்பிக் கிடந்தது.

"ஆஷா, வாழுறதா சாகிறதா லேசுடி? சொல்லுடி..." கேள்வியால் குத்தினாள் தனு. " என் சம்பளத்தைத் தவிர எனக்கென்றிருப்பது என் அம்மா, அவ விதவை. எனக்குக் கலியாணமே நடக்காது என்று எண்ணிய வேளை என் வாழ்வில் குறுக்கிட்டவன் கணேஷ். காதலித்தான். கைப்பிடித்தான். என் தாயுடன் இருந்த என்னைத் தன் தாயுடன் சேர்த்துவிட்டான்".

தனுவின் மூச்சுக் காற்று அனலாக ஆஷாவில் மோதியது. "என்னுடைய மாமியும் மச்சாள்மாரும் என்னை ஒரு மனுஷியா கணக்கெடுக்கல. தெனம் முப்பது மைல் பயணம். கொடுமைகளைச் சுமந்து பள்ளிக்கூடம் வந்து வீடு திரும்பும்போது என்னுடல் சோர்ந்துவிடும். எல்லாருக்கும் மாமி தேநீர் ஊத்துவா. என்னைத் தவிர்த்து. வேளா வேளைக்குச் சாப்பிடக் கெடைக்குமா? வீட்டு வேல அத்தனையும் என் கையால முடியணும். சொல்ல மறந்திட்டன் ஆஷா, ஒரு பூச்சாடி என் கையைவிட்டு நழுவி நொறுங்கிப் போச்சு. அதுக்கு என்ன பரிசு தெரியுமா?" தனுவின் குரல் தழுதழுத்தது. "மாமி விறகுக் கட்டையால் விளாசினாள். மச்சாள் என் நீண்ட கூந்தலை ஒட்ட வெட்டினாள்." தனுவின் விம்மல் ஒலி தெளிவாகக் கேட்டது.

"என்ன தனு புது ஸ்ரைல்? வரவர நீயும் 'மொட்'தான்" என்றோ ஒரு நாள் தனுவைக் கிண்டல் பண்ணியது இப்போது ஆஷாவின் நினைவுக்கு வந்ததும் ஆத்திரம் அவசரமாக வெளிப்பட்டது. "உன்னோட கணவனுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன? அவரிட இதயம் என்ன இரும்பா?" ஆஷா பொரிந்தாள்.

பயங்கரமாய்ச் சிரித்தாள் தனு.

"ஆஷா, நீ உலகம் தெரியாதவடி. கலியாணத்துக் கப்புறமும் அம்மாட முந்தானை புடிக்கிற புருஷனுகளும் இருக்கிறாங்க. சொந்தப் புத்தியில்லவே இல்ல. அம்மாக்கு முன்னால என் புருஷனுக்கு கண்ணுமில்ல. வாயுமில்ல. அம்மா எது சொன்னாலும் அவர் தலையாட்டும் பொம்மைதான்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதக் கேளுடி. "டேய் கணேஷா உன்ர பெண்டாட்டி என்ன பெரிய அழகியா? காதலுக்குக் கண்ணில்லன்னு சரியாத்தாண்டா சொன்னாங்க. அவ கழுத்தில ஒரு பொட்டுத் தங்கம் இல்ல எண்டு உன்ட கண்ணுக்குத் தெரியல்லியே. அவ எண்ணைக்கு இந்த வீட்ல காலடி வைச்சாளோ அண்ணைக்கே லெட்சுமி வெளியே போயிட்டா. கலியாணமாகி வருஷம் ரெண்டு. அவ வயித்தில எதுவும் தங்கலியே? பேசாம மாமா பொண்ணை முடிச்சிடு!" இதையெல்லாம் சொன்னது யார் தெரியுமா? மாமிதான் அதுவும் சத்தமாய்.

என் கணவர் என்ன சொல்லப் போறார் எண்டு என் மனசு படபடத்திச்சி ஆஷா!"

"சொல்லு சொல்லு!" ஆஷா துடித்தாள் என்ன சொன்னார்?"

"நா அம்மா புள்ளையாச்சே ஒன் பேச்சைத் தட்டுவனா?" அண்ணைக்கே நான் செத்திட்டண்டி. கரும்பலகைல எழுதிறப்போ திடீர்னு என் வலது கை விறைச்சுப் போச்சு. அர நாள் லீவு போட்டு வந்திட்டேன். எனக்கென்று இனி எதுவுமில்லை.ஆஷா" தனுவின் கதறல் ஆஷாவின் இதயத்தைப் பிழிந்தது.

"தனூ...தனூ...தனூஜா..." ஆஷா அலறினாள். அங்கே தனு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடியும் சோடியும்

கட, கட, கட...

இது கல்யாணியின் தையல் மெஷின் ஓசை. ஓய்வில்லாத ஓட்டம். அதன் விசைப் பலகையில் அவள் அழகிய கால்கள் இரண்டும் துரிதகதியில் மேலும் கீழுமாய் அசைந்தாடியது. கல்யாணியின் வெண்டைக்காய் விரல்கள் துணியை லாவகமாகத் தள்ளிக் கொண்டிருந்தன. இந்த மெஷினுக்குச் சொந்தக்காரி கல்யாணியேதான். மெஷின் பழையதானாலும் அது விசுவாசமாக உழைக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

கல்யாணி நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தாள். அது ஓட மறந்து நின்றது. கல்யாணி விழித்திருந்து எப்படியோ தைத்து முடித்தாகவேண்டும். ஊரெல்லாம் உறங்கிவிட்டது. கொல்லைப் பக்கமிருந்து நாயின் ஊளைச் சத்தம் இடையிடையே கேட்டது. பல்லி ஒன்று சுவரில் இருந்து ச்..ச் என்று எதையோ சொல்லியது.

கல்யாணி புறங்கையால் கண்ணைக் கசக்கிவிட்டு அவள் தங்கை நளாயினி படுத்திருந்த அறைக்குள், அடிமேல் அடிவைத்துச் சென்றாள்.

அவள் தங்கையின் தூக்கம் கலைந்துவிடுமோ என்ற கவலையும் கூடவே இருந்தது. அங்கே கல்யாணி கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்தது.

நளாயினி கட்டிலில் தன் கைகளால் முழங்காலை அணைத்து உட்கார்ந்திருந்தாள். கல்யாணி அவசரமாக விளக்கேற்றினாள். நளாயினியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

நளாயினி கல்யாணியைச் சற்றுமே எதிர்பார்க்கவில்லை. கல்யாணி பதறியவளாய்த் தன் தங்கையை அணைத்து, "என்னாச்சு? சுகமில்லையா? காசு தேவையா?" அடுக்கடுக்காகக் கேள்விகளை அள்ளி வீசினாள். தன் முந்தானைச் சேலையால் தங்கையின் கண்ணீரை ஒற்றி எடுத்தாள். "நளாயினி நீ ஏன் அழறே?" பரிவோடு கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா, நம்மைப் பெத்தவங்க செத்த நாளிருந்து என்னை வளத்து படிக்க வச்சி ஆளாக்க நீ பட்ட பாடிருக்கே..." நளாயினி விம்மினாள்.

கல்யாணி ஒன்றும் புரியாமல் குழம்பினாள். "அதுக்காக நடுராத்திரியில் உக்காந்து அழறதா? பேசாமப் படுத்துத் தூங்கு. உனக்கு ஒரு கால் கட்டுப் போட்டா எல்லாம் சரியாப் போயிடும்" சொல்லிவிட்டு எழும்பப் போன கல்யாணியைப் பலவந்தமாய் இருத்தினாள் நளாயினி. அவள் தலை கவிழ்ந்து முகம் சிவந்தாள்.

"நா... ஒருத்தரக் காதலிக்கிறன்..."

"யாரந்த ஒருத்தர் சொல்லேன்" கல்யாணியின் உதட்டில் புன்னகை தவழ்ந்தது.

"அக்கா உனக்குத் தெரிஞ்சவர்தான். நீ யாரை நல்லவன், படிச்சவன், பண்புள்ளவன், புத்திசாலி எண்டு அடிக்கடி சொல்லுவியோ..."

கல்யாணிக்கு நெற்றிப் பொட்டில் அடித்தது போலிருந்தது.

" ஆமா... வண்ணாரப் பெடியன் கோபாலைப் பற்றித்தான் சொல்லுறன்".

"கோபாலைத்தான் விரும்புறன். கெம்பஸ்ல படிக்கிறப்போ..." நளாயினியிடமிருந்து தட்டுத்தடுமாறி வார்த்தைகள் முற்றுப்பெறுமுன்,

"ஐயோ கடவுளே...!" கல்யாணி கதறினாள்.

"அக்கா, கோபால் படிச்சவன், பட்டம் பெற்றவன், நல்லவன். அதுவும் மிகமிக நல்லவன் எண்டு நீ சொல்லிப் பெருமைப்பட்டு நான் பாத்திருக்கேனக்கா" நளாயினி பரிதாபமாகக் கூறினாள்.

"சொல்லலாம், அதுக்காக அவனைக் கலியாணம் பண்ணிக்கிறதா? சொல்லுறது வேறு, செய்யிறது வேறு. அவன் யார்? நாம யார்? இந்தச் சமூகம் நம்மை மதிக்காதுடி, மிதிக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா, இப்பெல்லாம் சாதியை யார் பாக்கிறார்" நளாயினி கேட்டுவிட்டாள்.

"யார் பாக்கிறாவா?"

"இந்தத் தெருவுக்கெல்லாம் சலவை செய்யிறவன் கோபாலின்ர அப்பன் அருணாசலம்.'சாதி ஒழிக' எண்டு படிச்சவங்க மேடையிலே சொல்லுவாங்க. ஆனா அருணாசலத்தோட பந்தி அமர்ந்து சாப்பிடுவாங்களா? நீ நினைக்கிறமாதிரி இல்ல. இந்த சமூகத்தின் பார்வையில கோளாறு இன்னுமே மாறல்ல".

நளாயினி மௌனமாய் அழுதாள்.

கல்யாணி தொடர்ந்தாள்...

"இதையும் கேள்... கோபாலின்ர தங்கச்சி கௌரியின்ர, கலியாணம் போனவாரம் நடந்தது ஞாபகமிருக்கா? இந்தத் தெருவிலுள்ள அத்தனை பேரும் போனோமே, அங்க யாராவது கைநனைச்சதைப் பாத்தியா? உன்னையும் என்னையும் சேர்த்துத்தான் சொல்லுறன். அருணாசலமும் லெட்சுமியும் சாப்பிடச் சொல்லி கைகூப்பிக் கெஞ்சிக் கேட்டாங்களே, ஏதேதோ சாட்டுச் சொல்லி எல்லாரும் நழுவியது தெரியாதா?" சொல்ல வேண்டியதெல்லாவற்றையும் சொன்ன திருப்தியோடு நளாயினியை ஏறெடுத்தாள் கல்யாணி.

கோபாலுக்கும் கல்யாணிக்குமிடையில் தூண்டில் புழுவாய்த் துடித்தாள் நளாயினி., "அக்கா, அக்கா" என்று புலம்புவதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

"இந்தா பார் நளாயினி, சதுர டப்பாவுக்கு வட்ட மூடி போட்டு மூட முயற்சி பண்ணாதே. மூடியைப் போல்தான் சோடியும் முக்கியம் புரியுதா?" உறுதியாகக் கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள் கல்யாணி.

நளாயினி அழத் தொடங்கினாள். என்ன சமூகம் இது?
கட கட கட.......

கல்யாணியின் மெஷின் ஓசை நளாயினியின் காதில் தெளிவாகக் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைப் பூக்கள்

**கா**ளியம்மாவின் மகளுக்கும், கருப்பன் கங்காணியின் மகனுக்கும் கலியாணம் நடந்து கொண்டிருந்தது. "வாராயோ என்தோழி வாராயோ" என்ற பாட்டு ஸ்பீக்கரில் சத்தமாகக் கேட்டது. அங்கும் இங்கும் ஆரவாரம். சின்னஞ் சிறிசுகளின் கும்மாளம். வயது வந்தவர்களின் குடிபோதை உளறல். அந்த லயம் முழுவதையும் சந்தோஷத்தில் மூழ்கடித்தது.

ராமாயி எதிலும் ஒட்டிக்கொள்ளாமல் அவளுடைய காம்பறாவின் ஒதுக்குப் புறத்தில் கிடந்த சுள்ளி விறகுகளை ஒடித்துக் கட்டுகளாக்கிக் கயிற்றால் முடிந்து கொண்டிருந்தாள். மறந்துவிடாமல் மடியில் இருந்த புகையிலைத் துண்டைப் பல்லில் தேய்த்துக் கொடுப்பில் திணித்தாள்.

வாசல்படியில் காலரவங் கேட்டுத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். அரைக்கால் சட்டை, சேட், சப்பாத்துடன் உள்ளே நுழைந்தான் தங்கராசு. ராமாயியின் ஏகவாரிசு அவன். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி பரவிக் கிடந்தது. வந்த வேகத்தில் தங்கராசு புத்தகப்பையைத் நிலத்தில் போட்டுவிட்டு தன் தாயின் பக்கத்தில் இருந்தான். பழுப்பேறிய அந்தப் பையிலிருந்து அவன் தன் றிப்போட்டை வெளியே எடுத்து "ஆத்தா... இதப்பாரன்" என்று உற்சாகமுடன் காட்டினான். அவன் உடல் பூராவும் குதூகலத்தில் குளித்தது.

"எனக்கென்னப்பா படிக்கவா தெரியும்? நீயே படிச்சிச் சொல்லன்!" ராமாயி தன் காவி படிந்த பற்களை வெளியே காட்டினாள். "ஆத்தா சோதினை முடிஞ்சி... பாசாயிட்டன் நா... தான் வகுப்பில முதல். இனி எட்டாவது வகுப்பு. என்னை, பெரிய மாஸ்டர் ரொம்ப ஒசத்தியாச் சொன்னார் ஆத்தா".

"மாரியாத்தா மகமாயி எம்மகன் எம்புட்டுக் கெட்டிக்காறன்! இதப்பாக்க அவன் அப்பன் குடுத்து வைக்கல. தங்கராசு நல்லாயிருக்கணும்!" ராமாயி கண்ணைமூடி மனசுக்குள் தன்னை ஒரு கணம் மறந்திருந்தாள். சட்டென்று தங்கராசுவின் பெரிய மாஸ்டர் ஒரு நாள் சொன்னது அவள் ஞாபகத்தில் எட்டியது. "ஒன் மகன் ஒரு நாளைக்குப் பெரிய உத்தியோகம் பார்ப்பான். அவனுக்கிருக்கிற அறிவுக்கு அவன் டாக்டராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும் வருவான். என்ன பாடுபட்டும் அவனைப் படிக்க வச்சிடு!" நினைவுகளில் நீந்திய ராமாயிக்கு தங்கராசு ஆஸ்பத்திரியில் ரெற்றஸ்கோப் கழுத்திலசைய... டொக்...டொக் என்று நடந்து வருவதுபோல் தெரிந்தது. தன்னை அறியாமல் சிரித்துவிட்டாள். "ஏன் ஆத்தா சிரிக்கிறே?"

"சும்மாதான். நீ ஒரு டாக்டரா வர்ராப்போல நெனைச்சன். சிரிப்பு வந்திடிச்சி. ஏழைகளுக்கெல்லாம் நெனைவிலதான் சுகமிருக்கு" ராமாயி பெருமூச்சுவிட்டாள்.

"ஆத்தா நீ வேணும்னாப் பாரேன் நா ஒரு நாளைக்கு நெஜமா டாக்டரா வந்து ஒன் கண்முன்னால நிக்கத்தான் போறன்!" தங்கராசு சொல்லிக் கொண்டே "ஆத்தா பசிக்குது", என்றான். ராமாயி றொட்டியையும் சம்பலையும் தட்டில் போட்டுவிட்டு மறுபடியும் விறகுச் சுள்ளிகளைக் கட்டி எடுத்து அடுப்பங்கரையில் போட்டாள்.

"கண்டிராக்டர் அம்மா எனக்கு உதவினா நா... ஆளாயிடுவன் ஆத்தா" கோளாத் தண்ணீரைக் குடித்த தங்கராசு ஏக்கத்தோடு சொன்னான்.

"அந்தம்மா தங்கப் பவுனுடா. பேரும் தங்கந்தான். ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரு மகன். சும்மா உக்காந்து மூணு தலைமுறைக்குச் சாப்பிடலாம். அவங்க மகராசியாய் இருக்கணும்!" நன்றி அவள் கண்களில் ஈரமாய் நனைந்தது.

ராமாயி கண்டிராக்டர் கணேசு வீட்டில் தினசரி வேலை பார்ப்பவள். எடுபிடி வேலை, சமையல், தோட்டத்துக்கு நீர் ஊற்றல் என்றிப்படி எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு வீடு திரும்புவது வழக்கமான செயலாகும். அந்த அம்மாள் தங்கம் கொடுக்கும் சம்பளம் வயிற்றைக் காயவிடாமலும் தங்கராசுவின் பள்ளிச் செலவுக்கும் போதுமாக இருப்பதில் ராமாயிக்குப் பரம திருப்தி.

"ஆத்தா என்ர றிப்போட்டைக் கண்டிராக்டர் அம்மாக்குக் காட்டி வர்ரியா?" தங்கராசு திண்ணைக் கட்டிலிருந்து குரல் கொடுத்தான். தங்கராசு சொல்றது சரிதான். றிப்போட்டைப் பாத்தா அந்த அம்மா சந்தோஷப்படுவாங்க. தனக்குள்ளே முணுமுணுத்தாள் ராமாயி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமாயியின் கால்களுக்கு அப்படியொரு வேகம் எப்படி வந்ததோ? அடிமடியில் றிப்போட்டைச் சுமந்து கண்டிராக்டர் வீடு போய்ச் சேர்ந்தாள். "உனக்கெல்லாம் ஒரு இன்ரநஷனல் ஸ்கூல்... போக வர வாகனம், ரியூஷன், பொக்கற் மணி, நினைக்கவே அவமானமாருக்கு. பெயிலாகிற்று வந்து வெக்கமில்லாமல் நிக்கிறியே. என் அந்தஸ்து, கௌரவம் எல்லாவற்றையும் பாழடிச்சிட்டியேடா, நம்ம வீட்டு வேலைக்காறிட மகன் எப்பவும் வகுப்பில முதல். நம்மட உப்பைத் தின்னுறதுகளுக்கு மூளையிருக்கு. ஆனா... உனக்கு சீ போடா!"

பின்கட்டில் குந்தியிருந்த ராமாயி கணேசு ஐயாவின் கூச்சல் கேட்டு உறைந்து போனாள். வாசு கடுங்கோபத்தோடு கூடத்திலிருந்து வெளியேறிச் செல்வதைக் கண்டு சிந்தனையிலாழ்ந்தாள். அவள் மடியில் சுகமாகத் தூங்கிய தங்கராசுவின் றிப்போட் இப்போது அவளுக்குச் சுமையாகப்பட்டது. அதைக் காட்டவேண்டாம் என்று எண்ணினாள் ராமாயி.

சடசடவென்று பெரும் மழைத்துளிகள் கொடியில் கிடந்த உடுப்புகளை நனைத்தது. ராமாயி அவற்றை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். "ராமாயி நீ, எப்ப வந்தே? நீ வந்தது நல்லதாப் போச்சி. பண்டாரவளையில் இருந்து தபால் வந்திருக்கு. என் தங்கச்சி பொண்ணுக்குத் தலைப்பிரசவம். ஒத்தாசைக்கு என்னை வரட்டாம். இந்த வீடுவாசலை விட்டு நான் எப்பிடிப் போறது?" கண்டிராக்டர் அம்மா கேட்டாள். "அதுக்கு நா என்னம்மா பண்றது?" ராமாயி இடைமறித்தாள்.

"ராமாயி உன்னட உதவியத்தான் மலபோல நம்பியிருக்கிறன்".

"நீங்க என்ன சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியலியே?" ராமாயி குழம்பிப் போனாள்.

"பண்டாரவளைக்குப் போற விஷயந்தான். தங்கராசுக்கு ஒரு மாத லீவுதானே? அவன எனக்கு உதவியா விட்டிட்டு நீ போனா நல்லமெண்டு படுது. போறியா?"

ராமாயியின் நெஞ்சில் ஏதோ அடைத்தது போலிருந்தது. "என்ன யோசிக்கிறே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்ணுமில்லத்தாயி...ஒத்துக்கிறன்" வாயும் வயிறும் இருக்கிறப்போ விருப்பமெண்டு ஏதும் இருக்கா? ராமாயி தனக்குள்ளே அலுத்துக் கொண்டாள்.

கண்டிராக்டர் வீட்டில் தங்கராசு ஓடியோடிச் சுறுசுறுப்பாய் இயங்கினான். எல்லா வேலைகளையும் ஏற்றுக்கொண்டு முழு நேர வேலைக்காரனாக மாறிப்போனான். படிப்பிலும் வேலையிலும் திறமைசாலியாக இருக்கும் தங்கராசுவை கண்டிராக்டர் அம்மாவுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

ஒரு மாதம் மெதுவாக ஓடியது போலிருந்தது ராமாயிக்கு. பண்டாரவளையிலிருந்து வந்ததும் அந்த அம்மா சொன்ன செய்தி ராமாயியை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

"ராமாயி உன் மகன் தங்கராசு நல்ல கெட்டிக்காரன். உனக்கும் வயசாகுது. நீ வீட்ல ஓய்வு ஒழிச்சலாய் இரு. தங்கராசு எங்கட வீட்ல வேலை செய்யட்டும். உனக்குக் குடுக்கிற சம்பளத்த அவனுக்குக் குடுக்கிறன். படிச்சி என்னத்தைக் கிழிக்கப் போறான்? நீ ஆறுதலா யோசிச்சி முடிவுக்கு வா. இல்லாட்டா நீயும் வரவேணாம்!".

காலைக் கதிரவன் கைகளை நீட்டிச் சோம்பல் முறித்தான். தங்கராசு லயத்துப் பக்கமிருந்த ஆலமரத்தடியில் மல்லாந்து படுத்திருந்தான். அவன் கண்களில் வடிந்த நீர் கழுத்தை நனைத்தது. அவனுடைய புத்தகங்கள் அந்த மண்ணில் கிடந்து காற்றில் படபடத்தன. தங்கராசு மரத்தை அண்ணாந்து பார்த்தான். அதன் கிளைகளில் சுதந்திரமாகத் தாவி ஓடியது ஓர் அணில். அது ஆலம்பழமொன்றைச் சுவைப்பதைக் கண்டு சிந்தனையில் ஆழ்ந்தான். 'இந்த அணில்கூட உண்பதற்குச் செலவில்லை: உடுப்பதற்கும் தேவையில்லை:' அந்தப் பிஞ்சு மனம் இப்படி எண்ணித் தவித்தது. தனக்காக ஆத்தா படும் பாட்டினை நினைத்துத் துடித்தது.

"தங்கராசு, நீ ஸ்கூலுக்குப் போ, ஒண்ணும் யோசிக்காத" ராமாயியின் முகம் அழுதுவடிந்தது.

"வேணாம் ஆத்தா நா, வேலக்கிப் போறன்" அவன் எழுந்து புத்தகப் பையைத் தூரப் போட்டுவிட்டு கண்டிராக்டர் வீட்டை நோக்கி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர் மாறிய கடிதம்

**பி**ரபல பேச்சாளர் சசிதரன் நாளை பிற்பகல் நாலு மணிக்கு மத்திய கல்லூரி மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவார்.

விஷயம் '**சீதனம் ஒழிக...**"

'வானவில்' பத்திரிகை கொட்டை எழுத்தில் அழைப்பு விடுத்திருந்தது. பத்திரிகையில் கண்ணோட்டம் செலுத்திய கௌதமிக்கு எரிச்சலூட்டியது. "என்ன இவர் அரைச்ச மாவையே அரைக்க வாறார்" சற்று உரக்கவே சொன்னாள்.

புத்தகமொன்றில் முகம் புதைத்திருந்த கங்கா தலை நிமிர்ந்து சிரித்தாள்.

"சசிதரனைப் பற்றி நீ கேள்விப்பட்டதே இல்லையா? அவர் ஒரு முற்போக்குவாதி. பெண்கள் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ள ஒரு அதிசய மனிதர். மணிக்கணக்கில் அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம்" சசிதரனுக்கு விளம்பரம் கொடுத்த கங்காவைக் கௌதமி வியப்புடன் பார்த்தாள்.

"அவர்... கிழவரா...? இல்லாட்டா... வாட்டசாட்டமான இளைஞனா? கௌதமி கிண்டலாகக் கேட்டாள்.

"அது தெரியவேணும்னா நீ கண்டிப்பா நாளை நாலு மணியை ஞாபகம் வைத்திரு!" சொல்லிவிட்டுச் சிட்டாகப் பறந்துவிட்டாள் கங்கா. கௌதமியும் கங்காவும் நெருங்கிய நண்பிகள். ஒரே பாடசாலையில் படித்து ஒரே வீதியில் குடியிருப்பவர்கள். கங்காவுக்குச் சிறுவயதில் இருந்தே பேச்சு - எழுத்து இரண்டிலும் ஈடுபாடு. எந்தக் கூட்டத்தையும் விட்டுவைக்க மாட்டாள். சுமாரான குடும்பத்தில் மூத்த பிள்ளை அவள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. மண்டபம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. தலைமை தாங்க அறங்காவலர் அரியநாயகம் ஜே.பி. வந்திருந்தார். மேடையில் வீற்றிருந்த பிரமுகர்களுக்கு மத்தியில் பேச்சாளர் சசிதரன் இளைய நிலாவாக அமர்ந்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புரைக்குப் பின் மாலை கழுத்தில் அசைய புன்முறுவலுடன் சசிதரன் மைக்கின்முன் தயாரானார்.

கௌதமி, கங்காவின் தொடையைக் கிள்ளி ஜாடை காட்டினாள்.

மடை திறந்தது. சசிதரனின் வார்த்தைகள் வெள்ளமாய்த் தங்கு தடையின்றி மண்டபமெங்கும் தவழ்ந்து விளையாடியது. தென்றலாய் வீசிய சசிதரனின் பேச்சு திடீரெனப் புயலாக மாறியது.

"திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது என்கிறார்கள். ஆனால் அது ரொக்கத்தில்தான் நிச்சயிக்கப் படுகிறது. ஆண்கள் சீதனம் கேட்டுத் தங்கள் கையாலாகாத் தனத்தைக் காட்டுகிறார்கள். பணம், வீடு, நகை - ஆமாம் இவை எல்லாம் பெண்ணிடம் நாகரிகமாகக் கேட்கும் பிச்சையல்லவா? சிலர்... "நாங்கள் டிமாண்ட் பண்ணல: தருவதைத் தாங்கோ!" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறார்கள். இப்போதெல்லாம் பெண்கள் தகுதி வாய்ந்த உத்தியோகங்களில் இருந்து ஆண்களை விடக் கைநிறையச் சம்பாதிக்கிறார்களே! அப்போ பெண்களும் ஆண்களிடம் சீதனங் கேட்டால் என்ன தப்பு?"

கங்கா தன்னை மறந்து கைதட்டியதைத் தொடர்ந்து கூட்டத்தில் கரகோஷம் காதைப் பிளந்தது.

ஒரு மணித்தியாலம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனது தெரியவில்லை. ஊற்றுப்பெருக்காயிருந்த சசிதரனின் பேச்சு முற்றுப் பெற்றது. கௌதமியும் கங்காவும் மௌனத்தில் நடந்து கொண்டிருந்தார்கள்.

"என்ன? எந்தக் கோட்டையைப் பிடிப்பதாய் உத்தேசம்?" கௌதமி கங்காவின் முதுகில் புரண்டு விளையாடிய கூந்தலைப் பிடித்து இழுத்தாள்.

'சசிதரனின் இதயக்கோட்டை' என்று சொல்ல வேணும்போல் மனசு படபடத்தது கங்காவுக்கு.

"ஏன் - பாராட்டுக் கடிதமொன்றை எழுதலாமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌதமியின் நையாண்டி கங்காவைக் குடைந்தெடுத்தது.

'குட் ஐடியா' கங்கா தனக்குள் சொன்னாள். வீடு வந்து சேர்ந்த கங்காவின் மனமேடையில் சசிதரன் கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தான். அவன் பேசிய வார்த்தைகள் அவள் செவிகளை ஆரத் தழுவின.

தழுவலின் சிலிர்ப்பில் சசிதரனுக்குப் புகழாரம் சூட்டி எழுதினாள்.

ஆச்சரியம் அவளை எங்கோ இழுத்தது.!

சசிதரனிடமிருந்து கடிதம். சுவீப் விழுந்த சந்தோஷம் கங்காவுக்கு.

மீண்டும் அவள் எழுதினாள்.

அவன் எழுதினான்.

இதயங்களின் சங்கமம் சந்திப்பால் வளர்ந்தது. இது கலியாணத்தில் கனிய வேண்டுமென்று நினைத்த கங்கா நாணத்தைவிட்டு சசிதரனிடம் கேட்டுவிட்டாள்.

கடிதத்தில்...!

பதிலும் கடுகதி ரயிலாய் வந்து சேர்ந்தது.

அவள் படித்தாள்...

அன்புள்ள அம்மாவுக்கு,

(நெற்றிப் பொட்டில் அடித்தது போல் இருந்தது கங்காவுக்கு) மீதியைக் கண்கள் பரபரத்து மேய்ந்தது.

"நானும் கங்காவும் காதலிக்கிற விஷயம் உங்களுக்குத் தெரிந்ததே. கலியாணத் தேதி நிச்சயிப்பதற்கு முன்னால் நீங்கள் கங்கா வீட்டாருடன் சீதனம் பற்றிப் பேசவேண்டும். வெறுமனே பெண்ணை மட்டும் எடுத்தால் போதுமா? பேசுவதெல்லாம் வாழ்க்கை ஆகுமா? பூமாலை, பாராட்டு, பொன்னாடை, விருந்துகள் எல்லாமே கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்கள். அப்பாவின் பென்ஷனில் எப்படியோ காலந்தள்ளுகிறோம். பேசுவதையும் எழுதுவதையும் விட்டாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தொழில் தெரியாது. உபதேசம் ஊருக்குத்தான். என் வருங்கால மனைவிக்கல்ல.

அம்மா தயவு செய்து என்னைக் காட்டி விடாதே. சீதனம் எனக்குப் பிடிக்காது. உனக்கது கட்டாயம் என்று எழுதிவிடு.

இப்படிக்கு
மகன் சசிதரன்.

பல்லை நறநறவென்று கடித்த கங்கா "ஓ...யூ...றாஸ்கல்" என்று கூச்சலிட்டவேளை...

சசிதரனின் அம்மா தன் கையிலிருந்த கடிதத்தில்,

என் உயிரே,

நம் கலியாண விஷயம்பற்றி அம்மாவுக்கு எழுதியுள்ளேன். நான் ஒரு அம்மா பக்தன். உன் சங்குக் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடக் காத்திருக்கின்றேன். உன்னைத் தவிர வேறெதுவும் நான் எதிர்பார்க்கமாட்டேன். நாளைய சந்திப்பில் மீதி.

உன் சசிதரன்.

என்று தன் மகன் கங்காவுக்கு எழுதிய கடிதத்தை இரசித்துக் கொண்டிருந்தாள்.

சசிதரன் எழுதிய இரு கடிதங்களும் கவர் மாறிப் புகுந்தது அவனுக்கு எப்படித் தெரியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லத் திறந்த கதவு

**பு**ள்ளிமானாய்த் துள்ளித் திரிந்த துர்க்கா சில நாட்களாய் சுரத்தில்லாமல் இருப்பதை அவள் கணவன் நரேன் கவனிக்கத் தவறவில்லை.

எதிலுமே அக்கறை காட்டாமல் முகத்தை 'உம்' என்று வைத்துக் கொள்ளும் பழக்கம் துர்க்காவிடம் அடியோடு கிடையாது என்பதும் நரேனுக்கு நன்கு தெரிந்த விஷயம். அவள் அம்மா வந்ததிலிருந்து துர்க்கா சிரிக்க மறந்துவிட்டாள் என்பது மட்டும் உண்மை. ஒருவேளை மருமகள் அவள் அம்மாவை உதாசீனப்படுத்தி அனுப்பி வைச்சிருப்பா என்கிற வேதனையோ...?

இருக்கும்... அந்த மருமகள் வேறு யாருமில்லை. தன்னுடைய தங்கை ரமாதான் என்று எண்ணிய நரேனுக்குத் 'திக்'கென்றிருந்தது. அவன் குடும்பத்தில் ரமா கடைக்குட்டி. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பிறந்து செல்லமாக வளர்ந்தவள். பொறுப்புகள் எதையும் அறியாதவள். வாய்த்துடுக்குக்குக் குறைச்சலில்லை. வளர்ந்தும் குழந்தைத்தனம் மாறவில்லையே. நரேனுடைய நினைவில் ரமா நிமிஷத்தில் நிழலாடி மறைந்தாள்.

"உன் அம்மா சாப்பிட்டாச்சா?" துர்க்காவின் மௌனத்தைக் கேள்வியால் கலைத்தான் நரேன். "நானொன்றும் அவங்களப் பட்டினி போடல" வெறுப்பை உமிழ்ந்தாள் துர்க்கா.

"ஏய் உனக்கென்னாச்சு? இதோ பார் உன் அம்மா வந்ததிலிருந்து உன் போக்கே மாறிப்போச்சு. நீ அவங்களோட பேசிப் பழகி நான் பார்த்ததில்ல. பாவம் கொஞ்ச நாளக்கி இங்க தங்கி ஆறிப்போக வந்தவங்கள இப்பிடியா நடத்துறது? வேளா வேளைக்குச் சாப்பாடு போட்டா போதுமா? அவங்க நம்மோட இருக்கிறவரைக்கும் அவங்களைச் சந்தோஷமாக வைச்சிக்கப் பாரு"

நரேன் தன் மனைவியிடம் குட்டிப் பிரசங்கமே வைத்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க எத்தனை பிரசங்கம் வச்சாலும் நான் மாறமாட்டன். என்னோட அம்மாதான். அதுக்காக நான் வெக்கப்படுறன். துக்கப்படுறன்" குரலில் சுருதி கூட்டினாள் துர்க்கா.

நரேன் சட்டென்று அவள் வாயைப் பொத்தினான். "அம்மா பக்கத்து ரூமில: அவ காதில விழப்போகுது!"

"நல்லா விழட்டும் அப்பவாவது அம்மாவுக்குப் புத்தி புடிபடுதா பாப்பம்".

நரேன் ஒன்றும் புரியாதவனாய் நெற்றியைச் சுருக்கினான். "துர்க்கா, நீ என்ன சொல்கிறாய்...?"

"பின்னே என்னங்க...? அப்பாவைப்பத்திக் கொஞ்சமாவது யோசிச்சீங்களா? அவர் ஒரு நீரிழிவு நோயாளி கட்டுப்பாடான சாப்பாடு முக்கியம் இல்லையா? ஏலவே இடது கை மணிக்கட்டுவரை இல்லை. ஆப்பரேஷன் ஆகியிருக்கு. அவரை யாருங்க கவனிக்கிறது?" துர்க்கா தன் கவலையை வெளிப்படுத்தினாள்.

"ஏன் அவர் மகன் மருமகளுடன் தானே இருக்கிறார்? கைநிறையப் பென்ஷன் வாங்கிறார். நீ ஏன் அப்பாவைப் பற்றி வீணா அலட்டிக் கொள்கிறாய்?" நரேன் சாதாரணமாய்ச் சொன்னான்.

"என்னங்க, கொஞ்சமும் அறிவில்லாமப் பேசிறீங்களே? மகன் என்ன இருபத்திநாலு மணிநேரமும் வீட்லயா உக்காரமுடியும்? பக்கத்லருந்து என்ன ஏது என்று கேட்கவா முடியும்? மருமக சின்னப் பொண்ணு. கலியாணமாகி மூணுமாசங் கூட ஆகல. அதுகள் பிக்கல் பிடுங்கல் இல்லாம வாழ்க்கைய அநுபவிக்க பெரியவங்க உதவக்கூடாதா? மருமக ஒருத்தி வந்திட்டா அவதலையில எல்லாத்தையும் கொட்டிற்று அக்கடான்னு கௌம்புறது நியாயமா?"

துர்க்கா மூச்சிரைக்கக் கூறிய வார்த்தைகள் நரேனை ஆச்சரியத்தில் புதைத்தது. துர்க்கா ஆயிரத்தில் ஒருத்தியாக அவனுக்குப் பட்டாள். நரேனின் உதட்டில் மெல்லிய புன்னகை ஊர்ந்தது. வேண்டுமென்றே அவளைச் சீண்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா... அந்த மருமக என் தங்கை என்பதால்தானே உனக்கு அப்படியொரு அனுதாப வலை வீசுறது?"

"இல்ல. இல்ல!" துர்க்கா உரக்கக் கத்தினாள். அவள் முகம் குங்குமமாய்ச் சிவந்தது. "ரமாவோ யாரோ நியாயம் ஒண்ணுதாங்க! கையை இழந்த அப்பாக்குக் கையா இருந்து ஆறுதல் குடுக்காம அவருக்குத் துணையாருக்காம நம்மோடு வந்து ஒட்டிக்க அம்மாவுக்கு எப்பிடி மனசு வந்தது? ஒரு மனைவியிடம் எடுத்துக்கிற உரிமையை ஒரு மருமகளிடம் எடுத்துக்க அப்பாவால் முடியுங்களா? சொல்லுங்க?" துர்க்கா நரேனின் தோளைப் பலமாக உலுக்கினாள்.

அவள் கண்ணீர் அவன் இதயத்தைத் தொட்டது. அவன் ஆதரவோடு அவளை அணைத்தான். துர்க்கா அவன் மடியில் தலைசாய்த்தாள். அவள் முகத்தில் சிந்தனை கோணல் மாணலான கோடுகளை வரைந்தது.

துர்க்காவும் நரேனும் மௌனத்திலாழ்ந்தபோது... விசும்பல் ஒலி அறையுள் நுழைந்தது.

திடுக்கிட்ட துர்க்காவும் நரேனும் வெளியே வந்தபோது... அம்மா பயணப்பையுடன் நின்று கொண்டிருந்தாள். "மன்னிச்சுடும்மா. நீ சொன்னதெல்லாம் சரிதான்!" விம்மல்களுக்கிடையே அம்மாவின் வார்த்தைகள் விழுந்து துடித்தன. அவள் புறப்பட்டுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டு

சிச்சேரில் சாய்ந்து படுத்திருந்தாள் செல்லம்மா.அந்த அறையில் நிலவிய இருட்டை அகற்ற ஒரு மெழுகு திரி உருகிக் கொண்டிருந்தது. தினமுரசுப் பத்திரிகை செல்லம்மாவின் நெஞ்சில் கவிழ்ந்து கிடந்தது. அதில் வெளியாகி இருந்த 'மண்பாசம்' கதையைப் படித்த அவள் மனசு சங்கடத்தில் ஆழ்ந்தது.

பத்து மாதங்களுக்கு முன்பு தான் பிறந்த மண்ணைவிட்டுத் தான் வந்ததைப் பற்றிச் சிந்தித்தாள். எல்லாவற்றையும் விட்டுவர மனமில்லைத்தான். ஆனால் என்ன செய்வது? மண்பாசத்தை மகளின் பாசம் வென்றுவிட்டதே. இப்படித்தான் செல்லம்மா தன் மனசை ஆறுதல்படுத்தினாள்.

"செல்லம்மா... பிள்ளை சுமதி..."

வாசல் கேற்றில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டுச் செல்லம்மா தன் பருத்த சரீரத்தை அசைத்துக் கஷ்டப்பட்டு எழுந்து எட்டிப் பார்த்தாள். அவள் குரலில் உற்சாகம் பிறந்தது. "ஆரு சங்கரப்பிள்ளையண்ணையோ உள்ள வாங்கோ" என்று சாய்மனைக்கருகில் கிடந்த கதிரை ஒன்றை இழுத்துப் போட்டாள்.

"யாழ்ப்பாணம் போனியளாமெண்டு அறிஞ்சன். எங்கட வீட்டுப் பக்கமும் போனியளோ?" பேச்சைத் தொடங்கினாள் செல்லம்மா.

"அதச் சொல்லிற்றுப் போகத்தான் வந்தனான்.உங்களின்ர வீடு பாழடைஞ்சி கிடக்கு. யன்னல் கதவு ஒண்டையும் காணம். வீட்டுக்குள்ள சாமான்கள் ஒண்டுமில்ல". சங்கரப்பிள்ளை யண்ணை சொல்லி முடிக்கு முன்னர் " என்ர கதிரவேலப்பா, உன்னக் கையெடுத்துக் கும்பிட்டதுக்குப் பலனா இது?" செல்லம்மா கண்கலங்கினாள். சங்கரப்பிள்ளையண்ணை எழும்பிவிட்டார். "போதும், செல்லம்மா. புலம்பி ஒண்டும் நடவாது. ஏதோ போய் ஆகவேண்டியதைக் கவனி நான் வாறன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லம்மா மௌனமாக அழுதாள்.முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு நிலைப்படியில் சாய்ந்தபடி சிந்தனயிலாழ்ந்தாள்.

'மீண்டும் போய் என்ன செய்வது? வீட்டைப் பழைய நிலைக்குக் கொண்டு வாறதெண்டால் முடிஞ்ச அலுவலா? வலிகாமத்தில் பலியான தன கணவனை நினைத்தபோது அவள் நெஞ்சு வலித்தது. சுமதி - நேர்ந்து பெற்ற ஒரே பிள்ளை. அவளைவிட்டால் வேறு நாதியில்லை. 'நல்லவேளை சுமதிர படிப்புச் சோறு போடுது'... நினைவுகளில் நீந்தி அசைவாட்டமற்று இருந்த செல்லம்மா, செருப்புச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள்.

சுமதி, "அம்மா" என்றாள். படியருகே இருந்தாள். அவள் நெற்றியில் பனித்திருந்த வியர்வைத் துளிகளைச் செல்லம்மா தன் முந்தானையால் ஒற்றித் துடைத்தாள். 'பாவம் குமர்ப்பிள்ளை ஓடியோடி உழைக்குது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். 'சங்கரப்பிள்ளையண்ணே சொன்ன செய்தியைச் சுமதியிடம் சொல்லப்படாது' என்று எண்ணினாள் செல்லம்மா. "அம்மா, இதைக் கேளுங்கோவன்" என்று அவசரப்பட்டாள் சுமதி.

"றஞ்சித் ஐயாவின் அப்பா இருட்டில் கதிரையெண்டு எண்ணி நிலத்தில விழுந்து இடுப்பெலும்பு உடைஞ்சு போச்சாம். கன்னத்திலயும் காயமாம். பேபி அன்ரி பாவம் தனியக் கஷ்டந்தானே, கார் பிடிக்கவும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவும் லைற் இல்ல. இருட்டுக்க ஏதுமெண்டா ஒண்டும் செய்ய ஏலாம இருக்கு: ரியூட்டரி நிண்டு வாற வழியில சேத்துங்க அங்கிள் சொன்னார்" பரிதாபப்பட்டாள் சுமதி.

"அதுசரி பாவந்தான். பட்டுத் தேறிய நமக்கு இருட்டு பழகிப்போன சங்கதி. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும்?" செல்லம்மா நிதானமாகக் கூறிய வார்த்தைகள் சுமதியைச் சிந்திக்க வைத்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டவிழாத மொட்டுக்கள்

சுபா சோர்வோடு நடந்து தன் வீட்டை அடைந்தாள். யாரோ பின்னால் வருவது போன்ற ஓசை கேட்டுத் திரும்பிப் பாரத்தாள். யாருமில்லை. கந்தையா அண்ணையின் செவலை மாடு மொழு மொழு என்று அழகாய் இருந்தது, எலும்புந் தோலுமாய்ப் போனது சுபாவுக்கு ஏனோ வேதனையைத் தந்தது.

வீட்டு வாசல் கதவு திறந்தே கிடந்தது. சுபா மூலையில் செருப்புகளை உதறிப்போட்டாள். 'அலுவல் முடியும் வரை அண்ணன் தம்பி, முடிந்த பிறகு நீஆரோ நான் யாரோ?' பழமொழியை எண்ணியதும் என்றுமில்லாத பரிவு செருப்புமேல் வந்தது அவளுக்கே ஆச்சரியம். அரவமின்றி மெதுவாக நடந்து அறையுள் நுழைந்தபோது, ஆபீசில் ரைப்பிஸ்ற் பாமதி கேட்டது ஞாபகம் வந்தது.

"ஏண்டி சுபா! நீ எப்போதான் கலியாணச் சாப்பாடு தரப்போறே?"

"ஏய் உனக்குச் சாப்பாடு வேணும்னா தாறேன். ஆனா, கலியாணச் சாப்பாடு இந்த ஜென்மத்தில உனக்குக் கிடையாது".

"ஏனாம்?"

"எனக்குக் கலியாணம் பண்ணிக்க இஷ்டமில்ல. எல்லாரும் பண்ணித்தான் ஆகணும் என்ற கட்டாயமா?"

சே... நான் பாமதிக்குச் சொன்னது சரிதானா? எவ்வளவு அப்பட்டமான பொய் அது. வேறு என்னதான் சொல்லமுடியும்? மனசிருக்கு வழிதான் இல்ல... பெத்தவங்கட பிடிவாதத்தால் இப்படியாச்சு என்று எப்படித்தான் சொல்வது? தனக்குள் தானே கேள்வியும், பதிலுமானாள் சுபா. எதையோ நினைத்துக் கொண்டவள் கண்ணாடி முன்னால் நின்று தன்னை அதிசயமாகப் பார்த்தாள். அந்த அழகான கூந்தலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளி முளைத்தது போல் நரை: தாடையிலும் கழுத்திலும் சுருக்கம். திடீரென்று அவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை எதிர்ச் சுவரில் மாட்டியிருந்த போட்டோவில் பதிந்தது. பிரபல நர்த்தகி பத்மினி போல் சுபா அழகாக இருப்பதை இப்போது அவளால் நம்ப முடியவில்லை. அந்த நாட்களில்'நீ பேரழகிடி பத்மினி' என்று எல்லோரும் சொன்னது அவள் காதில் இனிமையாகக் கிசுகிசுத்து மறைந்தது. சுபா உடைகூட மாற்ற மறந்தவளாய் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்தாள். அவள் பார்வை எங்கோ நினைவுகளைத் துளாவியது.

"அம்மா, நான் அன்ரனியைத்தான் கலியாணம் பண்றதா முடிவு பண்ணிட்டன்".

"நீ என்னதான் சொன்னாலும் உன் அப்பா இதுக்கு ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்".

"அவர் ரொம்ப நல்லவரம்மா. சீதனங் கூட வாங்கமாட்டார். உயர்ந்த உத்தியோகத்ல இருக்கார். இப்படியொரு சம்பந்தம் கிடைக்க நீங்க குடுத்து வைக்கணும்".

" அவன் நல்லவனோ, கெட்டவனோ, சீதனம் வாங்குவானோ, இல்லியோ அவன் ஒரு கிறிஸ்தவன். பரம்பரையான இந்துக் குடும்பத்தில் இப்படிக் கலப்படம் பண்ணாதே. உன் அப்பாவுக்குப் பிடிக்காத எதுக்கும் சரிபோடும் பழக்கம் எனக்கில்லை. நாங்க போட்ட கோட்டை நீ தாண்ட்றதாயிருந்தா முதல்ல எங்க பிணத்தைத் தாண்டு".

சுபா நினைவுகளில் வெறுப்போடு புரண்டபோது, அன்ரனி அவள் நெஞ்சில் அவசரமாக நுழைந்து கதை பேசினான்.

"சுபா எனக்கு வார்த்தை ஜாலங்கள் தெரியாது. நேரடியாகவே சொல்கிறேன். நான் உன்னைக் காதலிக்கிறேன். கலியாணஞ் செய்யவும் ஆசைப்படுறன். உன் வீட்டில் எதிர்ப்பு என்கிறாய். எப்படி நம்ம கலியாணம் நடக்கும்? நான் என் அம்மாவைச் சமாளித்து விடுவேன்... நீ?"

"எனக்கு வழி தெரியலியே?"

"ஒரே வழி - பதிவுத் திருமணம் செய்ய என்னுடன் வந்துவிடு!" சுபா அன்ரனியின் கைகளை இறுகப் பற்றினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுபா பயப்படாதே! நம்மைப் பொறுத்தவரை இந்த வழி நல்ல வழி. இதில் அவசரம் கூடாது. பந்து உன் பக்கம்தான்!" மாதம் என்று மௌனத்தில் கரைந்தது.

ஒரு நாள்...

ஆபீசில் யாருமில்லை. அன்ரனி சுபாவை நெருங்கினான். "காயா? பழமா?" கண் சிமிட்டினான் அவன்.

"காய்தான். என்றைக்குமே என்னால் கனியாக முடியாதுங்க: பெத்தவங்களையும் மீற முடியல" அவள் ஓவென்று அழுதாள். அன்றுதான் அவள் அன்ரனியைக் கடைசியாகச் சந்தித்தது. ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்த்த சுபாவின் கண்களில் இருந்து வடிந்த நீர் பொட்டுப் பொட்டாகத் தலையணையில் உதிர்ந்தது.

இப்போது... அன்ரனியின் கதிரையில் பரசுராமன். அன்ரனி அலைகடலுக்கப்பால் சென்றுவிட்ட செய்தி சுபாவின் இதயத்தைக் கசக்கியது.

'ஒரு பெண்ணுக்குக் கலியாணமாக வரதட்சணை மட்டுமே தடையில்லை. பெற்றோரின் பிடிவாதமுந்தான்' என்று சத்தம் போட்டுச் சொல்லவேண்டும் போலிருந்தது சுபாவுக்கு. ஆனால் அவளால் சொல்ல முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா வந்தாள்

சங்குப்பாட்டி வெற்றிலை உரலை 'டங்டங்' என்று இடித்துக் கொண்டிருந்தாள். தாழ்வாரத்தில் தூங்கிக் கிடந்த சொறிநாய் ஒன்று அடிக்கடி தலையைத் தூக்கி வள்வள் என்று குரல் எழுப்பியது.

சுகந்தி கோழிக்கூட்டுப் பக்கம் பார்வையை மேயவிட்டாள். அந்த வெள்ளைப் பேட்டுக் கோழி எவ்வளவு அன்போடு அதன் குஞ்சுகளை அணைத்தபடி கிடப்பதைக் கண்டு ஆச்சரியத்தில் நெகிழ்ந்து போனாள். என்ன நினைத்தாளோ "பாட்டி பாட்டி" என்று கத்தியவள் ஓடிச்சென்று சங்குப்பாட்டியின் எதிரே உட்கார்ந்தாள்.

"என்னம்மா...?" பாசத்தோடு பேத்தியை விழித்தாள் பாட்டி.

"ஏன் பாட்டி இந்தக் குஞ்சுக் கோழிகளுக்கெல்லாம் அம்மா... யாரு...?"

"அந்த வெள்ளைக் கோழிதான்!" பாட்டி பொக்கை வாயைத் திறந்து சொன்னாள். இடித்த வெற்றிலையை வாயில் குதப்பிவிட்டு உரலை ஒரு ஓரமாக உருட்டி விட்டாள் பாட்டி.

"பாட்டி...! எனக்கு அம்மா இரு..க்..கா?" கண்கள் பளபளக்கச் சுகந்தி கேட்டாள்.

"இருக்கே..." பாட்டி அந்த ஏழு வயதுச் சிறுமியை இழுத்துத் தன் மடியில் வைத்தாள்.

"அம்மா எப்படி இருப்பா...? சொல்லு பாட்டி..."

"அழகாருப்பா..."

"ஹாய் எங்க ரீச்சர் மாதிரியா?"

"ஆமா ஒன்னோட ரீச்சர் மாதிரியேதான்!"

"எங்க ரீச்சர் நெத்தில தெனம் வட்டமாய்ப் பொட்டு வைப்பா... கூந்தல் ரொம்ப நீளம் பாட்டி. வடிவான சேலை கட்டி வருவா. நாங்கல்லாம் நியூ பிஞ்ச் கொடுப்பம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுகந்திக் கண்ணு... உன்னோட அம்மாவும் அப்படித்தான். இருப்பா. நீ வேணும்னாப் பாரேன்...!"

"பாட்டி அம்மா என்னோட நேசமா?"

"இல்லாமலா..?"

"அப்போ என்னவிட்டு ஏன் போனா?"

"காசு சம்பாதிக்கப் போயிருக்கா. இந்தா பார்... நீ போட்டிருக்கிற சட்டை: இந்த வெளயாட்டுச் சாமான் எல்லாம் ஒனக்காக உன் அம்மா வாங்கினதுதான். அவ சீக்கிரம் வருவா கண்ணு!"

பாட்டி சொன்னதெல்லாம் சுகந்தியின் மனதில் பசுமையாகப் பதிந்துவிட்டன. அம்மாவை நினைக்கும்போது ரீச்சரும் ரீச்சரை நினைக்கும் போது அம்மாவும் அவள் பிஞ்சு மனதில் சதிராடிச் செல்வது வழக்கமாகிவிட்டது.

அந்தச் சிறிய பள்ளிக்கூடம் காலை ஏழரை மணிக்கெல்லாம் சுறுசுறுப்படைந்துவிடும். "குட் மோணிங் ரீச்சர்..." முகம் மலர்ந்து கூறுவாள் சுகந்தி.

சாந்தா ரீச்சர் சிரித்த முகத்துடன் பதில் வணக்கம் சொன்னாள்.

"ரீச்சர்... உங்களுக்காக ரோஜாப்பூ கொண்டு வந்திருக்கிறேன்"

ரீச்சர் அதை வாங்கித் தன் நீண்ட சடையில் செருகத் தவறுவதில்லை.

சுகந்தி, ரீச்சரின் சேலைத் தலைப்பை மெதுவாகத் தொட்டுப் பார்ப்பாள். ஒவ்வொரு சமயம்... ரீச்சரின் இடுப்பைக் கட்டியணைத்துவிட்டு ஓடுவாள். சுகந்தி தன்மீது வைத்த பாசத்தைப் புரிந்து கொண்ட ரீச்சர் பதில் அன்பு காட்டுவது வழக்கமான செயலாகிவிட்டது. சுகந்திக்கு இரண்டு வயதாயிருக்கும்போதே அவள் அப்பா கடலில் குளிக்கப்போய் அதில் மாண்டுகொண்ட பரிதாபத்தைச் சங்குப்பாட்டி சொன்னது சாந்தா ரீச்சரின் நினைவில் உறுத்தியது. நல்லாயிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் நலிந்து போனதும் அவள் அறிந்த விஷயமே. சுகந்தியின் அம்மா பக்கத்து வீட்டுப் போதகர் ஒருவரின் தயவால் பிள்ளைப் பராமரிப்புப் பணிக்காக இத்தாலி சென்ற கதையும் சங்குப்பாட்டி சொல்லிவைத்திருந்தாள்.

குழந்தைகளின் ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் எவ்வளவு வினோதமானவை! சாந்தா ரீச்சர் நினைவுகளிலிருந்து தன்னைக் கத்தரித்துக் கொண்டாள். மூன்றாந் தவணைப் பரீட்சை முடிந்த மகிழ்ச்சியில் மாணவர்கள் தம் விருப்பம்போல் விளையாடிக் கொண்டிருந்தனர். சாந்தா ரீச்சர் வகுப்பறையில் பாடக் கொப்பிகளை ஒழுங்கு செய்து கொண்டிருந்தாள். "ரீச்சர்... சுகந்தியைப் பிறின்சிப்பல் கூப்பிடுகிறார்" பத்தாம் ஆண்டுப் பையன் சொன்னான்.

"அதோ..." என்று ரீச்சர் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்த சுகந்தியைக் காட்டிவிட்டு றெஜிஸ்ரரைப் புரட்டினாள். போன வேகத்தில் திரும்பி வந்த சுகந்தியின் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

"ரீச்சர்! சுகந்தியின் அம்மா வந்திருக்கிறா.. ஆனா அது அவங்க அம்மா இல்லையாம்... யாரோ வந்திருக்கிறாங்க என்று ஓடி வந்திட்டா..." சுகந்தியின் நண்பிகள் சாந்தா ரீச்சரிடம் அவசர அசவரமாகச் செய்தி சொன்னார்கள்.

ரீச்சரின் முகத்தில் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கணப்பொழுதில் அப்பிக் கொண்டன. சுகந்தியைக் கையில் பிடித்துக் கொண்டு வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள் சாந்தா ரீச்சர். அங்கே... முழு நீளக் காற்சட்டை, மேற்சட்டை அணிந்து ஒட்ட வெட்டிய முடியுடன் அம்மா... நின்று கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னது நீதானா...?

இவனா என் காதலன்? இவனையா இதுநாள் வரை என் இதயத்தில் வைத்துப் பூஜித்தேன்? இவனைப் போல் ஒருத்தன் கிடைக்கக் கொடுத்து வைத்திருக்கவேண்டும் என்று என் நம்பிக்கையெல்லாம் அவன்மேல் கொட்டி வைத்திருந்தேன்! சை... என்ன ஆளிவன்?

இவனுக்காக... இவன் குடும்பத்துக்காக... என்னென்ன வெல்லாம் செய்தேன்? இவனுக்கு இதயம் இல்லையா?

"ஜானு... என் தங்கைக்குப் பரீட்சை கிட்டுது. ஸ்கூல்பீஸ் கட்டினாத்தான் பரீட்சை எழுதுவாள்".

கொடுத்தாள்.

"ஜானு ... எங்கம்மாவுக்குக் கடுமையான நெஞ்சுவலி அடிக்கடி வருது. சரியான சிகிச்சை இல்லாட்டி அவ பிழைக்க மாட்டா". அவன் வார்த்தைகளில் சோகம் அப்பிக்கிடந்தது.

உதவினாள்.

"ஜானு... நான் வேலைக்கு ட்றை பண்றேன். நல்ல வேலை. கை நிறைஞ்ச சம்பளம். ரொக்கப் பணம் டிப்பாசிட் கட்டினாத்தான் அந்த வேலை கிடைக்கும். இந்த வேலை கிடைச்சிட்டா அப்புறம் என்ன? கலியாணந்தான். உன்னட்ட இருக்கா?"

இருந்தது.

இப்படி எத்தனையோ உதவிகளைப் பெற்ற சங்கரா எனக்குத் துரோகியானான்...?

சிறைக் கைதியாகிவிட்ட ஜானுவின் இதயத்தில் உக்கிப் போயிருந்த நினைவுகள் ஒவ்வொன்றாக உயிர் பெற்று அவளைச் சித்திரவதை செய்தன.

ஜானு வசதி வாய்ப்புள்ள ஒரு குடும்பத்தின் மூத்த மகள். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போதுதான் சங்கர் அவளுக்குப் பரிச்சயமானான்.

படிப்பில் கெட்டிக்காரன். பணமுடை உள்ளவன். கஷ்டப்பட்டுப் படிப்பவன் என்பது பல்கலைக் கழகத்துக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்த உண்மை. அவனுடைய அம்மா மாவிடித்து இடியப்பம் அவித்துக் கடைகளுக்குக் கொடுப்பதைத் தொழிலாகக் கொண்டவள்.

பல்கலைக் கழகக் கலைவிழாவில் சங்கரும் ஜானுவும் ஜோடி சேர்ந்து நடித்ததிலிருந்து இருவருக்குமிடையே நெருக்கம் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் உயிராக நேசித்தனர். இவர்கள் காதலுக்கு ஜானுவின் அப்பா பச்சைக் கொடி காட்டிவிட்டார். அவள் தாயில்லாப் பெண். ஆனாலும் அவள் அப்பா அவளுக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை.

பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின்னரும் இவர்கள் நட்புத் தொடர்ந்தது. ஜானு சங்கருக்காகச் செய்த உதவிகள் ஏராளம்.

உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

வள்ளுவர் சொன்ன இந்தக் குறளுக்கு இலக்கணமாகி நின்றாள் ஜானு. சங்கர் இப்போது கொழும்பில் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தன்.

ஜானு யாழ்ப்பாணத்திலிருந்து பல சோதனைச் சாவடிகளையும் வேதனைகளையும் தாண்டி ஒரு வழியாய் கொழும்புவந்து சேர்ந்தாள். தங்குவதற்குக் கஷ்டப்பட்டு ஒரு விடுதியில் இடம் பிடித்தாள். அங்கிருந்தவாறே சங்கரோடு தொடர்பு கொண்டு அவனுக்காகக் காத்திருந்தாள்.

எண்ணங்களையும் ஆசைகளையும் மனதில் அளைந்து கொண்டிருந்தாள். சங்கரின் மடியில் முகம் புதைத்துத் தான் கடந்து வந்த பாதைகளில் நடந்த துயரங்களைச் சொல்லி ஆறுதல் பெறவேண்டுமென்று துடியாய்த் துடித்தாள். தானும் சங்கரும் திருமணம் செய்து வாழப்போகும் நாட்களை ஒத்திகை பார்த்தாள்.

மறுநாட் காலை சங்கர் ஜானுவைச் சந்திப்பதாய்ச் சொல்லியிருந்தான். எண்ணக் குவியல்களுக்குள் தன்னைப் புதைத்து கண்மூடிப் படுத்திருந்தாள் ஜானு. அவளால் தூங்கமுடியவில்லை. யுத்தம் போர் என்று புத்தகங்களில் படித்த காலம் அவள் கண்முன்னே விரிந்தது. அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பயங்கரம் அவள் அறியாதது. இன்றோ... அதன் அழிவுகளையும் கொடூரங்களையும் அனுபவத்தில் கண்ட உண்மை அவள் நெஞ்சில் வலித்தது.

பிஞ்சுகளும் இளசுகளும் கிழங்களும் ஆயிரக்கணக்கில் பலியாகிப் போனதை எண்ணிப் புலம்பினாள். வீடு வாசல்களை இழந்து அகதிகளாய் இடம் பெயரும் மனிதக் கும்பலை எண்ணி வேதனைப்பட்டாள். வளம் கொழித்த யாழ் பூமி விதவையான பரிதாபத்தை எண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

எது எப்படியோ - துன்பங்கள் தந்த துணிச்சலையும் ஜானுவால் வியக்காமல் இருக்க முடியவில்லை. கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்து விடியலுக்காகக் காத்திருந்த ஜானு அப்படியே கண்ணயர்ந்து போனாள்.

படபடவென்று கதவு தட்டும் சத்தம். ஜானுவின் இதயமும் அதி வேகமாய்த் துடித்தது. நேரம் அதிகாலை ஐந்தைக் கடந்துவிட்டது. ஜானு கலக்கத்துடன் கதவைத் திறந்தாள்.'பொலிஸ்!' காக்கிச் சட்டைகள் உஷாராகின. "யாப்பனத...?" அந்தக் கேள்வி அதிகாரத்துடன் வெளிவந்தது. விடுதியில் உள்ள தமிழர்களைச் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குக் கொண்டு செல்வதாய்ச் சொன்னார்கள். வாகனம் அவளையும் உள்ளே திணித்துப் பறந்து சென்றது.

ஜானு விசாரணையின்போது தேவையான ஆவணங்களைக் காட்டினாள். தான் கஸ்ரம்ஸ் ஒ.ஃ.பீசர் சங்கரைத் திருமணம் செய்வதற்காகவே யாழ்ப்பாணத்திலிருந்து வந்த விபரத்தையும் சொன்னாள். ஆவணங்களும் அவள் சொன்ன செய்தியும் பலமிழந்து போயின.

சங்கரும் விசாரணைக்காக வரவழைக்கப்பட்டான். இந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?

"எனக்குத் தெரியாது"

சொன்னவன் சங்கர்தான்.

"உன்னைக் கலியாணம் செய்ய யாழ்ப்பாணத்தில் இருந்து வந்ததாகச் சொல்றதெல்லாம் உண்மையா?" போலீசின் குரலில் அதிகாரம் தெறித்தது. "பொய்..."என்று... சொன்னவன் சங்கர்தான். ஜானுவின் இதயம் வெடித்துச் சிதறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி

இரவு முழுவதும் ஓயாத ஷெல்வீச்சு. உயிர் போவதும் வருவதுமாயிருந்தது செல்லம்மாவுக்கு. பேரப்பிள்ளை அருணாவை அணைத்தபடி வண்டிலுக்கடியில் படுத்திருந்தாள். மூன்று நாட்களுக்கு முன்பு தன் ஒரேமகள் றஞ்சிதாவுக்குச் சூடு பட்டது. "அம்மா என்ர குஞ்சு" என்று அவள் சொல்லி முடிப்பதற்கிடையில் துடிப்பு அடங்கிப் போனது எல்லாம் செல்லம்மாவின் நினைவில் எட்டிப் பார்த்தன. கடைவிழிகளில் இருந்து கன்னங்களில் வழிந்த நீரை விரலால் சுண்டினவள் "பெருமானே! பழம் இருக்கேக்க பிஞ்சு விழுந்து போச்சே" என்று முனகியபடி கண்ணயர்ந்து போனாள்.

வேட்டுச் சத்தங்களுடன் வேகமாகப் பொழுதும் புலர்ந்தது. வீடு வாசல் பாத்திர பண்டங்கள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தாள் செல்லம்மா. எடுத்துச் செல்வதற்கென்று என்ன இருக்கிறது? காலங்காலமாகச் சேர்த்ததெல்லாம் கணப்பொழுதில் அழிந்துவிட்ட அவலம் அவள் நெஞ்சை இடைத்தது. "அம்மா என்ர குஞ்சு..." றஞ்சிதாவின் ஈனக்குரல் மறுபடியும் செல்லம்மாவின் காதில் ஒலித்திருக்க வேண்டும். ஆவேசம் வந்தவள் போல் அருணாவை இழுத்துக் கொண்டு மாதகல்லை விட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

செல்லம்மா அரண்மனைக்குச் சொந்தக்காரி இல்லை என்றாலும் அழகிய வீடு வாசல் வைத்து ஆட்சி செலுத்திய ராணி. பேரோடும் புகழோடும் வாழ்ந்தவள். வட்டிக் கணக்குப் பார்க்க வாசலில் வந்து நிற்கும் கூட்டம் நிச்சயம் அவளை மறக்கமுடியாது.

செல்லம்மாவுக்கு ஐம்பது வயதானாலும் திடகாத்திரமானவள். அருணாவைத் தூக்கியும் நடத்தியும் ஒருபடியாய் ஒரு மைலைத் தாண்டிவிட்டாள். "பெத்தாச்சி... கால் வலிக்குது, பசிக்குது" அருணா அரற்றினாள். செல்லம்மாவின் இதயம் வலித்தது. மூக்கில் வடிந்த நீரை முந்தானையால் துடைக்கப் போனவளை அடிமடியில் இருந்த அரிசிக் குறுணல் வருடியது. அவள் முகத்தில் வந்த களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென்று வடிந்து போயிற்று. குறுணலைக் கூழாக்கித் தானும் பிள்ளையும் வயிறாறலாம் என்றால் சட்டி பானைக்கு எங்கே போவது? செல்லம்மாவுக்குத் தொலைவில் தெரிந்த ஒரு சின்ன வீடு வயிற்றில் பாலை வார்த்தது. அங்கு போய்க் கூழ் காய்ச்சிக் குடிப்போம் என்று ஆசைகாட்டி அருணாவை நடத்திச் சென்றாள்.

பனை ஓலையும் தகரமும் அந்தச் சின்னஞ் சிறு வீட்டின் வறுமையைப் பறைசாற்றின. எது எப்படியோ செல்லம்மா வந்து சேர்ந்துவிட்டாள். முற்றத்து மணலில் பனங்கொட்டைகள் சில தலைவிரித்துக் கிடந்தன. முழங்காலைக் கையால் தேய்த்தபடி உட்கார்ந்தவள் மடியில் அருணா முகம் புதைத்து அழுதாள்.

அரவங் கேட்டு வெளியே வந்தவன் வைரமுத்து. செல்லம்மாவுக்குப் 'பகீர்' என்றது. ஆயிரந்தேள் அவள் உடலில் ஒரே சமயத்தில் கொட்டிய உணர்வு. வைரமுத்து வேறுயாருமல்ல: செல்லம்மாவின் காணியில் கள்ளிறக்கியவன். 'உவனை எல்லாம் வீட்டுக்குள் எடுக்கமாட்டம். பின் வளவில் கைகட்டி நிற்பவனின் காலடிக்கல்லோ வந்திட்டம்' மனசுக்குள் நினைவுகளோடு போராடினாள் செல்லம்மா. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள். "பெத்தாச்சி...பசிக்குது" புறங்கையால் கண்ணைத் தேய்த்து அழுதாள் அருணா. வைரமுத்துவிடம் எதையும் கேட்கும் நிலையில் செல்லம்மா இல்லை.

அருணாவின் பிஞ்சு முகத்தைப் பரிதாபமாகப் பார்த்த வைரமுத்து உள்ளே போய் இரண்டு கோளாவில் ஒடியல் கூழை வார்த்து வந்து நீட்டினான். பசியின் கொடுமை அருணா அதைப் பருகிய விதத்தில் தெரிந்தது. வைரமுத்துவின் கண்களில் நீர் பனித்தது. ஆறுமாதங்களுக்கு முன்னால் பலியாகிப் போன அவன் மனைவியும் மகளும் நினைவில் வந்தனர்.

கோளாவைக் கையில் ஏந்தியபடி யோசனையில் ஆழ்ந்துபோன செல்லம்மாவைப் பாத்த வைரமுத்து "அம்மா உங்களின்ர நினைப்புப் புரியுது. நான் சாதியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறஞ்சவன்தான். ஆனா நானும் மனுஷன். அதுவும் மனுஷத்தன்மை உள்ள தமிழன். பசியெண்டா என்னவெண்டு தெரிஞ்சவன்" என்று பவ்யமாகக் கூறினான். அவன் வாயில் இருந்து வந்த ஒவ்வொரு வார்த்தையும் செல்லம்மாவின் இதயத்தில் சவுக்கடியாய் விழுந்தது. முகம் மலரக் கூழைக் குடித்தவள், அரிசிக் குறுணலையும் வைரமுத்துவிடம் கொடுக்கத் தவறவில்லை.

செல்லம்மாவின் மனதில் சொல்லமுடியாத ஒரு அமைதி. அருணாவின் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு பாதுகாப்பான இடம் தேடி அவள் மீண்டும் நடக்கத் தொடங்கிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் சிரித்தாய் என்னைப் பார்த்து...

**ப**த்மா வெகு லாவகமாகக் காரோட்டுவதை அருகிலிருந்து ஓரக்கண்ணால் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான் ரவி. இவ்வளவு சீக்கிரம் தன் மனைவி காரோட்டக் கற்றுக் கொள்வாள் என்று அவன் சற்றுமே எதிர்பார்க்கவில்லை. நினைத்தபோது பெருமையாக இருந்தது அவனுக்கு. பத்மாவைக் கரம் பற்றி மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை.

"உன்னை நான்... சந்தித்தேன்... நீ ஆயிரத்தில் ஒருவன்..." பத்மா முணுமுணுத்த பாட்டு ரவிக்குக் கிளுகிளுப்பை உண்டுபண்ணியது. ஆகாயத்தில் அவளோடு கைகோர்த்து மிதப்பது போலிருந்தது அவனுக்கு.

பத்மா, "என்னங்க..." என்றாள்.

புருவத்தை உயர்த்திப் புன்னகையுடன் அவளைப் பார்த்தான் ரவி.

"எனக்கு ஐஸ்கிறீம் வேணும்" ரவியின் தோளில் முகம் பதித்துக் குழைந்தாள் பத்மா.

ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த தளிர்க் கரத்தைப் பற்றினான் ரவி.

கார் அதிவேகமாகச் சென்று விபுலானந்த வீதி ஓரம் பிரேக் போட்டு நிமிர்ந்தது.

ரவி ஐஸ்கிறீம் கடையைத் தேடி நடந்தான். கொட்டாவி விட்டு நிமிர்ந்து உட்கார்ந்த பத்மாவுக்கு அவளுடைய முதலிரவு ஞாபகம் வந்து குறுகுறுத்தது. ரவி முகமூடி போட்டுத் திருடனைப் போல் வந்து படுக்கையறையில் பயங்காட்டியதை எண்ணி சிரித்தவளுக்கு எதிரே ஆச்சரியம் காத்திருந்தது.

பத்மாவின் காருக்கு நேர் எதிரே மற்றொரு கார் சத்தமின்றி அசைய மறந்து கிடந்தது. அதன் முன் ஆசனத்தில் தனிக்காட்டு ராஜாவாக வீற்றிருந்தான் விஜய். அழகான ஓர் இளம் பெண்ணின் கிண்கிணிச் சிரிப்பு தன்னை நோக்கியதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட விஜய் பதில் சிரிப்புடன் பத்மாவைப் பார்த்தான்.

பத்மாவுக்கு எரிச்சலூட்டியது. ' என்ன இவன் கொஞ்சங்கூட மெனஸ் இல்லாமல் என்னைப் பார்த்துச் சிரிக்கிறான் இடியட்' கடுகடுப்புடன் அவனைப் பார்த்தாள் பத்மா.

விஜய் குழம்பினான். 'ஒரு வேளை தெரிஞ்ச பொண்ணோ, ஊருக்குப் புதிசோ?' கேள்விகள் குத்திட்டு நின்றன. சிந்தனை வயப்பட்ட விஜய் பத்மாவையே உற்றுப் பார்த்தான். அவளுக்கு இதயம் படபடத்தது.

'ஐஸ்கிறீம் வாங்க இவ்வளவு நேரமா? சே... ஒரு பெண் தனியா உட்கார்ந்தால் அவ்வளவுதான்!' அலுத்துக் கொண்ட பத்மா அந்த விஜய் இன்னும் தன்னைப் பார்க்கிறானா என்று அறியும் ஆவலில் பார்வையை அவன் பக்கம் வீசினாள். அவனுடைய பார்வையை மீண்டும் சந்தித்த பத்மாவுக்கு அதிர்ச்சி. பொல்லாத கோபம் அவள் முகத்தில் புகுந்து விளையாடியது.

நல்ல வேளை... கையில் ஐஸ்கிறீம் உருகி வழிய ரவி வந்து சேர்ந்தான். "என்ன ரவி இவ்வளவு லேற்? என்னை மறந்துட்டீங்களா?" பத்மா சிணுங்கினாள்.

"நோ, டியர் உனக்காக ஐஸ்கிறீம் தேடி எவ்வளவு தூரம் நடந்தேன் தெரியுமா? அதுக்காக அற்லீஸ்ற் ஒரு கிஸ் தரக்கூடாதா?" ரவியின் வார்த்தைகளில் காதலின் தீவிரம் தெரிந்தது.

"ஒண்ணும் வேண்டாம்!" பத்மா முகத்தைத் திருப்பினாள்.

"ஏய்... உனக்கென்ன ஆச்சு?" ரவி அவசரப்பட்டான்.

"பின்னே என்னங்க... கண்ட கண்ட காவாலிகளெல்லாம் என்னைப் பார்த்துப் பல்லைக் காட்டுதுகள்" என்று சொன்ன பத்மா எதிர் வாகனத்திலிருந்த விஜயை அடையாளங் காட்டினாள்.

வந்ததே கோபம் ரவிக்கு. ஐஸ்கிறீம் வீசப்பட்டு நிலத்தில் அனாதையாக அழுது வடிந்தது. பாய்ந்து சென்ற ரவி காருக்குள்ளிருந்த விஜயின் சேட்டைப் பற்றி இழுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன, ஏது என்று அறியாத விஜய் கார்க் கதவைத் திறந்து கலவரத்துடன் வெளியே வந்தான்.

"ஏண்டா றாஸ்கல்! பொண்ணுகளைப் பார்த்து பல்லிளிக்கிறதுதான் உங்கட தொழிலோ?" ரவி கூச்சலிட்டான். விஜய்யின் கன்னத்திலறையக் கை ஓங்கினான்.

விஜயின் முகம் சிவந்து இறுகியது. ஓங்கிய கையை இரும்புப் பிடியாகப் பிடித்தான்.

வீதிவழியே சென்ற சிலர் வேடிக்கை பார்க்கக் கூடினர்.

"மிஸ்டர்! யாரைப் பார்த்து யார் பல்லிளித்தது? என்ன கதையளக்கிறீர்?" விஜய் ரவியின் கழுத்துப் பட்டியை இழுத்துக் கேட்டான்.

"யாரைப் பார்த்தா? என்ர மனைவியைப் பார்த்துத்தான்!" காருக்குள் பயந்தபடி இருந்த பத்மாவைக் காட்டினான் ரவி. விஷயம் சட்டென்று புரிந்தது விஜய்க்கு.

"ஏய் முதல்ல என்னைப் பார்த்தது, சிரித்தது உன்னோட வைப் தான். அங்கே போய்க் கேள்?" படபடத்தான் விஜய்.

"நோ... நீயேதான்!" ரவி கர்ச்சித்தான். இருவருக்குமிடையே நடந்த காரசாரமான வாக்குவாதத்தைக் கவனித்து ஒரு சாறன் ஆசாமி கூட்டத்திலிருந்து வெளியே வந்து ரவியிடம் சொன்னான்:

"யோவ் உன்னைத்தான்யா! பாத்தாப் படிச்சவனாத் தெரியிற? கால்சட்ட சேட்டு வேற! ஒனக்கு அறிவிருக்கா? இந்த ஆளு மொதல்ல உன்னட சம்சாரத்தைப் பார்த்தார், சிரிச்சார் என்றியே! அதெப்படி ஒன் சம்சாரத்துக்குத் தெரிஞ்சது? அவ பார்த்தபடியாத்தானே? பார்க்காம இருந்திருந்தா இந்தச் சண்டையும் வந்திருக்காது. ஒண்ணு செய்! நீ போய் உன்ர சம்சாரத்துக்குக் கன்னத்தில குடு!" வேடிக்கை பார்த்த கும்பல் 'கொல்' என்று சிரித்தது.

ரவி பத்மாவை நோக்கி நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி

பஸ்சை விட்டு இறங்கி அந்தச் சிறு கிராமத்தை நோட்டமிட்டவாறு நடந்தான் வினோதன். அவன் எதிர்பார்த்த அழகு இல்லாவிட்டாலும் ஆங்காங்கே பெரிய நாவல் மரங்கள், கருவிழிகள் போன்ற பழங்கள் அதில் சிலிர்த்துத் தொங்குவது அவனுக்குப் பிடித்தமான காட்சியாக இருந்தது. கிண்ணை மரங்களில் மூடியும் சாடியும் போல் அசைந்தாடும் பழங்களில் அணில் இச் இச் என்று சத்தம் போட்டு முத்தமிடுவதைக் கண்டு மகிழ்ந்தான் வினோதன்.

"தாத்தா! இங்கே பள்ளிக்கூடம் எங்கே இருக்கு?" எதிரில் வந்த ஒரு பெரியவரிடம் கேட்டான் அவன். வாயில் குதப்பியிருந்த வெற்றிலைச் சக்கையை ஒரு ஓரமாகச் சென்று துப்பிவிட்டு "தம்பி யாருங்க வேலையா வந்தீங்களா? ஊருக்குப் புதிசா?" என்றார். "ஆமாங்க" என்றான் வினோதன்.

"அந்தா ஒரு பெரிய மாமரம் தெரியுது பாருங்க. அங்க போயி கெழக்கால திரும்பினா, சோத்துக்கை பக்கமா ஒரு மஞ்சல் கட்டிடம் இருக்கும். முன்னால ஆத்து மணல் போட்டுப் பரவியிருக்கு அதுதான் பள்ளி" பெரியவருக்கு நன்றி சொல்லிவிட்டு நடையின் வேகத்தை அதிகப்படுத்திப் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தான் வினோதன்.

அன்று போயா தினமாதலால் பள்ளிக்கூடம் வெறிச்சோடிக் கிடந்தது. அதன் பின்புறத்தில் அவன் தங்குவதற்கான சிறு அறை இருந்தது. கடைகள் அக்கிராமத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. நல்லவேளை அங்கிருந்த சாப்பாட்டுக் கடையில் பசியைத் தீர்த்தான்.

வினோதனுக்குப் பொழுது போவது கஷ்டமாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நடந்தான். ஆற்றுப் பக்கமாக உள்ள ஆலமரநிழலில் ஜோடிகள் இருந்து சல்லாபிப்பதைக் கண்ட வினோதன் மனதில் மெல்லிய சோகம் பரவியது.

ஆற்றங்கரை மணலில் அமர்ந்து தன் கையில் வைத்திருந்த டயரியின் பக்கங்களைப் புரட்டினான். 'என் இனியவளே: மதுரா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இல்லாமல் நான் எப்படி வாழ்வேன்? ஒரு நிமிஷம் கூட உன்னைப் பிரிந்து வாழ மாட்டேன்'

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அவன் எழுதியது அப்படியே இருந்தது. டயரியை மூடினாலும் மதுரா அவன் நினைவில் வந்து நின்றாள்.

மதுரா அவன் மனைவி. அதுவும் ஆசையாகக் கைப்பிடித்த இளம் மனைவி. மூன்று ஆண்டுகள் அவள் என்னை நேசித்தாள். வகை வகையாய்ச் சமைத்துப் போட்டாள். அழுக்குத் துணிகளைத் துவைத்து ஸ்திரி போட்டு அழகாக மடித்து வைத்திருப்பாள்.

அவன் இனிய நினைவுகளை அசைபோடும் போது, 'சீச்சி என்ன வாயாடி அவள். நான் ஒன்று சொன்னால் அவள் இரண்டு சொல்வாள். நகரத்தில் பத்து விசேஷம் நடந்தாலும் அத்தனைக்கும் அவளைக் கூட்டிப் போகணும். இல்லாட்டா முகத்தை உம் என்று வைப்பாள்: அல்லது தொண தொணப்பாள். வரவுக்கு மிஞ்சிய செலவு வேறு. பிறந்த வீட்டுப் பெருமைகளைக் கதை கதையாய் அளப்பாள். சொல்வதெல்லாம் சொல்லிவிட்டு கடைசியில் சமாளிப்பாள்' இந்த எண்ணங்கள் எழுந்து அவன் மனசில் பெரும் போராட்டமாக மாறியது.

கரும்பாக இனித்த வாழ்க்கை வேம்பாகக் கசந்தது. மனைவியுடன் சண்டை போட்டு அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டு அவளுக்குத் தெரியாமல் இந்தக் கிராமத்துக்கு மாற்றலாகி வந்தவன்தான் வினோதன்.

அவன் சிந்தனையில் ஆழ்ந்து மணலில் எதையோ எழுதி எழுதி அழித்துக் கொண்டிருந்தான்.

"என்ன வாத்தியார் தம்பி...! யோசனை பலமாயிருக்கு?" வினோதனின் முதுகைத் தொட்டவர் தாத்தா. "ஆ... தாத்தாவா!" வினோதன் ஆச்சரியப் பட்டுத் திரும்பினான். அவர் கையில் பாம்பு போலப் புடலங்காய் தொங்கியது. மறுகையில் இருந்த பிளாஸ்டிக் பையில் கத்திரியும் பூசணியும் எட்டிப் பார்த்தன. பெரியவர் - அவர்தான் தாத்தா, மணலில் துண்டை விரித்து வசதியாக உட்கார்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி உங்களுக்குக் கிராமம் புடிச்சிருக்கா? நேரம் கெடச்சா என் வீட்டுப் பக்கமா வந்து ஒரு வாட்டி சாப்பிட்டுப் போங்களன்" என்றார். வினோதன் அவரை ஏற இறங்கப் பார்த்து "ஐயோ தாத்தா இந்த வயசில சமையல் அது இது என்று ஏன் கஷ்டப்படுறீங்க? யாரையாவது வேலைக்கு வச்சுக்கப்படாதா?" என்றான் ஆதரவாக.

தாத்தா வினோதனை அதிசயமாகப் பார்த்து வாய் திறந்து சிரித்தார். "வாத்யார் தம்பி! எனக்கு சம்சாரம் இருக்கு. அவ என் கடைசிப் பொண்ணோட பிரசவம் பார்க்கசம்பந்தி வீட்ட போயிருக்கிறா. சீக்கிரம் வருவனெண்டு கடுதாசி போட்டிருக்கா" என்று பூரிப்புடன் சொன்ன தாத்தாவைப் பார்த்தபடி அமைதியானான் வினோதன்.

"வாத்தியார்த் தம்பி எனக்கு வயசென்ன இருக்கும்?" தாத்தா அவன் அமைதியைக் கலைத்தார். அவரே தொடர்ந்தார், "எனக்கு வயசு இந்த ஆவணியோட எழுபத்தஞ்சு. பேச்சுக் கலியாணந்தான்: பேரு கற்பகம். என் மனைவியோட விசேஷம் என்னண்டா, மனசுக்க வச்சி எதையும் புழுங்கமாட்டா.பட்பட்னு பொரிஞ்சு தள்ளிடுவா".

"அப்ப உங்களுக்குக் கோபம் வராதா?" என்று அவசரப்பட்டான் வினோதன்.

"தம்பி மனைவி எண்டாலும் அவளுக்கெண்டு ஒரு மனசும் இருக்குந்தானே? புருஷன் சொல்றதுக்கெல்லாம் தலையாட்டாம அவளுக்குப் புடிச்சதையும் புடிக்காததையும் சொல்றது நியாயம் இல்லியோ? குறகுத்தம் பார்த்தா குடும்பம் இல்ல வாத்தியார்த் தம்பி. நீங்க என்ன நினைச்சாலும் சரி, சண்டை புடிச்சாலும் நாங்க ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சி வாழ மாட்டம். அவ இல்லாட்டித்தான் அருமை தெரியும். எல்லா வேலையையும் காலயிலிருந்து படுக்கிறவரைக்கும் செய்து, நம்மையும் கவனிச்சுக்கிற அன்புக்கு வில இல்லத் தம்பி, பேப்பர் படிக்கிறதும் றேடியோக் கேக்கிறதும் தான் என்ரவேல. அவளோட கஷ்டம் தனியா இருக்கறப்ப தெரியுது. முப்பத்தஞ்சி வருசம் வாழ்ந்திட்டம். அவளுக்கு நான், எனக்கு அவள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனுக்கு மனைவி ஒரு நிழல். தாத்தாவின் கண்களில் ஈரம் கசிவதைக் கண்டு வினோதன் ஆச்சரியப்பட்டான்.

தாத்தா சொன்னதெல்லாம் தனக்குத்தான் சொன்னது போல உணர்ந்தான் வினோதன். அவர் அவனிடம் விடை பெற்றுப் போகும் போது, "வாத்தியார்த் தம்பிக்கு இன்னும் கலியாணம் ஆகலியோ?" என்று கேட்டுவிட்டுச் சென்றார்.

வினோதனின் நெஞ்சு குறுகுறுத்தது. டயரியைத் திறந்தான். 'என் கண்மணி மதுரா, உன்னை அழைத்துவர நாளை வருவேன்' என்று எழுதினான். உடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டு உற்சாகத்தோடு நடந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலி

அன்று ஞாயிற்றுக்கிழமை.

இன்னும் ஒருமணி நேரத்தில் நடக்கப்போகும் நாடகத்துக்காகத் தன்னை ஒப்பனை செய்து கொண்டிருந்தாள் சத்யா.

அவளைப் பெண்பார்க்கும் படலம். இத்தோடு ஆறாவது முறை - அவள் அலுத்துப் போனாள். இந்தக் காட்சியின் கடைசி முடிவு சோகம் என்பது அவளுக்கு மட்டுமல்ல, அவள் குடும்பத்துக்கே தெரிந்த விஷயம்.

சத்யா ஒரு ஆசிரியை. அவள் வருமானத்தில்தான் குடும்பவண்டி ஓடுகிறது. வயதான அப்பா: வாய்பேச முடியாத ஊமைத் தங்கை: வீட்டுக் கொல்லையில் இருந்து வள் வள் என்று அடிக்கடி குரல் கொடுக்கும் நாய்: இதைத்தவிர வேறு ஜீவன்கள் இல்லை. சத்யாவைக் கலியாணம் பண்ணி வைத்துவிட்டால் குடும்பநிலை ஆட்டங்காணும் என்று இராமநாதனுக்குத் தெரிந்தாலும் மகளைக் கலியாணம் செய்து வைக்காமல் இருக்க முடியுமா என்ன?

பிரபு அவளைப் பெண்பார்க்க தன் நண்பனோடு வந்தான். அவனுடைய உடை நடை பாவனை, வந்திறங்கிய வாகனம் அவனது அந்தஸ்துக்குக் கட்டியங் கூறின. இராமநாதன் பூரித்துப் போனார். சத்யா நிலம் பார்த்துத் தேவதையாய் நடந்துவந்து நமஸ்கரித்துச் சென்றாள். பிரபு என்ன சொல்லப் போகிறானோ என்று இதயம் படபடக்க இருந்த இராமநாதனுக்குப் பிரபுவின் பதில் வயிற்றில் பாலை வார்த்தது.

"எனக்கு இந்தக் கலியாணத்தில் பூரண சம்மதம்: சீர் வரிசை என்று நான் கேட்கப் போவதில்லை. சொந்த பந்தங்கள் என்று சொல்லக் கூடியதாக எனக்கு இங்கு யாருமில்லை. அமைதியான சடங்குகள் போதும்".

ஐயர் வேதம் ஓத, கெட்டி மேளம் ஒலிக்க அக்கினி சாட்சியாக அம்பாள் கோவிலில் சத்யாவின் கழுத்தில் தாலி கட்டித் தன் மனைவியாக்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விட்டு வந்த சத்யா சிறிது நேரம் தோட்டப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள்.

பருத்திக் காய்கள் வெடித்துக் காற்றில் பஞ்சாகப் பறப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அவள் தங்கை.

வேப்பமரத்தின் ஒரு தாழ்ந்த கிளையில் கட்டியிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடவேண்டும் போல் இருந்தது சத்யாவுக்கு.

கிர்...கிர்...

ஊஞ்சல் ஆடியது.

சத்யாவின் சிந்தனை தன் முதலிரவை அசைபோடுவதில் தீவிரமடைந்தது.

ஒரு வித்தியாசமான முதலிரவைச் சந்தித்த அனுபவம் அவளுக்கு. அந்த இரவுக்கு நாணிக் கோணி நின்றவள் அந்தப் பள்ளி அறையிலும் பாடசாலை மாணவனைப் போல் தலைகுனிந்திருந்த பிரபுவைக் கண்டு வியப்படைந்தாள். நீண்ட நேர மௌனத்தை அவனே கலைத்தான்.

"உன் அப்பாவுக்குச் சொன்னது போல் நான் ஒரு கடைக்குச் சொந்தக்காரனில்லை. சிறு வயதிலிருந்தே சூதாட்டத்துக்கு அடிமையாகிப் போனேன். இந்த உடை நடை எல்லாம் ஊரை ஏமாற்றிப் பிழைக்க நான் போட்ட வேஷங்கள். இதற்குத் துணையாக இருந்தவன் என் நண்பன்".

சத்யா அசையவில்லை. அவன் தொடர்ந்தான்.

"பத்திரிகையில் உன் அப்பா போட்ட விளம்பரத்துக்கு என்னைப் பற்றி நானே உசத்தியாக எழுதினேன். அவரும் நம்பிவிட்டார். என்னைப் பற்றி அறிந்து கொள்வது கடினம். இடத்துக்கும் ஆட்களுக்கும் அமைய என் பெயரும் வேறுபடும்".

பிரபு நிமிர்ந்தபோது சத்யாவின் கண்கள் தன்னை ஊடுருவுவது பொல் உணர்ந்தான். தன் அந்தரங்கத்தை மூடி மறைக்க அவன் விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் சொல்லப் போனால் கிழிந்த பாய்களிலும் பட்டு மெத்தைகளிலும் நான் செய்த பாவங்கள் கணக்கிலடங்கா. நேற்றுவரை நான் இப்படித்தான். நாளை என்னாகும் என்று சொல்ல முடியாது. ஏன் என்றால் நான் ஆம்பிளை. என்னை அனுசரித்துப் போகவேண்டியது நீதான்!" பிரபு சொல்லி முடித்துக் கொண்டு அவளைப் பார்த்தான். அவள் கழுத்து சுருக்கில் மாட்டிவிட்டது போல் இருந்தது சத்யாவுக்கு.

சத்யா அழவில்லை. ஆழமாகச் சிந்தித்தாள். 'எந்தக் கணவனும் தாலி ஒன்றைக் கட்டுவதால் கணவன் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிடுகிறான். எந்த நிலையிலும் கணவன் என்று வந்தவனை ஏற்றுத் தன் வாழ்வை நசுக்கிக் கொள்ளப் பிறந்தவள்தான் மனைவியா? இதற்கு ஐயர், வேதம், அம்மி, கெட்டிமேளம் தேவைதானா...? சத்யாவின் சிந்தனை இப்படித்தான் ஓடியது... ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் ஒழியப் போவதில்லை'. கல்லையும் புல்லையும் புருஷனாக ஏற்க அவள் விரும்பவில்லை. இந்தச் சமூகம் சொல்லப்போகும் கிசுகிசுக்களை எதிர்கொள்ள அவள் தயாராகிவிட்டாள்.

"தாலி வெறுமனே ஒரு அடையாளந்தான். அதனை அணிபவளையும் அணிவிப்பவனையும் பொறுத்தே அது புனிதமடைகிறது".

பிரபு கட்டிய தாலி பாம்பாக அவள் கழுத்தில் ஊர்ந்தது. எதுவித பதட்டமுமின்றி அதைக் கழற்றி அவனிடமே கொடுத்தாள். அவளுடைய பார்வை அவனை விரட்டியது.

ஊஞ்சலின் ஆட்டம் நின்றுவிட்டது. நினைவுகளை அறுத்துக் கொண்டவள் நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறியது நெஞ்சம்

"**எ**ன்னங்க...! நான் எத்தன முறை சொன்னாலும் அது உங்க காதுக்குக் கேட்கமாட்டேங்குதே?" தேவிகாவின் முகத்தில் கடுகு வெடித்தது. அவள் அப்போதுதான் நீராடிவிட்டுத் தன் நீளமான கூந்தலைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

செந்தூரன் காதில் எதுவும் விழுந்ததாகத் தெரியவில்லை. அவன் அவசர அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தான்.

"தூங்குறவங்களை எழுப்பலாம். தூங்குறமாதிரி நடிப்பவங்களை எழுப்புறது கஷ்டந்தான்" சொல்லிக் கொண்டே தேவிகா அவள் கணவன் செந்தூரன் அருகே வந்து உட்கார்ந்தாள்.

அவள் ஜடையில் இருந்த மல்லிகைப்பூ வாசம் அவன் முகத்தில் மோதியிருக்க வேண்டும். பேனாவை மெதுவாக வைத்துவிட்டுத் தேவிகாவின் முகத்தை ஆராய்ந்தான். அப்பழுக்கற்ற அந்த முகத்தின் உதட்டுக்கு மேல் ஒரு கறுப்பு மச்சம்.

"என்னங்க! எந்த உலகத்தில் இருக்கிறீங்க?" தேவிகா செந்தூரனின் பார்வையைத் திசை திருப்பினாள்.

"உங்களுக்கு என்மீது நேசமா?" தேவிகா கேட்ட கேள்வியின் குழந்தைத் தனத்தைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான் செந்தூரன்.

"நான் சீரியசாக் கேட்டா நீங்க சிரிக்கிறீங்களே?" தேவிகாவின் குரலில் சுரத்தில்லை.

"உங்கள் அப்பாவை என்ன செய்வதாய் உத்தேசம்?"

செந்தூரனுக்கு நெற்றிப் பொட்டிலடித்தது. "உன்னை நேசிப்பதுக்கும், அப்பாவுக்கும் என்ன சம்பந்தம்?" எதிர்க் கேள்வி கேட்டான் செந்தூரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சம்பந்தம் இருக்கு. என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தா நான் சொல்வதைக் கேக்கமாட்டீங்களா?"

"இதோ பார் தேவிகா பெற்ற தகப்பனை என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய்?" செந்தூரனின் கேள்வியில் கவலை ஊசலாடியது.

"ஏன் நீங்க மட்டுந்தான் மகனா? இரண்டு மகன்மாரும் இரண்டு மருமகள்களும் இன்னும் உயிரோடு இருக்கிறாங்களே, அவங்களுக்குக் கடமையில்லையா? பாசமில்லையா? உங்களுக்கு மட்டும் என்ன தலைவிதி? தேவிகா படபடத்தாள்.

"நல்லாய் யோசித்துப் பார். சுரேசும் சுந்தரும் அப்பாவுக்குப் பிள்ளைகள் தான். அவங்க ரெண்டு பேருமே அப்பாவைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டார்கள். அதுக்காக நானும் அப்பிடி நடக்கவேணுமெண்டு நீ எதிர்பார்க்கிறாயா? செந்தூரன் அமைதியாகக் கூறிவிட்டு தேவிகாவின் முகத்தை நோட்டம் விட்டான்.

"நான் ஒரு வழி சொல்லட்டுமா?" தேவிகா பரபரத்தாள்.

"சொல்லேன்..."

"அப்பாவ வயோதிபர் மடத்தில் சேர்த்திட்டா என்ன? செந்தூரன் அதிர்ந்து போனான்.

"ஆமா தேவிகா இன்று பலபேருக்குத் தெரிந்த சுலபமான வழி இதுதான். பெத்தவங்களிட்ட எல்லாம் அனுபவிச்ச பிறகு அவங்களிடமிருந்து எதுவும் பெறமுடியாதென்ற நிலைவரப்போ வயோதிபர் மடம் - அனாதை மடம் என்று தள்ளிவிட வேண்டியதுதானே?" சொல்லிவிட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டான் செந்தூரன்.

"நீங்களும் உங்கப்பாவும் பட்டதுபாடு: எனக்கென்ன?" கோபத்தைக் கொப்பளித்துவிட்டுச் சமையலறையை நோக்கி விரைந்தவளைப் பேச்சுக் குரல் தடுத்து நிறுத்தியது.

❄ ❄ ❄



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராமநாதா... என் மருமக ஆயிரத்தில் ஒருத்தி: எனக்கு வேண்டியதெல்லாம் மனங்கோணாமச் செய்யிறவ. அவ எனக்கு மருமகளில்ல - மகளப்பா".

"அது சரி... நீ வேல செய்த கடையில விலகிறப்போ ஏதாச்சும் ஊதவி பண்ணினாங்களா?"

"பண்ணினாங்க! கிடைச்ச பணத்தை வாற வழியில வங்கியில என் மருமக தேவிகா பேரில டிப்போசிட் பண்ணிற்றன். பாவம் - பின்னுக்கு அவ கஷ்டப்படக்கூடாது பார்!"

கூடத்திலிருந்து உரையாடியவர்கள் செந்தூரனின் அப்பாவும் அவர் நண்பர் ராமநாதனும்.

தேவிகாவின் இதயத்தில் ஈரம் கசிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு

எவ்வளவுதான் முயற்சித்தாலும் அரவிந்தின் மனத்திலிருந்து அனுவை அகற்ற முடியவில்லை. அவள் அடித்த சிலையாக அவன் மனதில் உட்கார்ந்திருப்பது சுகமா - சுமையா என்றுகூடத் தெரியாமல் திண்டாடினான் அரவிந்த். மூன்று முடிச்சுப் போட்டு மூன்று மாதமாவதற்குள் அனுவின் விருப்பு வெறுப்புகள் அவனுள் ஆலவிருட்சமாய்க் கிளை பரப்பி இருந்தது.

கொண்டாட்டங்கள், பார்ட்டிகள் மனதை மகிழ்விக்க , இறுக்கங்களிலிருந்து நெகிழ எவ்வளவு அவசியம் என்று அவன் எண்ணினான். அரவிந்த் அவனுடைய கம்பனி நடத்திய அனுவல் பாட்டி ஒன்றில் கலந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான். தன்னுடன் பார்ட்டிக்கு வர மறுத்த அனுவை எண்ணியதும் ஊசிமுனையாய் உடலெங்கும் குத்தல்கள்.

விரைந்து வந்த காரை அரவிந்த் அவன் வீட்டுப் போர்ட்டிக்கோவில் நிறுத்திவிட்டு மாடிப்படிகளில் மளமளவென்று ஏறி மாளிகைபோல் இருந்த அந்த வீட்டுக்குள் நுழைந்தான். அது அவனுக்குச் சூனியமாகப் பட்டது. பார்வையால் அனுவை எங்கும் தேடினான்.

"ஓ அவள்தான் .'.போன் செய்துவிட்டு அவள் டடி வீட்டுக்குப் போய்விட்டாளே!" அரவிந்த் நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். அவனுக்குத் தனிமை, அமைதி எதுவுமே பிடிக்காது. அவனொரு சங்கீதப்பிரியன். வாத்தியங்கள் வாசிப்பது அவனுக்குக் கைவந்த கலை.

உடை மாற்றிக் கொண்ட அரவிந்த் சிட்டிபாபுவின் வீணை இசையை வீடு முழுவதும் பரவ விட்டான். படுக்கை அறையில் இரவோடு போராடிய அரவிந்த்தால் தூங்கமுடியவில்லை. அனு அவனுக்குள் வாதாடினாள்.

"அனு என்னோட பார்ட்டிக்கு வர்ரியா?"

"மாட்டேன் மாட்டேன்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ மிஸிஸ் அரவிந்த்! மறந்திட்டியா?"

"நீங்க சொல்லித்தான் அது எனக்குத் தெரிகிறது".

வீணை இசை பட்டென்று நின்று போகிறது.

அனுவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"உங்களோடு சேர்ந்து போய் என் புருஷன் என்று சொல்லி நான் அவமானப்படணுமா?"

"நீ என்ன சொல்கிறாய்?"

அவள் அவசரப்பட்டாள். "உங்கட வேட்டி உடை சகிக்கல, எங்க குடும்பத்தின் மானம் மரியாதை எல்லாமே போகுது!"

"அப்போ வேட்டி உனக்கு இழப்பமாய்ப் போச்சு இல்ல? உன்னோட கௌரவம் மதிப்பு எல்லாமே கால்சட்டைக்கு மட்டுந்தானா? ஒருவனின் படிப்பு, திறன், குணம் இவற்றுக்கெல்லாம் மதிப்பே இல்லை என்கிறாயா?"

"ஒரு ஆளைப் பார்த்தவுடன் தெரிவது அவனுடைய தோற்றந்தான். அதுதான் உடை. மற்றதெல்லாம் கண்ணுக்குத் தெரியாத சங்கதிகள். உங்க உடையில் மாறுதல் வரும்வரை நான் உங்களுடன் எங்கும் வரமாட்டேன்! கால்சட்டை, மேல்சட்டை, சப்பாத்து, ரை - ஐ மீன் நீங்கள் ஒரு ஜென்டில்மேனாக.." முதல்நாள் நினைவுகள் வெறுப்பை உமிழ்ந்த வேகத்தில் அரவிந்த் தூங்கிப் போனான்.

அரவிந்த் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு பட்டதாரி. உழைப்பால் உயர்ந்து பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தில் வேலை தேடிக் கொண்டவன். அழகும் குணமும் அவன் உடைமைகள். ஆனால் சற்று வித்தியாசமானவன்.

அன்றும் இன்றும் அவனுடையில் (வேட்டி) எதுவித மாற்றமும் இல்லை. அந்த நிறுவனத்தில அரவிந்த் மீது எல்லோருக்கும் ஒரு அலாதிப்பிரியம். அவன் ஒரு பாடகனுங்கூட. அவன் குரலில் தென்றலின் சுகமும் தேனின் இனிமையும் கலந்திருக்கும். அதில் தன்னை இழந்தவள்தான் அங்கு வேலை பார்க்கும் அனுஷா. அவள்தான் அனு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவிந்த் இல்லாமல் தன்னால் வாழமுடியாது என்ற முடிவுக்கு வந்தாள் அனு. பிரபல வழக்கறிஞர் கௌரிசங்கரின் ஏக புத்திரி அவள். அரவிந்த்திடம் தனக்குள்ள ஈடுபாட்டை அவரிடம் வெளிப்படுத்தினாள். தாயில்லாப் பெண் - அவளுடைய விருப்பத்துக்குச் சுவர் எழுப்ப அவர் விரும்பவில்லை.

கலியாணம் முடித்து மூன்று மாதங்களாகிவிட்டன. கௌரிசங்கரின் எண்ணப்படியோ அனுவின் வெறித்தனமான விருப்பப்படியோ அரவிந்த்தின் உடை மாறவில்லை. மனமும் மாறவில்லை.

ஜில் என்ற குளிர் காற்று செல்லமாக அரவிந்த்தின் உடலைத் தழுவியது. பக்கத்துவீட்டு சங்கரசர்மா வீட்டின் சுப்பிரபாத இசை துல்லியமாகக் கேட்டது.

அனுவின் ஞாபகம் அரவிந்த்தை மாம்பழத்து வண்டாகக் குடைந்தது. கண்விழித்துச் சோம்பலை முறித்தவன்,

சே, என்ன உலகம்?

உள்ளமா உடையா முக்கியம்?

உடைக்காக என்னை மதிக்கும் ஒரு பெண் என் மனைவியா? அலுத்துக் கொண்டான். அரவிந்த் என்ன நினைத்தானோ தொலைபேசி எண்களைச் சுழற்றினான்.

"ஹாய் அனு...!"

மறுமுனையில் உம் கொட்டியவள் அனு.

"நீ இல்லாம ... ரொம்ப டல்லாருக்கு நீ எப்ப வர்ரே?"

"தெரியாது"

"என்னை எனக்காக மதித்து எப்போ வர்ரியோ அப்போதான்... நீ என் மனைவி"

தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

வாழ்க்கை துண்டாடப்படுவதற்கு அரவிந்த்துக்கு அற்பமாகப் பட்ட காரணம் அனுவுக்குப் பூதாகரமாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன்

தெரு ஓரமாக இருந்த அந்தச் சிறிய அறையில் வாகீசன் சக்கர நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார். அங்கு நிலவிய நிசப்தத்தைத் தெருவில் போன வாகனங்கள் கலைத்துக் கொண்டிருந்தன.

வாகீசனுக்கு ஒரு கையும் காலும் வழங்காது. அவருடைய இடுங்கிய கண்கள் யன்னலூடாகத் தெருவில் வருவோர் போவோரை நோட்டமிட்டவாறு இருந்தன. தெரிந்தவர்கள் தன்னை அடையாளங் கண்டு பேசமாட்டார்களா என்ற ஆவல் வாகீசனுக்குத் தினசரி வருவது தவிர்க்கமுடியாதது. அவர் அருகே இருந்த ரீப்போவில் வெளிநாட்டிலிருந்து வந்த வாழ்த்தட்டைகள் சில வரிசையாக உட்கார்ந்திருந்தன.

சற்றுமே எதிர்பாராத வேளை வைரமுத்து பிரசாதத் தட்டுடன் உள்ளே வந்தான். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி மல்லிகைப்பூவாய்ப் பரவிக் கிடந்தது. "ஹப்பி பேத்டே ஐயா" என்றவன் வாகீசனை அணைத்து முத்தமிட்டான். அவருக்கு எண்பது வயது பூர்த்தியாகிவிட்டது. வைரமுத்து கொண்டுவந்த பிரசாதத் தட்டிலிருந்த விபூதியை வாகீசனின் நெற்றியில் இட்டான். பொங்கலையும் கொஞ்சம் கொஞ்சமாக அவர் வாயில் ஊட்டினான். "ஐயா, உங்களுக்காகக் காலையில் கதிரேசன் கோயில்ல அர்ச்சன பண்ணினன். நீங்க நல்லாருப்பீங்க!" வைரமுத்துவின் நாக்குத் தழதழத்தது.

வாகீசன் தன் ஒரு கையால் குழந்தையைப்போல் வைரமுத்துவைத் தன் மடியில் சாய்த்தார். அவன் முகத்திலும் கன்னத்திலும் நெற்றியிலும் மாறி மாறி முத்தமிட்டார். அவருடைய கண்ணீர் வைரமுத்துவின் கன்னத்தை நனைத்தது. அவன் அருகில் இருந்த கைக்குட்டையால் வாகீசனின் முகத்தை அழுந்தத் துடைத்தான்.

"கொஞ்சம் பொறுங்கோ ஐயா: உங்களுக்குப் புடிச்ச சமையலை நொடியில செய்திட்டு ஓடிவாறன்" என்றவன் வாகீசனைச் சக்கர நாற்காலியில் இருந்து அலாக்காகத் தூக்கிக் கட்டிலில் கிடத்தினான். அவருக்கு வசதியாக இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையணைகளை தலைக்கடியில் வைத்துவிட்டுச் சென்றான். வாகீசன் வைரமுத்து சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்த நாள் ஞாபகம் அவர் நெஞ்சைத் தொட்டது.

* * *

வாகீசன் ஒரு ஓய்வு பெற்ற அதிபர். பிரபல்யம் வாய்ந்த கல்லூரி ஒன்றுக்கு அதிபராகவிருந்தவர். வாகீசன் பிறின்சிப்பல் என்றால் கடுமையும் கருணையும் கடமையும் தான் நினைவுக்கு வரும். அவர் செய்வதைத்தான் சொல்வார். அவருடைய பார்வை மாணவரை அப்படியே கட்டிப்போடும் சக்தி வாய்ந்தது.

அவருடைய மனைவி திலகவதி. ஐந்து வயது மகனையும் வாகீசனையும் தவிக்கவிட்டுத் தெருவிபத்தொன்றில் இறந்து போனாள்.

வாகீசன் பள்ளியா வீடா என்று போராடியபோது, ஆஜானுபாகுவான தோற்றமுடைய அவரை மறுமணம் செய்யும்படி ஆலோசனை சொன்னார்கள் பலர். வற்புறுத்தினார்கள் சிலர். தான் கடைசிவரை ஏகபத்தினி விரதனாக இருக்கப்போவதாக அடித்துக் கூறினார் வாகீசன். அதன் பிறகு எல்லோரும் அவர் பாடென்று விலகிப் போயினர்.

இந்தச் சமயத்தில் அவரிடம் வேலை கேட்டு வந்தவன்தான் வைரமுத்து. வாகீசன் முன்பின் யோசியாதவராய் வீட்டுப் பொறுப்புக்களையும் தன் மகன் அரவிந்தனையும் அவனிடம் ஒப்படைத்தார். வைரமுத்துவுக்கு வயசு இருபத்தைந்துக்கு மேற்படாது. கறுத்த உடம்பு. வாட்டசாட்டமாயிருந்தான். வாகீசன் தனக்கு வசதியாய் அவன் பெயரை 'முத்து' என்று சுருக்கிக் கொண்டார்.

"முத்து! என் தொழில் எப்படிப்பட்டது என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம். என் கடமை பள்ளிக்கூடத்தோடு மட்டுமல்ல: ஒரு சமூகத்தோடும் சம்பந்தப்பட்டது. நான் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ள எனக்கு நீ மகனாய் இருந்தால் போதும். இந்த ஐந்து வயதுச் சிறுவனுக்கும் நீ அண்ணனாயிருந்து உதவ வேண்டும். செய்வாயா?" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பதிகம் இல்லாத முத்துவுக்கு வாகீசனின் வார்த்தைகள் புரிந்தும் புரியாமலும் இருந்தன. ஆனாலும் "சரி ஐயா" என்று தலையசைத்தான் பவ்யமாக.

காலப்போக்கில் முத்து வாகீசனின் மகனாகவே மாறிப்போனான். அவன் பள்ளியில் படிக்காத பாடங்களை வாகீசனிடமிருந்து கற்றுக்கொண்டான். தனக்குத் திருமணம் வேண்டாமென்று பிடிவாதமாயிருந்தான். அடுப்பங்கரையிலிருந்து படுக்கையறை வரை எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டான்.

அரவிந்தன் வளர்ந்து பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட சமயம் வாகீசனுக்கு ஒரு கையும் காலும் வழங்கமுடியாமல் இழுத்துக் கொண்டது. அரவிந்தன் மேற்படிப்புக்காகக் கனடா சென்றுவிட்டான். ஆரம்பத்தில் அவனிடமிருந்து கடிதங்களும் வாழ்த்துக்களும் தவறாமல் வந்தன.

வருடங்கள் பறந்தன. வாகீசனுக்கும் அவர் மகனுக்கும் எதுவித தொடர்புமில்லாமல் போய்விட்டது.

திடீரென்று ஒரு நாள் அரவிந்தனிடமிருந்து வந்த கவருக்குள்ளிருந்து ஒரு புகைப்படம் வெளியே வந்தது. மகன் ஒரு வெள்ளைக்காரியைத் திருமணம் செய்து கொண்டான் என்பதை வாகீசன் அறிந்து கொண்டார். அவரால் சிரிக்கத்தான் முடிந்தது. அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் முத்துவால் கண்டுபிடிக்க முடியவில்லை.

வாகீசன்தான் பெற்ற மகனையும் முத்துவையும் தன் மனத்தராசில் எடை போட்டுப் பார்த்தார். பெற்றால்தான் பிள்ளையா? 'எங்கிருந்தோ வந்தான்' பாடல் அவர் நினைவுக்கு வந்தது.

சொந்த பந்தமில்லாத முத்து...
படிப்பறிவில்லாத முத்து...
நாகரிகம் இல்லாத முத்து...
வாகீசன் மனதில் தெய்வமாய்த் தெரிந்தான்.
அன்பு காட்டப் படிப்புத் தேவையா?
தொண்டு செய்யப் பட்டம் வேண்டுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதனால் மட்டும் பிள்ளையாக முடியுமா?

வாகீசன் மனதில் எழுந்த வினாக்கள் ஆச்சரியமாக மாறின.

* * *

அன்று நள்ளிரவில் வாகீசனுக்குக் கடுமையான மார்புவலி கண்டது. முத்து பதறிப் போனான். அடுத்த வீட்டில் உள்ள குடும்ப நண்பர் ஒரு சட்டத்தரணி. அவரின் உதவியை நாடினான். வைத்தியர் உடனடியாக வரவழைக்கப்பட்டார். ஆனாலும் பயனளிக்கவில்லை. முத்துவின் கைகளைப் பற்றியபடியே அவர் உயிர் பிரிந்துவிட்டது. முத்துவின் கதறல் கல்நெஞ்சையும் கசிய வைத்திருக்கும். அரவிந்தனுக்குச் செய்தி பறந்தது. முத்து வாகீசனின் பென்ஷனில் சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தைச் சட்டத்தரணியிடம் கொடுத்து "ஐயாவுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யுங்க" என்றான் கண்ணீர் மல்க. அவருடைய பார்வையில் முத்து இமயமாக உயர்ந்தான். மூன்று மாதங்களுக்கு முன்னால், முத்துவுக்குத் தெரியாமல் வாகீசன் தன் வீட்டு உயிலை அவனுக்கு எழுதித் தன்னிடம் ஒப்படைத்ததை எண்ணி ஒரு கணம் மெய்சிலிர்த்துப் போனார் சட்டத்தரணி.

கனடாவில் இருந்து அரவிந்தன் வந்து சேர்ந்தான். சைவமுறைப்படி சகல கிரியைகளையும் வெகு ஆடம்பரமாகச் செய்தான். ஐயர் மந்திரம் ஓதி... "வாய்க்கரிசி போட மகன் வாங்கோ" என்றார். அரவிந்தன் கம்பீரமாக எழுந்து சென்றான்.

முத்துவின் விம்மல்ஒலி... வீட்டை நிறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வித்தியாசமான விளம்பரம்

**பா**லிப்போடியார் பத்திரிகை ஒன்றை இறுகப் பிடித்தவராய் வயல் வெளியிலிருந்து ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி வந்தார். காலில் ஒட்டியிருந்த மண்ணை வாசற்படியில் தட்டித் தேய்த்தவர் சால்வையைக் கொடியில் போட்டுவிட்டுச் சாய்மனையில் சாய்ந்தார். "கனகு கனகு, இஞ்ச கொஞ்சம் வாடிபுள்ள" என்று குசினியை நோக்கிக் குரல் கொடுத்தார் பாலிப்போடி.

"கொஞ்சம் பொறுகா. அதுக்குள்ள அவிசரமா...? ஆணம் அடுப்பில" என்று காரமாகப் பதில் சொன்னாள் கனகு. அவளுடைய வாய் விரால் மீன் ஆணத்துக்கு உப்புப் புளி பார்த்தது. "ஆணங்கெடக்குது. எறக்கி வைச்சுப்போட்ட வாவன்சத்த" போடியாரின் குரல் மீண்டும் உச்சஸ்தாயியை எட்டியது. என்னவோ ஏதோ என்று பதறிய கனகு ஆணச்சட்டியை இறக்கிப் போட்டுப் போடியாருக்கு அருகில் போய் நின்றாள்.

பாலிப்போடியின் மனதில் இருந்த சந்தோஷம் முகமெல்லாம் பரவிக்கிடந்தது. கனகு ஒன்றும் புரியாதவளாய் "குடிமுழுகிப் போற மாதிரிக் கத்தினியள், என்ன வெசயம் எண்டு சொல்லுங்களன்." என்று வெற்றிலை வட்டாவை அவர் பக்கம் நகர்த்தினாள். பாதி விரித்தபடி கிடந்த கற்பன் பாயில் கனகு வசதியாகக் காலைநீட்டி உட்கார்ந்துகொண்டாள்.

குரலைச் செருமிச் சரிப்படுத்திய போடியார் "இஞ்ச பாரண்டிபுள்ள... இண்டைய பேப்பரில ஒரு வெளம்பரங் கெடக்குது. இப்பிடி ஒரு வெளம்பரத்தை எண்ட சென்மத்துக்கும் காணல்ல." என்றார் பூரிப்போடு. "அப்ப பின்ன அதைக் கொஞ்சம் வெளப்பமாப் படியுங்களன். பாப்பம்." என்றாள் கனகு ஆவலை அடக்க முடியாமல்.

மணமகன் தேவை

உத்தியோகம் பார்க்கும் 30 வயது நிரம்பிய சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. வீடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குத் தேவையான பொருட்கள், இலட்ச ரூபாய், டொனேசன் சீதனமாக எதிர்பார்க்கப்படும். கொழும்பில் வீடிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதற் கடிதத்திலேயே முழு விபரங்களும் தரப்பட வேண்டும்.

போடியார் உஷாராக வாசித்து முடித்தார். "எண்ட கதிரவேலப்பா. இப்புடி ஒருகாலமும் நான் கேள்விப்பட்டதில்ல. காலம் கலியுகம்." கனகு வாயைப் பிளந்தாள்.

"காலம் கலியுகமில்ல. காலம் மாறுதெண்டு சொல்லு." என்றார் பாலிப்போடி.

"உங்களுக்கு விசர். அச்சுப்புழையோ, அல்லாட்டி உங்கட கண்ணாடிக் கோளாறோ, பொம்பிளையிட்டத்தான் மாப்பிள சீதனம் கேக்கிற வழக்கம். இதில பொம்பிள மாப்பிளையிட்டக் கேக்கிறதெண்டாக் கலியுகம் இல்லாம வேறென்ன?" விளம்பரத்தைச் சீரணிக்க முடியாமல் கனகு பொரிந்து தள்ளினாள்.

"பொம்பிள கேட்டா என்ன தப்பு? ஆனைக்கு ஒரு காலமெண்டா பூனைக்கும் ஒரு காலம் வராதா? நமக்குந்தான் அடுக்கடுக்காய் ஆறு பெட்டைகள். வாயக்கட்டி வகுத்தைக் கட்டிப் படிக்க வச்சம். வேலயும் பாக்குதுகள். கலியாணங்கால் எண்டு ஏதுமிருக்கா? இப்பத்தான் எனக்குத் தைரியம் வந்திருக்கு. கந்தப்போடியின்ர மகனிட்டச் சொல்லி நானும் ஒரு வெளம்பரம் போடப் போறன்." உறுதியாகச் சொல்லி முடித்தார் பாலிப்போடியார். கனகுவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகம்

கதவு தட்டும் ஓசை கேட்டுத் திடுக்கிட்ட தங்கா தன் கணவனைக் கலவரத்துடன் பார்த்தாள். அவள் கணவன் பிரபு மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தான். மணி எட்டு. "யாராயிருக்கலாம்?" அவன் நெற்றியில் கேள்வி சுருங்கியது. எழும்பியவனைத் தங்கா திகிலுடன் தடுத்தாள்.

மீண்டும் கதவு படபடத்தது. அதில் அவசரம் தெரிந்தது. பிரபு சரேலென்று எழுந்து கதவைத் திறந்தான்.

கையில் சூட்கேசுடன் நின்றவள் சூரியா.

"சூரியா நீயா...?" தங்கா அலறினாள்.

"என்னடி இரவில. இந்த நேரத்தில...?" கணப்பொழுதில் தங்காவுக்கும் பிரபுவுக்கும் விஷயம் புரிந்துவிட்டது. வழமையான பிரச்சனைதான். கணவனுடன் தகராறு பண்ணிவிட்டு வீட்டைவிட்டுக் கிளம்பி வந்துவிட்டாள் என்று இருவரும் கருதினர்.

"சூரியா உள்ளே வா." தங்கா தன் தோழியை வரவேற்றாள். தங்கா தன் கணவனின் காதில் ஏதோ கிசுகிசுத்தாள். அவன் மாடிப்படியேறிப் போய்விட்டான். "சூரியா நீ முதலில் உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட வா"

"எனக்குப் பசியில்லை. நீ சாப்பிடு" சோபாவில் உட்கார்ந்திருந்த சூரியாவை தங்கா இழுத்துக்கொண்டு உட்கார வைத்தாள். சாப்பிட்டுக்கொண்டே இருவரும் காப்பி விலையிலிருந்து காஷ்மீர்ச் சேலைவரை அலசினார்கள். முடிவில் சூரியாவைத் தங்கா திசைதிருப்பினாள். சூரியா கையை அலம்பிவிட்டு மறுபடியும் சோபாவில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தாள்.

"ஏய் உனக்கென்ன ஆச்சு. இந்த நேரத்தில சூட்கேசுடன்...?"

தங்காவைப் பாதியில் இடைமறித்தாள் சூரியா.

"நான் என்ன உன்னைப் போல சுதந்திரப் பறவையா? என் புருஷன்ர கட்டுப்பாடு சுத்தமாய் எனக்குப் பிடிக்கல. நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்து வைச்சவ. அம்மா வீட்டுக்குப் போகத்தான் முதல்ல நினைச்சன்... பிறகு உன்னைப் பார்த்திட்டு காலைல புறப்படலாமெண்டு பிளான மாத்திட்டன்." சொல்லிவிட்டு சூரியா விசும்பினாள்.

"சரி சரி நீ எதையும் மனசில் போட்டு அலட்டிக்காமத்தூங்கு. நாளைக் காலைல பாத்துக்கலாம்." குட்நைட் சொல்லிய தங்கா சூரியாவை எப்படி வழிக்குக் கொண்டுவருவது என்ற கவலையுடன் மாடிக்குப் போய்விட்டாள்.

சூரியா சோபாவில் மல்லாந்து படுத்து கண்களுடன் போராடினாள். தூக்கமவள் கண்களைத் தழுவ மறுத்துவிட்டது. நினைவுகள் அவளை வீட்டை நோக்கி ஓட்டியது. அங்கு நடந்த வாக்குவாதம் அவள் மனசில் நிழலாடியது.

"என்னங்க, ஒரு குட்நியூஸ்... ஜெனிவாவில நடக்கிற லேடீஸ் யூனியன் கான்∴பறன்சுகள்ள கலந்துக்க என்ன அனுப்பிறதா தீர்மானிச்சிருக்காங்க."

"அவங்க தீர்மானிச்சாப் போதுமா? நான் தீர்மானிக்க வேணுமே! உன் பொண்ணு தீர்மானிக்க வேணுமே."

"ஒரு மாசம் தானே. கண் மூடிமுழிக்கப் பறந்திடும். வேலைக்காரி இருக்கிறா. எல்லாம் கவனிச்சிக்குவா."

"நீ எனக்கு மனைவியா இல்லாட்டாலும் ஒரு தாயா நடந்துக்க. வயசுக்கு வந்த பொண்ண விட்டிட்டு ஜெனிவா? சறிற்றிபிகிஸ் அற்ஹோம். வீட்டுக் கடமைகள அம்போன்னு போட்டிட்டு, யூனியன் அது இதுன்னு ஊருக்கும் பேருக்கும் அலையிற பொம்பிளைகள எனக்குக் கட்டோடு பிடிக்காது. நீ போறத நான் அனுமதிக்க மாட்டன்."

"சே நீங்களும் ஒரு புருஷனா? சுத்தக் கன்றி புறூட்டாயிருக்கிறீங்களே.! ஒரு பொண்ணு மனைவி எண்டு கழுத்தை நீட்டிற்றா - அவ அடிமையா?"

"ஏய் சித்திரா! இங்க வாயேன். உன்ர அம்மா சொல்றதக் கேட்டியா? ஜெனிவா போறாளாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்களும் அம்மாவும் எதுக்குச் சண்டை போடறீங்க? அவங்க போறதால என்ன குறைஞ்சிடப் போகுது? அம்மாவுக்குத் தினம் கூட்டம், பாட்டி, விசிற் எண்டு ஏதேதோ இருக்குமே. அம்மா இருந்தாலும் ஒண்டு. இல்லாட்டியும் ஒண்டுதானப்பா."

எண்ணங்களை விவாத மேடையாக்கிக் கொண்ட சூரியாவுக்குச் சித்திராவின் வெறுப்பைத் தாங்க முடியாமல் விம்மினாள். திடீரென் மாடியில் கேட்ட கூச்சலும் அலறலும் சூரியாவின் நினைவுகளைச் சிதறடித்தன. அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. திகிலுடன் எழுந்து மாடிப்படியருகே நின்று காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

"நீ ஒரு பெண்ணா, பேயா?"

நிச்சயமாக அது பிரபுவின் கூச்சல்தான். சூரியாவின் இதயம் படபடத்தது.

"என்னைக் கேளாம எதுவுமே வாங்கப்படாது. கடைக்குப் போகக் கூடாது. என்று எத்தனை முறை சொன்னேன். உன் மர மண்டையில ஏறுதா?"

"என் இஷ்டம். நான் விரும்பியதைச் செய்வேன்."

"செய்வியா? செய்டி பாப்பம்."

'பளார்' சத்தம்.

தங்காவின் அழுகுரல்...

"ஏய்! கேட்டுக்க இதுக்குமேல அம்மா வீடு அக்கா வீடு எண்டு போனா நடக்கிறதே வேற. நீ எங்க போற வாற எண்டு சொல்ல ராமதாஸ் இருக்கிறாண்டி. என்னக் கொலைகாரனா மாத்திடாத."

பொருட்கள் 'தடால் தடால்' என்று விழுந்து புரண்டன. சூரியா அதிர்ச்சியில் ஆடிப்போனாள். மெதுவாக நடந்து வந்து உட்கார்ந்தவளின் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது. சூட்கேசைத் திறந்து டயறியில் எழுதினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தங்கா, மின்னுவதெல்லாம் பொன் என்று எண்ணியது என் தப்புடி. மாடியில் உன் புருஷன் நடத்திய தர்பாரை என் காதால் கேட்டேன். அது என் கண்களைத் திறந்திட்டுது. உன் புருஷனை விட என் அவர் ஆயிரம் மடங்கு மேல். நான் போகிறேன்.'

எழுதிய ஒற்றையைக் கிழித்து மேசைமேல் வைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தாள். மணி ஐந்து முப்பது. யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தன் வீடு நோக்கிப் பறப்பட்டு விட்டாள்.

பிரபுவும் தங்காவும் சரியாக ஆறு மணிக்கு மாடியிலிருந்து இறங்கி வந்து சூரியாவைத் தேடினார்கள். அவள் அங்கு இல்லை. மேசையிலிருந்த கடிதத்தைப் படித்துவிட்டு இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு கலகலவென்று சிரித்தார்கள். சூரியாவுக்காக அவர்கள் நடத்தியது நாடகம் என்று யாருக்குத் தெரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனை

அந்தத் தோட்டத்துப் பாடசாலை வெறிச்சோடிக் கிடந்தது. அதைச் சுற்றியுள்ள திடலில் மாடுகள் வசதியாகப் படுத்துக்கொண்டு அசைபோட்டுக் கொண்டிருந்தன. ராமசாமி செல்லமாய் வளர்த்த சிகப்பி நாய் மாடுகள் போட்ட சாணத்தில் புரண்டு விளையாடியது. சிவராசு மாஸ்டர் அந்தப் பாடசாலையின் மேல் விட்டத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். அவர் சிந்தனையில் சிக்குண்டு பெருமூச்சுக்களை வெளியே விட்டுக்கொண்டிருந்தார்

திடீரென்று என்ன நினைத்துக்கொண்டாரோ சிவராசு மாஸ்டர் மணியைப் பார்த்து நாக்கைக் கடித்துக்கொண்டார். பாவம் ஆத்தா சாப்பிடாமக் காத்திருக்குமே எண்ணிய கணத்தில் எல்லாவற்றையும் ஒழுங்கு வைத்துவிட்டுப் புறப்பட்டுப் போனார்.

பள்ளமும் திட்டியும் உள்ள பாதையின் பழக்கம் சிவராசு மாஸ்டருக்குப் பஞ்சு மெத்தையில் நடப்பது போலிருந்தது. கன்னத்தில் இருக்கப் பிடிக்காத வேர்வைத் துளிகள் அவர் கழுத்திலே உருண்டு விளையாடின.

"மாஸ்டர் உங்களைப் பாத்தா கமலஹாசனைப் போலிருக்கு யூ ஆர் ஹான்சம்" சுற்றும் முற்றும் பார்வையை மேயவிட்ட மாஸ்டருக்குச் சிரிப்புத்தான் வந்தது. அங்கு யாருமில்லை. மூன்று மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் அவர் முன்னால் வந்து நின்றது. சிவராசு மாஸ்டர் கண்டியிலுள்ள ரியூட்டரி ஒன்றிலே வாரம் இருமுறை வகுப்பு நடத்துவது வழக்கம். அங்குதான் லலிதினியின் பரிச்சயம் அவருக்கு ஏற்பட்டது. அவள் பார்வையில் குமரியாய் இருந்தாலும், பழக்கத்தில் குழந்தையாய் இருப்பது சிவராசு மாஸ்டருக்கு வேடிக்கையாக இருந்தது. வகுப்பு முடிந்தபோதெல்லாம் தனியாக வந்து மாஸ்டர் நீங்கள் கமலஹாசன் மாதிரி ஹான்சம் என்று சொல்லி சிரிப்பை சிந்திவிட்டுப் போவாள். மாஸ்டர் மனதில் குழப்பம். லலிதினியின் முகத்தில் சிரிப்பைத் தவிர வேறெதையும் அவரால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் மாஸ்டர் கிளாஸ் முடிந்து வீதிவரை வந்துவிட்டார். லலிதினி அவரைத் தொடர்ந்து வந்து "மாஸ்டர் ஐ லவ் யூ என்று நான் சொல்லமாட்டன் யூ டோன்ற் லவ் மீ என்று சொல்லத்தான் ஓடிவந்தன். இந்தக் கொப்பியில் உள்ளதைக் கொஞ்சம் திருத்தித் தாங்கோ." கொடுத்த வேகத்தில் அவள் சிட்டாகப் பறந்தாள். சிவராசு மாஸ்டர் கொப்பியை அவசரப்பட்டுத் திறந்தார். அதில் சந்தன வாடையடித்தது. புத்தம் புதிய கொப்பி.

மாஸ்டர்

நான் உங்களைக் கண்டது முதல் நீங்கள் தான் என் கணவர் என்று தீர்த்துவிட்டேன். உங்கள் தீர்ப்பு? மாஸ்டர் பிளீஸ் தீர்ப்புக்களைத் திருத்திவிடாதீர்கள்.

- லலிதினி

சிவராசு மாஸ்டரின் மேனி சிலிர்த்தது. பெயரைப்போல் புதுமைப் பெண் இவள். நினைத்தவர் பேனாவை எடுத்து அதனடியில் "தீர்ப்புக்களைத் திருத்த மாட்டேன். நான் உன்பக்கம் திரும்பிவிட்டேன்." என்று எழுதிவிட்டு பஸ் தரிப்பை நோக்கி நடந்தார்.

நாட்கள் பல நகர்ந்தன.

சிவராசு மாஸ்டர் - லலிதினியின் கடிதங்களும், சந்திப்புகளும் காதலாக மாறிக் கலியாணத்துக்காகக் கால் கடுக்க நின்றது.

"ஆத்தா" சிவராசுவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தாள் பூவாயி. "வாப்பா சிவராசு. இன்னிக்கி ஒன் பொறந்த நாளு. கோழிக் கொழம்பு வைச்சிருக்கேன். போய்ச்சாப்பிடு. ஒன் தங்கச்சி தவந்தான் நெனைவு காட்டிரிச்சி"

சிவராசு நெகிழ்ந்து போனான். "இன்னிக்கி நல்லநாளு. நெனச்சதைக் கேக்கணும்" அவன் வாய் முணுமுணுத்தது.

"சிவராசு என்ன ரோசன?" பூவாயி மகனின் தலையைத் தடவினாள்.

"ஆத்தா ஒண்ணு சொல்லணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுப்பா"

"ரவுண்ல படிக்கிற ஒருபொண்ணு என்னக் கட்டிக்க ஆசைப்படுது"

"ஒனக்கு இதில பிடிப்பில்லையாக்கும்."

"இருக்கு இருக்கு" சிவராசு அவசரப்பட்டான். பூவாயி வாயில் வெற்றிலைச்சாறு வடியச் சிரித்து விட்டாள். "நீ எதுக்கு ரோசிக்கிறே. எப்படியோ நா ஒன்ன மாஸ்டராக்கிப்புட்டன். நீ டவுணுக்குப் போகாம நம்ம தோட்டத்துப் புள்ளகளைப் படிப்பிச்சி ஆளாக்கோணும் எண்டுதான் நீ புறியப்பட்டா. நாம தோட்டத்துல பொறந்து வளந்தவங்க. ஒசத்தியான சம்பந்தம் எப்படியாகுதோ? அதுதான்... பொண்ணு எப்படி?" பூவாயி தனக்குப்பட்டதைச் சொன்னாள்.

"ஆத்தா அந்தப் பொண்ணு நல்லவ. சொத்துக்குக் கொறைச்சல் இல்ல. அவங்க வீட்ல சம்மதம். தங்கச்சிய வைச்சிட்டு..." சிவராசு கவலையைக் காட்டினான்.

"சிவராசு இந்தக் கூடையும் கொழுந்தும் இருக்கிறப்ப தவமணியைப் பத்தி ரோசிக்காத." பூவாயி உறுதியுடன் சொன்னாள்.

"ஆத்தா நீ வேலையை உட்டிடு. நாம ரவுணில் ஒன்னாயிருப்பம். நா எல்லாம் பாத்துக்குவன்"

"வேணாஞ்சாமி. அதைமட்டும் சொல்லாத. நா ஒதுங்கிக்கிறன். நீ டவுணுக்குப் போயி ஒன் பொண்டாட்டியோட நல்லாரு. தவமணியை நா பாத்துக்குவன்." பூவாயி பாசத்துடன் வார்த்தைகளை வரைந்தாள். சிவராசுவின் கண்களில் ஈரம் கசிந்தது.

சிவராசு லலிதினியின் திருமணம் நகரத்தில் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. தோட்டப் பாடசாலையிலிருந்து நகரப் பாடசாலை ஒன்றிற்கு இடமாற்றம் பெற்றுவிட்டான் சிவராசு.

லலிதினியின் வீட்டில் வாழ்க்கை இனிதே தொடங்கிற்று. சிவராசுவின் மனம் தோட்டம், லயம், ஆத்தா, தங்கை என்ற உறவுகளோடு வளையவந்தது. வாரம் ஒருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்துக்குப் போய் உறவாட விரும்பினான். லலிதினியின் வெறுப்பு முதன் முறையாகக் கிளம்பியது.

"இந்தா பாருங்க. கலியாணத்துக்கப்புறம் தோட்டம், ஆத்தா எண்டு திரியிறத நா விரும்பல. நமக்கெண்டு ஒரு ஸ்ரேற்றஸ் இருக்கு." லலிதினியின் கோபத்தில் வார்த்தைகள் வெடித்தது.

"லலி நா தோட்டத்தில் பொறந்தவன். லயத்தில வளந்தவன். என் ஆத்தா கிள்ளின கொழுந்தில கிடைச்சதுதான் இந்த மாஸ்டர் உத்தியோகம். என் ஆத்தா பெரிசு. தங்கச்சி பெரிசு. தோட்டம் லயம் எல்லாமே நான் தொட்டுக் கும்பிட வேண்டிய தெய்வங்கள். என்ன எவ்வளவு லேசா உனக்குத் தாரைவாத்தாங்க. நான் எல்லாத்தையும் எல்லாரையும் நேசிக்கிறேன். எப்பிடி மறக்க முடியும்?" சிவராசு படபடத்தான்.

"அப்போ என்ன மறந்திடுங்க" அந்தச் சிரிப்பு சூறாவளியாகியது. சிவராசு அதிர்ந்து போனான். லலிதினி தொடர்ந்தாள். "உங்க லயம், ஆத்தா, கூடை, கொழுந்து சீ... நினைச்சாலே வயித்தக் குமட்டுது. அந்தப் பக்கம் நா தலைவச்சுக்கூடப் படுக்கமாட்டன். டிஸ்கிறேஸ்."

"நா அவங்க புள்ள. என் ஆத்தா போட்ட பிச்சைதான் இந்த மாஸ்டர் வேலை." சிவராசு கத்தினான்.

"அது கலியாணத்துக்கு முன். இப்ப நீங்க என் புருஷன்."

சிவராசுவுக்கு வேர்வை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை பெருக்கெடுத்தது.

"லலி, தயவுசெய்து நான் சொல்வதைக் கேள்." சிவராசு பரிதாபமாகச் சொன்னான்.

"மாட்டேன். உங்களுக்கு நான் வேணுமா? அந்தப் பட்டிக்காட்டுத் தோட்டம் வேணுமா? முடிவு உங்கட கையில" லலிதினியின் வார்த்தைகள் வெட்டொன்று துண்டு இரண்டாய்த் தெறித்து விழுந்தது.

வெல்லமென வாழ்வை நம்பிய சிவராசு கல்லாக மாறினான். அவன் போட்ட மூன்று முடிச்சுகள் அவிழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITHDRAWN
PUBLIC LIBRARY
COLOMBO
DATE: 2016/2017

PUBLIC LIBRARY
11 OCT 1999
COLOMBO 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரு சிறு அறிமுகம்

"சிறு வயதில் இருந்தே எனக்குப் பேச்சிலும் எழுத்திலும் இயற்கையான ஓர் ஆர்வம் இருந்தது. தமிழ்மொழியை நன்கு கற்றுச் சிறப்பெய்த வேண்டும் என்ற ஆவல் எனக்குப் பிறந்தது; வளர்ந்தது. வாசிப்பதும் யோசிப்பதுமே என் பொழுதுபோக்கு".

இவ்வாறு கூறுபவர் வேறு யாருமல்ல. இலக்கிய உலகில் தடம் பதித்து பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள எழுத்தாளர் ரூபராணி ஜோசப். அண்மையில் தான் அவருக்கு சாஹித்திய அகாடமி பரிசும் கிடைத்தது.

ரூபராணி ஜோசப் ஒரு இலக்கிய வாதியாக மாத்திரமல்ல, எழுத்தாளராக, நாடக நடிகையாக, நாடகாசிரியராக, இயக்குநராக, சிறந்த பேச்சாளராக, ஒரு சமூக சேவகியாக பல்வேறு துறைகளுக்கான திறமைகளை தன்னகத்தே கொண்டவராவார். பல்வேறு திறமைகள் காரணமாக சொல்லின் செல்வி, இலக்கியச்செல்வி, கலையரசி போன்ற பட்டங்களுக்கும் உரித்துடையவராக இருக்கின்றார்.

கண்டி நல்லாயன் பெண்கள் கல்லூரியில் கால் நூற்றாண்டுக்கு மேலாக ஆசிரியையாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற இவர் சமூகத்துக்கான பணியில் தொடர்ந்தும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றார். மலையகத்தின் பல்வேறு இடங்களிலுமுள்ள தோட்டப் புறங்களில் அம் மக்களுக்காக அவராற்றிய உரைகள், லயத்துக் காம்பறாக்களில் அவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள் ரூபராணி ஜோசப்பின் பொழுதுபோக்காக இருந்த உண்மையை மலையகம் மறந்துவிட முடியாது.

மட்டுநகரில் பிறந்த இவரை மலையகம் தனது பிள்ளைகளில் ஒருவராகத் தத்தெடுத்துக் கொண்டுவிட்டது. அதற் கேற்றாற் போல் அவர் மலையக மண்ணையும் அங்கு வாழ்கின்ற மண்ணின் மக்களையும் நேசிக்கின்றார். இந்த நேசிப்பும் பணியும் தொடரும் அதே வேளையில், 'மலையக மக்களுக்குப் பணி செய்ய நான் மீண்டும் பிறக்க வேண்டும். அதுவும் மலையகத்தில் பிறக்க வேண்டும்' என்றும் தனது உள்ளக் கிடக்கையைத் தெரிவித்துள்ளார்.

பிறரில் அன்புகாட்டுபவராக, வாழ்க்கையில் நேர்மையாளராக, மக்களை, மனித நேயத்தை நேசிப்பவராக அன்பை ஆதரவை அள்ளிச் சொரியும் அம்மாவாக எம்மத்தியில் மிகச் சுறுசுறுப்புடன் உலாவித் திரியும் அவரின் பல்துறைப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

வி.தேவராஜ்

ஆசிரியர், வீரகேசரி ஞாயிறு இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org